Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

நவம்பர் 08 - 14, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 987

## திவி நெகும சர்ச்சை;

## சமுர்த்தி பணியாளர்களின் எதிர்காலம்?

## அனல் பறக்கும் அமெரிக்காவின் எதிர்ப்பு!

## சிக்குமா இலங்கை?



## வங்கக் கடலில் கிட்டுவின் இறுதிப் பயணம்



## ஆன்மீகம்

### தெய்வாம்ச பாகங்கள்

சிவலோகத்தில் சிவபெருமானது சந்நிதியில் இடப வாகனமாக வீற்றிருப்பது பசுவாகும். இப்பசுவின் பக்கத்தில் நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை எனும் ஐந்து வகையான பசுக்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்பசுக்களின் ஒவ்வொரு உடற்பாகங்களிலும் தெய்வத்தன்மை உள்ளன. அவையாவன-

கொம்பின் அடியில் பிரம்ம விஷ்ணுக்கள், கொம்பின் நுனியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும், சிரத்தில் சிவன், நடு நெற்றியில் உமாதேவி, மேல் நாசியில் முருகக் கடவுள், உள் நாசியில் நாகேசர், இருகாதுகளிலும் அச்சுவினி தேவர், இரு கண்களிலும் சூரியர் சந்திரர், பல்லில் வாயு, நாவில் வருணன், ஊங்காரத்தில் சரஸ்வதி, இருதயத்தில் இயமன்.

அத்தோடு, உதட்டில் உதய அஸ்தமன சந்திகள், கழுத்தில் இந்திரன், மார்பில் சாத்தியர், முழந்தாள்களில் மருத்துவர், முதுகில் உருத்திரன், சலத்தில் கங்கை, சாணத்தில் யமுனை, உரோமத்தில் முனிவர்கள் என்பனவாம்.

-அனந்த நாராயணன், கைவேலி.

### தீவினை புரிவோர்

ஒவ்வொரு மனிதரும் தாம் செய்யும் ஒவ்வொரு செயல்களுக்கும் ஒவ்வொரு பலன் உண்டு என்பதை மறந்து செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பிரதிபலன் கருதாத நல்ல பல காரியங்களுக்கு கர்த்தரால் என்றைக்குமே ஆசீர்வாதமும், கிருபையும் உண்டு. பலனை எதிர்பார்த்து ஒரு செயலைச் செய்பவருக்கு சில வேளைகளில் அப்பலன் கிடைக்காமல் போகலாம்.

எந்தவொரு தீமையான செயல்களைப் புரிவோருக்கு எப்படியும் அத்தீமைக்கான பிரதிபலன் கிடைத்தே ஆகிறது. அதில் இருந்து எவரும் தப்ப முடியாது என்பது நிதர்சனமாகிறது. தீமையான செயல்களைப் புரிந்துவிட்டு அதற்கு பிரதியுபகாரமாக நல்ல பலனைப் பெறமுடியாது. தீமையின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அவையனைத்தும் ஒட்டுமொத்தமாக உருப்பெற்று அத்தீயவரின் கரங்களையே போய்ச் சேருகின்றது.

"தீச்செயல் புரிவோருக்கு ஐயோ! தீமை அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்களின் கைகள் செய்த தீவினைகள் அனைத்தும் அவர்கள் மேலேயே விழும் (எசாயா -3:11)" என எசாயா தீர்க்க தரிசனமாக உரைப்பது என்றென்றும் நிலையாகவே இருந்து வருகிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

### 'தௌபாச்' செய்து அல்லாஹ்வின்பால் மீளுங்கள்

இஸ்லாத்தின் சக்கரம் சழன்று கொண்டிருக்கிறது. நீங்களும் அல்குர் ஆன் கூறும் திசையில் சுழல்வதில் கவனமாக இருந்து விழிப்புடன் செயல்படுங்கள்.

உங்கள் சமுதாயத்திலிருந்து சிற்றின்ப வேட்கை, அற்பத்தனங்கள், பெண்ணாதிக்கம், துர்க்குணங்கள் ஆகியவற்றை களைந்தெறியுங்கள். உங்களுடைய ஒற்றுமைப் பலத்தைத் தகர்க்க முடியாததாக்கிக்கொண்டு அதன் மூலம் தீமைகளையும், விஷமங்களையும் வேரோடு வெட்டிச்சாய்த்து சகோரத்துவ சமுதாயத்தை உருவாக்குங்கள்.

எந்தத் தீங்கும் உங்களை வந்தடைவதெல்லாம் உங்கள் கரங்கள் தேடிக்கொண்ட தீயவினையின் காரணமாகவேதான். ஆயினும் அவைகளில் அநேகவற்றை அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். (அஷ்-ஷுரா-30)

இத்தீங்குகளில் இருந்து நீங்கள் மீளுவதற்கான பரிகாரத்தையும் அல் குர் ஆன் பின்வருமாறு கூறுகிறது.

விசுவாசிகளே! நீங்கள் விமோசனமடைவதற்கு அனைவரும் 'தௌபாச்' (பாவமன்னிப்பு) செய்து அல்லாஹ்வின்பால் மீளுங்கள். (அல்குர்ஆன்)

எம்.சீ. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 984



பாராட்டுக்குரியது

### பிஞ்சு நெஞ்சம்

நாம் ஒரே வயிற்றில்
ஒன்றாகப் பிறந்திருந்தும்
என்னை ஓரந்தள்ளி
நீம் இருவர் மட்டும்
பாசத்தில் கொஞ்சுவது
நியாயமா?
தப்பென்ன செய்தேன்?
என் பிஞ்சு நெஞ்சம்
வெஞ்சினம் கொள்ளுதே!

V.A.ஜெஹானஸ்,
மட்டக்களப்பு.

### செல்ல முத்தம்

இவர்கள்
எம் நாட்டுப்
பிள்ளைகளென்றால்
கன்னத்தில் முத்தமிடும் -அது
இவ்விதமிருந்தால்
கன்னத்தில்
கிள்ளு விழும்-இது
வெள்ளையரின்
ஜொள்ளுப் பிள்ளைகளின்
செல்ல(ம்)
முத்தம்!

பாண்டியூர்
பொன் நவநீதன்

### மட்டில்லாப் பாசம்

ஒட்டிப் பிறக்கவில்லை;
கூடப்பிறந்தவர்கள்!
சட்டை இருவருக்கு
கட்டைக் கால்சட்டை
ஒருவருக்கு-என்றால்
பெட்டை எத்தனை;
மட்டில்லாப் பாசம்
மடை திறக்கும்;
கொஞ்சுக் கொள்வோம்!

கவிஞர் பாலி- வண் வடமேக்கு.



### பிளவு

ஒரு குழந்தையின்
சிறு முத்தத்தால்
மற்றொரு குழந்தைக்கு
முகம் சுழிப்பு.
பேரினம் தரும்
பதவி முத்தங்களால்
சிற்றினங்களுக்குள்
கட்சிப் பிளவு.

அ.சந்தியாகோ,
கண்டி.





### அற்புதன் மறையவில்லை!

முரசின் நீண்ட நாள் வாசகி என்பதில் பெருமையடைகின்றேன். அற்புதன் காலம் தொட்டு இன்றுவரை எனது பயணம் தொடர்கின்றது. அற்புதராஜா மறைந்தாலும் அவரது நினைவலைகளைச் சுமந்த வண்ணமே உள்ளேன். ஏனெனில் முரசில் வெளியாகிய எல்லா ஆக்கங்களும் என்னை மட்டுமல்ல எல்லா நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. இன்றும் எம்மனங்களில் நிறைந்தே இருக்கின்றார்.

எஸ்.சங்கவி, நுவரெலியா.

## கவிதைப் போட்டி இல 987



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.11.2012

கவிதைப் போட்டி இல. 987 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அன்பு

ஒருவருக்கொருவர்
முத்தமிடும் இந்தப்
பிஞ்சுகளின்
தூய்மையான
அன்பைக் கண்டு
நான்
மெய் சிலிர்த்து
நிற்கிறேன்.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.



### இனிக்கும் முத்தம்

"வஞ்சகமற்ற
பிஞ்சுகள்
வாய்களோடு
கொஞ்சுவது
வாலிபர்களுக்கு
மட்டுமல்ல;
வயோதிபர்களுக்கும்
இனிக்கக் கூடிய
ஒன்று!"

நா.ஜெயபாலன்,
பிபிலை.

## உங்கள் பக்கம்

### அவசரமான வேண்டுகோள்

சில மாதங்களுக்கு முன்னர் மெனிக் பாம் போன்ற நலன்புரி நிலையங்களில் இருந்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு போன்ற இடங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தொடரும் அடை மழையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் மீள்குடியேறுவதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமல் குறித்த பிரதேசங்களுக்குக் கொண்டு சென்று இறக்கப்பட்டமையினால் வெறும் தரப்பாள்களுக்குள்ளேயே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

பாதுகாப்பான சிறிய வீடொன்று சுயமுயற்சியினால் அமைக்கப்பட்டால் வீட்டுத்திட்டம் போன்ற உதவித்திட்டங்கள் கிடைப்பதில் இழுபறி நிலை ஏற்படும் என பரவிவருகின்ற கதைகளினால் வசதியுள்ளவர்களும் அதுபற்றி முயற்சிக்காமல் தரப்பாளுக்குள்ளேயே இருந்துவிட்டனர்.


இப்பொழுது வீசுகின்ற காற்றில் தரப்பாள் தூக்கிய எறியப்படுகின்றது. நிலமோ வெள்ளக் காடாய் மிதக்கின்றது. ஆனால் இவர்களை அங்கு மீள் குடியேற்றிய அதிகாரிகள் எவரும் இதுவரை அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. சில தனியார் நிறுவனங்கள் உதவுவதான செய்திகள் வெளியாகின்ற போதும் அவையும் இதுவரையும் அந்த மக்களைச் சென்றடையவில்லை.

எனவே, வலியின்மேல் வலிகளைச் சுமந்து எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்போடு தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கும் மக்களின்மீது இயற்கை கட்டவிழ்த்து விட்டிருக்கும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் இருந்து அவர்களைக் காக்க உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அவசியமான வேண்டுகோளை அவசரமாக முன்வைக்கின்றேன்.

எம்.பீதாம்பரம்,
புதுக்குடியிருப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188

## வாசகர் சாலை



### என்னைக் கவர்ந்தவை!

இனிய முரசே!

உனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பல்லாயிரம் விழிகளில் ஒன்று எனது விழி.

நீ தாங்கி வரும் அனைத்தும் அம்சம். அதிலும் என்னை மிகவும் கவர்ந்தவை அரசியல் கட்டுரைகள், சினி விசிட், உலகில் நடக்கும் விறுவிறுப்பான சம்பவங்கள் பற்றிய விவரிப்பு என்பவை மிகவும் அருமை. தொடரட்டும் உன் பணி.

ஆர்.மிதுஷிகன்–கண்டி.

உலாவரும் தினமுரசே!

காலம் மாறலாம், பழகும் மனிதர்கள் மாறலாம். ஆனால் என் இதயத்தின் தேங்கி நிற்கும் உணர்வுகள் மட்டும் என்றும் மாறாது. உன்னை ஒருமுறை கைகளில் ஏந்தி கண்களில் தவழ விடும் அனைவரையும் பார்க்கப் பார்க்க தூண்டும் அம்சங்கள் உன்னுடைய ஆக்கங்கள்.

அதுசரி, யார் அந்தக் கந்தசாமி? ஒருமுறை அவரது புகைப்படத்தைப் பிரசுரிப்பீர்களா?

கே. திவ்யா, மன்னார்.

### தொடரட்டும் உன் பணி

அன்பு முரசே!

நீ தாங்கிவரும் அனைத்தும் என் மனதைக் கவர்ந்தது. தொடர்கதைகள் அசத்துகின்றன. லேடீஸ் ஸ்பெஷல் தொகுத்துத் தரும் விடயங்கள் ஆக்கபூர்வமானதாகவும், நடைமுறை வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவாகவும் இருக்கின்றது.

அந்தரங்கப் பகுதியில் வாழ்வில் அறிந்துகொள்ள முடியாமல் தவிக்கின்ற பல சமாச்சாரங்களுக்கு தெளிவான பதில் வந்து கிடைக்கின்றது. தொடரட்டும் உன்பணி!

ப.பிரதீபன் - கொழும்பு.

# மாதகலில் மீள்குடியேறிய மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



மாதகல் மேற்குப் பகுதியில் மீள் குடியேறிவரும் மக்களது அடிப் படைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் குறித்த பகுதிக்குச் சென்ற பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம்மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவை களைக் கேட்டறிந்ததுடன் அவற் றைத் தீர்த்து வைப்பதற்கான உறுதி மொழிகளையும் வழங்கியுள் ளார்.

# லிந்துலை தெப்பக்குளம் உடைப்பு; பிரதேச மக்களுக்கு பேரிழப்பு

லிந்துலை, கவுலினா தோட்டத்திலுள்ள தெப்பக்குளம் உடைப்பெடுத்து நீர் வெளியேறியதால், இத்தெப்பக்குளத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள பெரும்பாலான பயிர்ச்செய்கை பாதிப்படைந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தெப்பக்குளத்தின் உடைப்புப் பகுதியைச் சீர்செய்வதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவுள்ளபோதிலும், தெப்பக்குளம் உடைப்பெடுத்ததால் அப்பகுதியிலுள்ள பயிர்ச்செய்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன. அப்பகுதியிலுள்ள தேயிலை மடுவத்தில் வெள்ளநீர் புதுந்துள்ளதால், தேயிலை பறிக்கும் கொழுந்துக் கூடைகளும் வெள்ளத்தில் அள்ளுண்டுள்ளன. இது தொடர்பில் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அறிகை சமர்ப்பிதது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை கிராமசேவகரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக

# அவுஸ்ரேலியா சென்றவர்கள் நாடு திரும்புவதில் ஆர்வம்!

## புகலிடக்கோரிக்கை கிடைப்பதில் உள்ள நம்பிக்கையீனமே காரணமாம்

**அண்மைக்காலமாக சட்டவிரோத கடல் பிரயாணங்களை மேற்கொண்டு அவுஸ்ரேலிய செல்ல முயன்றவர்கள் நாவுறுத் தீவில் தங்கவைக்கப் படுகின்றனர். குறித்த தீவில் வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அகதி அந்தஸ்து பெறுவதற்கு தகுதியானவர்கள் எனத் தீர்மானிக்கப் படுபவர்களை மட்டுமே நாட்டுக்குள் அனுமதிக்க அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித் துள்ளது.**

ஆனால், விசாரணைக்கான கால எல்லை வரை யறுக்கப்படாத அதேவேளை எதிர்பார்த்த வசதிகளும் குறித்த தீவில் காணப்படாமையினால் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் மேலும் பல இலங் கையர்கள் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித் திருப்பதாக அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக் கின்றன.

11 இலங்கையர்கள் தமது புகலிடக் கோரிக்கை தொடர்பில் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்ப தில்லையெனத் தீர்மானித்திருப்பதுடன், சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல அவர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அச்செய்திகள் குறிப்பிடுகின்றன.

சட்டவிரோத படகுகள்மூலம் அவுஸ் திரேலியாவுக்குச் சென்றவர்களில் 377 பேர் நாவுறு தீவுக்கு அனுப்பப்பட்டு, அங்குள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் 26 இலங்கையர் நாவுறு தீவிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கும் நிலையில், மேலும் பலர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். அதே நேரம், நாவுறு தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் 300 பேர் உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதுடன், இவர்களில் 25 பேர் மயக்க முற்று மருத்துவ சிகிச்சைக்கு உட் படுத்தப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# திவிநெகும சட்டமூலத்திற்கு மூன்றில் இரண்டு தேவை

கடந்த சில வாரங்களாக நிலவி வந்த திவிநெகும சட்ட மூலம் தொடர்பான கருத்துக்களுக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் நீதிமன்றத்தின் பரிந்துரை மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திவிநெகும சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்றும் அந்தச் சட்டமூலத்தில் உள்ள எட்டாது உறுப்புரிமையை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும என்று உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையைச் சபாநாயகரிடம் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

அதேவேளை திவிநெகுமச் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பிற்காக நாடாளுமன்றத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சல் பசீல் ராஜபக்ச அவர்களினால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பயிற்சிப் பட்டதாரிகளுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

பயிற்சிப்பட்டதாரிகள் என்ற ரீதியில் அரச துறையில் தற்போது பயிற்சி பெற்றுவரும் 51,420 பட்டதாரிகளுக்கும் அடுத்தாண்டு நிரந்தர நியமனங்கள் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

அபிவிருத்தி அதிகாரிகள் சேவை யாப்பின் பிரகாரம் இவர்களுக்கான நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. இதற்கென பயிற்சிப் பட்டதாரிகளை அமைச் சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு உள்ளீரப்பதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் மிக அதிகளவான பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் கூறமுடியும். அத்துடன் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் மக்களின் தேவைகளுக்காக தீர்வைப் பெற்றுக்கொடுத்து நாட்டின் துரித அபிவிருத்திக்காக அவர்களின் சேவைகளைப் பெற்று அரச சேவையைப் பலப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நவீன வசதிகளுடன் கட்டடத் தொகுதி

### டிசம்பரில் திறக்க ஏற்பாடு

3000 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற கட்டடத் தொகுதி டிசம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் எனத் தெரிகின்றது.

5 மாடிகளைக் கொண்ட இந்த கட்டத்தில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, சி.ரி ஸ்கான், அதிதீவிர சிகிச்சைக்கூடம் மற்றும் நோயாளிகள் தங்கியிருக்கும் வாட்டுக்கள், சத்திர சிகிச்சை நிலையங்களுடன் வைத்தியர்கள் மற்றும் தாதிமாருக்கான வசிப்பிட வசதிகளும் செய்துகொடுக்கப்படும். இங்கு புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு சகல வசதிக ளையும் கொண்ட ஒரு வைத்தியசாலையாக தரம் உயர்த்த தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இங்கு பிராணவாயுவைத் தயாரிக்கும் ஒரு நிலையமும் ஏற்படுத்தப்படுவதுடன் மின்சார வசதியை சூரியசக்தி மூலம்பெறவும் வசதிகள் செய்யப்படுகின்றது. மேலும் இங்கு புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவதனால் மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு வரும் தூர இடத்து நோயாளிகள் இனிமேல் யாழ்ப்பாண போதனா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்கான வசதிகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இந்தியா - சீனா இணைந்து செயற்பட்டால் அமைதியும் வளமும் மேம்படும்

## இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்

அணுசக்தி மூலம் 20 ஆயிரம் மெகாவோட் மின்சாரம் தயாரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், சீனப் பயணம் மேற்கொண்டுள்ளார். பீஜிங்கில் அவர், 'அமைதியின் பரிணாமும் பூமியின் வளமும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்தியாவும், சீனாவும் பழம்பெரும் நாகரிகத்தை கொண்ட நாடுகள். எனவே, இரு நாடுகளும் தொழில்நுட்பம், சமூக மேம்பாடு, இன்னும் பல துறைகளில் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் கூடி பேச வேண்டும். இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயலாற்ற பல வழிகள் உள்ளன. இதன்மூலம் அமைதியும், வளமும் மேம்படும். இந்தியா கணினி தொழில்நுட்பத்தில் வலுவாக உள்ளது. பல்வேறு பொருட்களை உருவாக்குவதில் சீனா ஸ்திரமாக உள்ளது. இரு நாடுகளின் தொழில்துட்பத் திறனும், மனிதத் திறனும் ஒன்றிணையும் போது இந்த உலகத்துக்கு தேவை யானவற்றை நாமே தயாரித்து அளிக்கமுடியும். இவ்வாறு கலாம் கூறினார்.

**குறிப்பு:**

முரசு அச்சாகும் வேகத்தில் இடையிடையே தவறுகளும் தலையைக் காட்டிவிடுகின்றது. இந்தவார முரசின் 07 ஆம் பக்கத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு 18 ஆம் பக்கம் முன்னாலே தாவி வந்துவிட்டது.

இதனால் வாசக நெஞ்சங்களின் அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

ஆ.ர்

# சிகிச்சை குளறுபடியால் பெண் மரணம்?

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டு. போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த குடும்ப பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் ஏற் பட்ட குளறுபடி காரணமாக உயிரிழந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பழுகாமத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 30 வயதுடைய சிவனே சன் சிவகலா எனும் பெண், வீட்டில் வழுக்கி விழுந்ததால் அவ ரது கை மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்ட பாரிய அடி ஏற்பட் டுள்ளது. இதனையடுத்து சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவருக்கு கை மணிக்கட்டுப் பகுதியில் சத்திரசிகிச்சை செய்யவென அழைத்துச் செல்லப்பட்ட நிலை யில் உயிரிழந்துள்ளார். சத்திரசிகிச்சையின்போது இடம்பெற்ற சில பிழையான சிகிச்சை காரணமாகவே குறித்த பெண் உயிரி ழந்திருக்கலாம் என குடும்பத்தினரால் சந்தேகம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டதுடன் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதால் விசேடமாக கொழும்பில் இருந்து பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியர்களை வரவழைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளபோதும் ஒரு சிலரின் கவலையீனங்களால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது எனத்தெரிவிக்கப்படுகிறது.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

### வாசகர்களுக்கு வணக்கம்!

## வேலியே பயிரை...!

தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் முரசின் வாசக நெஞ்சங்களோடு வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு விடயத்துக்கு வருவோம்.

வேலியே பயிரை மேயும் அவலம் இன்னும் தொடர்கின்றதா? என்ற கேள்வி மீண்டும் எழுகின்றது.

கடந்தவாரம் வன்னியில் மீள்குடியேறிய மக்களிடம் அச்சத்தை அதிகப்படுத்திய சம்பவங்களே இந்தக் கேள்விக்குக் காரணமாகும்.

ஆண் துணை இல்லாமல் இந்த பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட படைச்சிப்பாயை எதிர்கொண்ட பெண்ணிடம் காற்சட்டையைப் பறிகொடுத்து சிப்பாய் தப்பி ஓடினார் என்ற செய்தியும்,

ஆண் துணை இல்லாமல் தற்காலிக கூடாரத்தில் வசித்து வந்த 14 வயது மகளைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட இன்னொரு படைச்சிப்பாயை இளம் பெண்ணின் தாயார் கூச்சலிட்டு விரட்டிய செய்திகளும் மீளக்குடியேற்றப்பட்டதாகத் தற்காலிக கூடாரங்களில் வாழும் மக்களிடம் பாதுகாப்பு அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

யுத்தத்துக்குப் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் சர்வசாதாரணமாகவே இடம்பெற்று வருகின்றன என்றும் பொருளாதார தேவை காரணமாக இவ்வாறான சம்பவங்களுக்குப் பெண்கள் துணை போகின்றனர் என்றும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

யுத்தத்தில் கணவனை, அப்பாவை, சகோதரனை இழந்த பெண்கள் பலப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடி தனிமையில் வாழ்ந்து வருகின்றனர்.

அநேகமான தனிப்பெண்கள் இரவில் கூட்டாகச் சேர்ந்து இரவைக் கழிக்கும் நிலைமை உள்ளது.

தனிமையில் நடமாடுவதும், தங்கியிருப்பதும் பாதுகாப்பானதாக இல்லை என்ற நிலைமையே அங்கு உள்ளது.

இவ்வாறான நிலையில் சமூக பிரச்சினைகள் சாதாரணமாகவே நிகழ்பவை என்று எவரும் ஒதுங்கி விடவும் முடியாது.

பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் பொருளாதார நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டும். அவர்களின் தங்குமிடம் பாதுகாப்பானதாக அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

இதில் சமூக மற்றும் பெண்கள், சிறுவர் அமைப்புக்கள் தமது முழுமையான கவனத்தைக் காட்ட வேண்டும். யுத்தப் பாதிப்புக்களுக்கும், இழப்புக்களுக்கும் உள ரீதியான இயலாமைகளும் அந்தக் குடும்பங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. இதில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெண்களாகவே இருப்பதால் இவ்விடயம் சகோதரத்துவத்தோடு கூடிய மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் அவனும், இவனுமாகப் பிரச்சினைகளைக் கையாள முற்பட்டால் அது கலாசார, சமூக சீர்கேடுகளுக்கே இட்டுச் செல்லும்.

ஈடுசெய்ய முடியாத இழப்புக்களுக்கு முகம் கொடுத்த மக்களின் எதிர்காலம் கௌரவமானதாகவே அமைய அக்கறை எடுக்கப்படுவது அரசியலுக்கு அப்பால் அவசியமாகும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# அனல் பறக்கும் அமெரிக்காவின் எதிர்ப்பு!




**மனித** உரிமைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இலங்கை அரசு கூறும் கருத்துக்களுக்கும், இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன.

இலங்கையின் பதில்களையும் கால அவகாசம் கோரும் கோரிக்கைகளையும் சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

இவ்வாறெல்லாம் மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஜெனீவாவில் கடந்த வாரம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பூகோள கால கிரம மீளாய்வுக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, இலங்கையைக் குறிவைத்து மனித உரிமை அமைப்புக்கள் இவ்வாறான பிரச்சாரங்களை முன்னெடுத்தன.

ஐ.நா.வின் பூகோள காலக் கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கையைக் குறி வைத்து பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இலங்கையில் மனித உரிமைகளை மதிக்கும் நடவடிக்கைகள் மிகவும் கீழ் மட்டத்திலேயே இருந்தன என்றும், இப்போதும் நிலைமை அவ்வாறே உள்ளது என்பது மனித உரிமைகள் அமைப்புக்களின் குற்றச் சாட்டாகவுள்ளது.

இந்தச் குற்றச்சாட்டுக்களுக்கு வலிமை சேர்க்கும் சம்பவங்களாக இலங்கையில் தொடரும் மனிதப் படுகொலைகளும், சுதந்திரமாக நடமாட முடியாமையும், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அச்சத்துடன் வாழ்கின்ற நிலையும் உள்ளன.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் 19 ஆவது மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இராஜதந்திர ரீதியாக இலங்கையைத் தோல்வியடையச் செய்த அமெரிக்கா, தொடர்ந்தும் இலங்கை தொடர்பான தனது அதிருப்தியையே வெளிப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக சர்தேச சமூகத்திடம் இலங்கை மனித உரிமைகள், அரசியல்தீர்வு தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், அப்படி நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது இலங்கை அரச அபாயப் பொறியைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா கடுமையான தொணியில் கூறியுள்ளது.

கடந்தவாரம் 30ஆம் திகதி அமெரிக்க வெளியிட்ட அந்த அறிக்கையில் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் செயலாக்கம், மனித உரிமைகளின் மேம்பாடு என்பவற்றிலேயே இலங்கை தமது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றும், தற்போது நாட்டின் நீதித்துறை யில் மோசமான ஒரு பாதையைக் காட்டி நிற்கின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அமெரிக்காவின் இலங்கை தொடர்பான தற்போதைய நிலைப் பாட்டுக்கு வேறு காரணங்கள் இருப்பதாக இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

அதாவது, புலிப்பயங்கரவாதம் வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னணியில் இலங்கை அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளை உதாசீனம் செய்துவிட்டு, சீனாவுடனும், ஈரான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளுடன் நெருக்கடைந்து வருவதே அமெரிக்காவின் கோபத்துக்குக் காரணம் என்கின்றனர்.

அமெரிக்கா இந்தியாவுடன் நெருக்கமாக இருப்பதற்கு, சீனா தொடர்பான நிலைப்பாடும், பொருளாதார சவால்களும் காரணமாக இருக்கின்றது.

சீனாவை சமாளிக்க முடியாத பொருளாதார சவாலுக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தியாவின் உறவு காரணமாக பாகிஸ்தானை குறிவைக்கும் தேவை அமெரிக்காவுக்கு உள்ளது.

ஸ்ரேலுக்காக ஈரானோடு அமெரிக்கா கொந்தளிப்பு நிலையில் உள்ளது. இப்படி அமெரிக்காவின் பகையாளிகளுடன் இலங்கை நெருங்கியிருப்பது அமெரிக்காவுக்கு தலையிடியான விடயமாகும்.

எனவே இலங்கையைத் தனது வழியில் திசை திருப்புவதற்கு, அமெரிக்கா கையில் எடுத்திருக்கும் ஆயுதம் தான்.

அரசியல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் என்பவையாகும்.

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே, மனித உரிமைகள் அமைப்புக்களின் குற்றச்சாட்டுக்களும், உள்நாட்டிலுள்ள சில அரசியல் மற்றும் மதப்போதகர்களின் செயற்பாடுகளும் இருக்கின்றன என்பது இலங்கை அரசின் குற்றச்சாட்டாக உள்ளது.

அரசாங்கம் என்ன சொன்னாலும் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதரவை இலங்கை இழக்குமாக இருந்தால் அமெரிக்காவின் பிடி இன்னும் இறுக்கமாகிவிடும் என்ற அச்சம் இருக்கவே செய்கின்றது.

இலங்கை அரசு அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதைவிடவும், அயல்நாடான இந்தியாவின் அதிருப்தியை சரிசெய்யும் முயற்சிகளைச் சரிசெய்ய வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

ஆனால் இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் பிரசவமாகக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தையும், அதனூடான மாகாண சபை முறையையும் இல்லாதொழிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் அதுவும் அலறும் அரசின் பங்காளிகளின் கூச்சல்கள் இந்தியாவை எரிச்சலடையச் செய்துள்ளது.

இந்த நிலையில் இந்தியா சர்வதேச ரீதயில் நிரந்தர எதிராளியாகிவிடுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தியா எதிர்பார்ப்புக்களைத் தலை கீழாக்கி பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாகத் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் இந்தத் திடீர்த் திருப்பம் அமெரிக்காவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இவ்வாறு இந்தியா ஐக்கிய நாடுகளின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளதால் இலங்கை அரசு இந்தியாவுக்கு காட்டப் போகும் சமிக்ஞையை எது இருக்கப் போகின்றது.

இந்தியாவின் எதிர்பார்ப்பானது 13 ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கை அரசு நீக்காமல் அரசியல் பிரச்சினைக்குத்தீர்வொன்றைக்காண வேண்டும் என்பதாகும்.

இந்த எதிர்பார்ப்பை இலங்கை அரசு எந்தளவுக்கு நிறைவேற்றப் போகின்றது என்பது கேள்விக்குறிதான்.

மற்றொரு பக்கத்தில், 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கப் போகின்றோம். இந்தியா சர்வதேச அரங்கில் இலங்கையை ஆதரிக்காவிட்டால் இந்தியாவின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகவே இலங்கை முடிவுகளை எடுக்கும் என்ற செய்தியை வழங்கவே 13அவது திருத்தச்சட்டத்தை நீக்கப் போவதாக இலங்கை இந்தியாவை ஒரு வகையில் மிரட்டியுள்ளது என்ற பார்வைகளும் இல்லாமலில்லை.

இலங்கைக்கும் – இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் அண்மைக் காலமாகச் சீராக இல்லை என்பது வெளிப்படையாகும்.

இந்த இடைவெளியைப் பயன் படுத்திக்கொள்ள அமெரிக்கா முயற்சித்த வேளையிலேயே இந்தியா இலங்கைக்கு ஆதரவாகத் திரும்பி இருப்பது அமெரிக்காவுக்கு ஏமாற்றமாகவே இருக்கும்.

இந்தியாவின் ஆதரவு இலங்கைக்குப் பலமாக இருக்குமானால் அமெரிக்காவின் எதிர்ப்புகள் பெரிதாக இருக்கப்போவதில்லை.

சர்வதேச அரங்கில் அமெரிக்கா இலங்கையைக் குற்றவாளியாக நிறுத்த வேண்டுமாக இருந்தால் அதற்கு நிச்சயமாக இந்தியாவின் ஆதரவு தேவை.

இந்தியாவை சமாளித்துக் கொண்டு இலங்கை காய்களை நகர்த்துமாக இருந்தால் சர்வதேச அரங்கில் துணிச்சலாக தனது நியாயங்களை முன்வைக்க முடியும்.

இந்தியாவைச் சமாளிக்க வேண்டுமாக இருந்தால் இலங்கை அரசானது, 13ஆவது திருத்தச்சட்டத்தின் சுலோகத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதும், அபிவிருத்தி, மீள்கட்டுமானம் போன்றவற்றில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதும், மனித உரிமைகள் தொடர்பில் அக்கறையோடு செயற்படுவதும் என்ற இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள். நம்பிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அமெரிக்காவும் கிட்டத்தட்ட இதைத் தானே கூறுகின்றது என்பது சிலர் யோசிக்கலாம். ஆனால் அமெரிக்கா சொல்லி இவை நடந்ததாக இருப்பது, இந்தியாவுக்கு கௌரவமில்லை. ஆகவே இந்தியாவின் பங்களிப்புடன் அவை நடந்தன என்பதே பிராந்திய அரசியலில் சரியாக இருக்கும்.

இல்லாமல், இந்தியா அமெரிக்காவுடன் கை கார்த்துக் கொண்டு அமெரிக்காவின் வேலைத்திட்டத்துக்குப் பின்னால் நின்றால் இலங்கை – சீனாவுடன் நெருங்கி இந்தியாவுக்கும் – அமெரிக்காவுக்கும் எதிர்பார்க்காத செய்திகளைச் சொல்லக் கூடும். அதாவது இந்தியா இலங்கை யைத் தாமும் ஒரு பங்காளியாக இருந்து சீனாவுடன் நெருங்கிப் போகச் செய்ததாகி விடும்.

எனவே, இந்தியா பிராந்திய தேவைகளுக்கே முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த முக்கோண விளையாட்டில் இலங்கையை எந்தளவுக்கு அமெரிக்கா தனது பொறிக்குள் சிக்க வைக்க முடியும் என்று கேள்விக் குறியாகவே உள்ளது.

ஆனால் அமெரிக்கா இலங்கை அரசை நெருக்கும் போது, இந்தியாவின் அதிருப்திகளையே இலங்கை தொடர்ந்தும் சம்பாதித்துக் கொண்டு, இந்தியாவின் எதிர்பார்ப்புக்களைத் தவிடு பொடியாக்குமாக இருந்தால். முக்கியமானதும், நெருக்கடியானதுமான பொழுதில் இந்தியா இலங்கையைக் கை விட்டு விடவும் கூடும்.

அதற்கு உதாரணம் கடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக இந்தியா நின்றதாகும்.

எனவே, அமெரிக்காவின் எதிர்ப்புகள், அல்லது குற்றச் சாட்டுக்களுக்குள் சிக்காமல் இலங்கை தன்னைப் பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் இந்தியாவை சமரசம் செய்துகொள்வது அவசியமாகும்.

அதைவிடுத்து அமெரிக்காவினதும், இந்தியாவினதும் நிலைப்பாடுகளை நிராகரித்து விட்டு தொடர்ந்தும் நழுவிக் கொள்ள முடியும் என்று இலங்கை அரசு நம்புமாக இருந்தால் அது சமாளிக்க முடியாத நெருக்கடிக்குள்ளேயே இலங்கையை இழுத்துச் செல்லும்.

அமெரிக்காவின் தொடர்ச்சியான எச்சரிக்கைகளுக்கும், குற்றச் சாட்டுக்களுக்கும் இலங்கை தொடர்ந்தும் குறியாக இருப்பது நல்லதல்ல.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை சிக்குமா? அடுத்த கூட்டத்தொடரில் இலங்கை சிக்குமா? என்று நிலைமை தொடர்வது நல்லதல்ல.

பிரச்சினைகளிலிருந்து நழுவிக் கொள்வது என்பதை விடவும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைக்கண்டு, இலங்கையின் கௌரவத்தை சர்தேச அரங்கில் தூக்கி நிறுத்துவதுதான் நிரந்தரத்தேவையாகும்.இது அமெரிக்காவுக்கோ, இந்தியாவுக்காகவே இல்லை.

இலங்கையில் வாழும் மூவின மக்களின் ஐக்கிய வாழ்வுக்காகவும், இறை மீதான நேசிப்புக்காகவும் அவசியமாகும்.





நிஷி

16

# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

# வங்கக் கடலில் கிட்டுவின் இறுதிப் பயணம்

**கிட்டுவுடன் உயிரிழந்தவர்களின் பெயர் பட்டியல் வெளியிட்ட போது ஒருவரின் பெயர் வெளியிடப்படவில்லை என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.**

ஆம். அவரது பெயர் பிரபாகரன். லெப்டினென்ட் பிரபா என்று அழைப்பார்கள். இந்த பிரபா, புலிகளுக்கும், இலங்கை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற நாட்களில், கொழும்பில் சில இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்.

அதன்பின், பிரேமதாசா அரசுக்கும், புலிகளுக்கும் இடையே இருந்த டீல் முறிந்தது. அந்த நேரத்தில் பிரபாவை கொழும்பில் இருந்து வெளியே அனுப்ப வேண்டியநிலை ஏற்பட்டது. அப்படித்தான், அவர் தாய்லாந்தில் இருந்த கே.பி.யிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

சிறிது காலத்தின்பின், அவ்வரை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கும்படி புலிகளின் தலைமையிடம் இருந்து தகவல் வந்தது. அந்த வகையில், கிட்டு பயணம் செய்த கப்பலில் அவரும் பயணம் செய்திருந்தார். கிட்டுவுடன் சேர்ந்து அவரும் இறந்துபோனார்.

ஆனால், அவரின் சில நடவடிக்கைகள் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்ற காரணத்தால், அவர் இறந்ததை புலிகள் அறிவிக்கவில்லை. இதே போன்று மற்றொரு விடயமும் நடந்தது. கிட்டு சென்ற கப்பல் வெடித்துச் சிதறியபின், அந்தக் கப்பலில் செல்லாத மற்றொருவர் கொல்லப்பட்டார் என இந்திய உளவுத்துறை சில நாட்கள் நம்பிக் கொண்டிருந்தது. அதை பிற்பாடு பார்க்கலாம்.

### பயணம் ஆரம்பம்

MV Yahata கப்பல், அதன் ஊழியர்களையும், கிட்டுவையும், 9 புலிகளையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. கப்பலில் புதிதாக வாங்கப்பட்டிருந்த சட்டலைட் டெலக்ஸ் சாதனமும் இருந்தது. அது தரையில் இயங்குவதில் எந்த சிக்கலும் இருக்கவில்லை.

கப்பல் புறப்பட்ட நிமிடத்தில் இருந்து, சகல தொடர்புகளுக்கும், சட்டலைட் டெலக்ஸையே பயன்படுத்துமாறு கே.பி. கூறியிருந்தார். எக்காரணம் கொண்டும், ஐ-காம் உபகரணத்தை பயன்படுத்த வேண்டாம் எனவும் எச்சரித்திருந்தார்.

கப்பல் கப்டன் ஜெயச்சந்திரனுக்கு இந்த சட்டலைட் உபகரணத்தை உபயோகிக்க ஓரளவுக்கு தெரிந்திருந்தது.

கிட்டுவின் குழுவில் சென்ற புலிகளில், சுந்தரலிங்கம் சுந்தரவேல் என்ற பெயரைப் பார்த்திருப்பீர்கள். புலிகள் வட்டாரங்



களில் இவரை 'வேல்' என்று அழைப்பார்கள். இவரும் தொலைத் தொடர்பு சாதனங்களை இயக்குவதில் ஸ்பெஷலிஸ்ட். புலிகளின் தலைவர் பிரபாகரனால், தாய்லாந்து அனுப்பப்பட்டவர் இவர்.

இலங்கையில் இருந்து பிரபாகரனின் தகவல் தொர்டர்புகள் வெளிநாட்டுக்கு போவதும், வெளிநாட்டில் இருந்து பிரபாகரனுடன் தகவல் பரிமாற்றம் செய்வதும், தாய்லாந்தில் இருந்த 'வேல்' ஊடாகவே அந்த நாட்களில் நடைபெற்று வந்தன. இதனால், அவரும் சட்டலைட் தகவல் தொடர்பு உபகரணத்தை ஓரளவுக்கு இயக்கத் தெரிந்தவர். இவர்கள் இருவரும் சமாளிப்பார்கள் என்ற தைரியத்தில் தான், சிங்கப்பூர் பயிற்சிக்கு சென்ற மற்றைய கப்டன் வராமல், கிட்டுவின் பயணம் துவங்கியது.

### காலை வாரிய சட்டலைட்

தாய்லாந்தின் புக்கெட் துறைமுகத்தில் இருந்து கப்பல் புறப்பட்டது. கப்பல் புறப்பட்டு, சில மணி நேரத்தில், அதில் இருந்த சட்டலைட் டெலக்ஸ் இயங்கவில்லை. இங்கு மற்றொரு விடயத்தையும் சொல்லவேண்டும். இது நடைபெற்ற நாட்களில், இந்திய உளவுத்துறை றோ, தாய்லாந்தின் தெற்கு கடற்படை நகரமான புக்கெட்டில் அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. அதற்கு காரணம், புலிகளை கண்காணிப்பது அல்ல, பாகிஸ்தானின் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ. அங்கிருந்து சில இரகசிய நடவடிக்கைகளை செய்து கொண்டிருந்தது.

ஐ.எஸ்.ஐ. இரகசிய ஆயுத தளபாடங்களை அனுப்ப புக்கெட் துறைமுகத்தை பயன்படுத்திக் கொண்டிருந்ததை மணந்து பிடித்திருந்த றோ கேட்டுக் கொண்டதன்படி, அந்தமான் பகுதியில் இருந்த இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று அவ்வப்போது, புக்கெட்டுக்கு அருகே இரகசியமாக வந்து போய்க்கொண்டிருந்தது.

ஒருதடவை, இந்திய நீர்மூழ்கிக் கப்பல் புக்கெட் கடலில் நீருக்கு வெளியே தெரிந்ததை போட்டோ எடுத்து அந்த நாட்களில் வெளியிட்டிருந்தது பாங்கொங் போஸ்ட் பத்திரிகை. அதே துறைமுகத்தில் இருந்துதான், புலிகளும் இயங்கிக் கொண்டிருந்தனர்.

கிட்டு பயணம் செய்த கப்பல் நடுக் கடலுக்கு சென்றதும், அதில் எழுதப்பட்டிருந்த பெயரில் முதல் எழுத்தையும், கடைசி எழுத்தையும் அதில் இருந்தவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டபடி அழித்தார்கள். இப்போது கப்பலின் பெயர் AHAT என்று மாறியது.

சட்டலைட் டெலக்ஸ் வேலை செய்யாத நிலையில், YESU-747 தொலைத் தொடர்பு சாதனத்தின் மூலம் கப்பலில் இருந்து, கே.பி.-யை தொடர்பு கொண்டார்கள். அந்தத் தொடர்புக்காக புலிகள் உபயோகித்தது, வர்த்தகக் கப்பல்கள் வழமையாக உபயோகிக்கும் அலைவரிசையை அல்ல.

### மோப்பம் பிடித்தது நீர்மூழ்கி

இந்த புதிய அலைவரிசையில் மெசேஜ் போவதை, கண்டுபிடித்தது. அந்த ஏரியாவில் இருந்த இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல். தமது கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தகவல் சொல்லப்பட்டது. மேலிடத்து உத்தரவுக்கு அமைய, நீருக்கு அடியே, கிட்டு பயணித்த AHAT கப்பலை பின்தொடரத் துவங்கியது.

அதாவது நீருக்கு மேலே AHAT கப்பல் இலங்கையை நோக்கி சென்று கொண்டிருந்தது. அக்கப்பலில் உள்ளவர்களுக்கு தெரியாமல், நீருக்கு அடியே இந்திய நீர்மூழ்கிக் கப்பல் பின் தொடர்ந்தது. கப்பலில் கிட்டு வரும் விபரம், இந்திய உளவுத் துறைக்கு துல்லியமாக தெரிந்திருந்த காரணத்தாலேயே, கப்பலை பின் தொடர்ந்து சென்று, மடக்கினார்கள்.

அந்தக் கப்பலில் பயணித்து, தற்போதும் உயிருடன் உள்ள கப்பல் சிப்பந்தி ஒருவரின் தகவலின்படி, இரவு நேரங்களில் கப்பலுக்கு பின் தொலைவில் மலைபோல ஒரு உருவம் தெரிந்திருக்கிறது. அதிகாலையில் அந்த உருவம் மறைந்து போயிருக்கிறது. பின்னாட்களில் யோசித்துப் பார்த்தபோதுதான், அது புலிகளின் கப்பலை பின் தொடர்ந்த இந்திய நீர்மூழ்கிக் கப்பல் என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

### தகவல் கசிந்தது எப்படி?

இப்போது மில்லியன் டொலர் கேள்வி உள்ளது. அதாவது, கப்பலில் கிட்டு இருக்கிறார் என்ற விபரம் இந்திய உளவுத்துறைக்கு, கப்பலில் இருந்து அனுப்பப்பட்ட மெசேஜ்களில் இருந்து மட்டும்தானா தெரியவந்தது? வேறு வழியில் இந்திய உளவுத்துறைக்கு தகவல் கிடைக்கவே இல்லையா?

இது ஒரு பெரிய சந்தேகத்துக்குரிய கேள்வி. கப்பலில் இருந்து தொலைத் தொடர்பு கருவியை இயக்கியவர்கள், கிட்டுவின் பெயரை வெளிப்படையாகச் சொல்லவில்லை. கோர்ட் வேர்ட்களில் கூறப்பட்ட சில விபரங்களை, இந்திய நீர்மூழ்கிக் கப்பலில் ஒட்டுக் கேட்டு' உடனடியாக டீ-கோடிங் செய்து' கப்பலில் கிட்டு செல்வதை கென்பேர்ம் செய்து கொண்டு- அதன்பின், பின்தொடர்வது என்ற முடிவை எடுத்தது என்று சொன்னால், அது அதீத கற்பனையாகத்தான் இருக்க வேண்டும்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கிட்டு தாய்லாந்தில் இருந்து ஒரு கப்பலில் இலங்கை செல்லப்போகும் விடயம், இந்திய உளவுத்துறைக்கு முன்கூட்டியே தெரியும் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

அப்படி எடுத்துக் கொண்டால், அந்தமான் கடல் தளத்தில் இருந்து, நீர்மூழ்கிக் கப்பல், தாய்லாந்தின் புக்கெட் கடலோரம் நடமாடுவது சாத்தியம். கிட்டு செல்லும் கப்பலை பின்தொடர்வதற்காகவே நீர்மூழ்கிக் கப்பல் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதும் சாத்தியம். அப்படி இருந்தால்தான், கிட்டு சென்ற கப்பலில் இருந்து சிக்னல்களை இந்திய நீர்மூழ்கிக் கப்பல் பிக் பண்ணியவுடன், கப்பலைப் பின் தொடர்வது சாத்தியமாகும்.

அப்படியானால், "கப்பலில் கிட்டு உள்ள விடயம், இந்திய உளவுத் துறைக்கு வேறு விதத்தில் கிடைத்ததா?"

அதற்கும் ஒரு சான்ஸ் உள்ளது. அந்த தகவல் புலிகள் இயக்கத்துக்கு உள்ளே இருந்தே போயிருக்கலாம் என்பதற்கும் சான்ஸ் உள்ளது.

(தொடரும்...)

---

**"உண்மையில் ஆறு வருடங்களுக்கு மேலாக அகதிமுகாமில் நிலமின்றி அவலமுறும் எமது மக்களின் துன்பத்தையே பதிவில் பதிவுசெய்தேன். அவலம் விருதுக்கு உரியதல்ல. அது தீர்க்கப்பட வேண்டியது என்பதை நான் அதிகம் விரும்புகின்றேன்."**

# 'நிலம் பிரிந்த கவிஞன்'

## உணர்வுகள் பகிரப்படுகின்றன

**தமிழ்** மக்களின் பாரம்பரிய பிரதேசமான சம்பூர் மண் அம்மக்களிடம் இருந்து பிரிக்கப்பட்டமை பற்றி எல்லோரும் மறந்துவிட்டனர். அல்லது மறந்தது போன்று மௌனம் காக்கின்றனர்.

ஆனால் அந்நிலத்தில் இருந்து பிரிக்கப்பட்ட சுஜந்தனுக்கு அழுத்திப் பேசுவதற்கு அந்நிலத்தை விட வேறெதுவும் இல்லை. இதனை 'நிலம் பிரிந்தவனின் கவிதை' மிக அழகாகச் சித்தரிக்கின்றது. இது கவிதை அல்ல –நிலம் பறிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் இலக்கியப் பதிவு என்றால் அது மிகையல்ல.

இளம் கவிஞரான ப.சுஜந்தனின் பறிக்கப்பட்ட நிலத்தை 2011இல் இலங்கை சென்றிருந்தபோது பார்த்தேன். பசுமையான வயல்வெளிகள் கொண்ட வளம் கொழிக்கும் அம்மண்ணைச் சுற்றி முள்வேலி இடப்பட்டு உள்ளது. அம்மண்ணின் மக்கள் முள்வேலிக்கு வெளியே கூடாரங்களில் என்றாவது ஒரு நாள் தாங்கள் தமது சொந்த மண்ணுக்கு திரும்புவோம் என்ற சிறுநம்பிக்கையுடன் காத்திருந்தனர். 2012இல் மீண்டும் சென்றிருந்தபோது அந்த நம்பிக்கை இன்னும் தளர்ந்து இருந்தது.

மார்ச் 17, 2012இல் 'நிலம் பிரிந்தவனின் கவிதை' நூலுக்கு சாகித்திய மண்டல விருது கிடைக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதற்குக் காரணம் கவிதையின் தரம் அல்ல அது பேசுகின்ற அரசியல். இக்கவிதை நூல் அதன் கவித்துவத்துக்கும் அதன்



அரசியலுக்குமாக் காலத்தால் பேசப்படும் என்பதனை அன்றே பலரும் சுட்டிக்காட்டி இருந்தனர். அது இன்று இன்னும் உறுதியாகி உள்ளது.

'நிலம் பிரிந்தவனின் கவிதை' நூல் அறிமுக நிகழ்வு ஒன்று வெகுவிரைவில் லண்டனிலும் பாரிஸிலும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது என்பதனைக் கூறிக்கொண்டு கவிஞர் ப.சுஜந்தன் உடனான நேர்காணலுக்குள் செல்வோம்.

(நேர்காணல் 22 பக்கம் பார்க்க )



# நிலமெல்லாம் இரத்தம் 26

பா.ராகவன்

**என்னதான்** இருக்கிறது உங்கள் இஸ்லாத்தில் என்று விரும்பிக் கேட்டவர்களிடம் மட்டுமே முகம்மது விளக்கம் அளித்தார். குர் ஆனிலிருந்து சில வரிகளை ஓதிக் காண்பித் தார். நாலு வார்த்தை பேசி அவமானப்படுத்தலாம் என்று வந்தவர்கள், முகம்மது ஓதிக் காண்பித்ததும் பேச்சிழந்து இஸ்லாத்தில் இணைந்து விடு வார்கள். இது மிகையல்ல. ஆர்ம்ப காலங்களில் ஏராளமான முறை இத்தகைய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. முகம்மதே இப்படி இருக்கையில் அவரது தோழர்கள் வேறு எப்படி இருப்பார்கள்?

ஆயினும் இஸ்லாம் பரவத் தொடங்கி மூன்றாண்டுகள் நிறைவடைந்தபோது, அம்மதத்தில் இருந்தோரின் மொத்த எண்ணிக்கை வெறும் நாற்பது பேர் மட்டுமே. நான்காவது ஆண்டின் தொடக் கத்தில்தான் பகிரங்கமாகப் பிரசாரம் செய்யலாம் என்கிற இறைஉத்தரவு முகம்மதுவுக்கு வந்தது. அதுவுமேகூட "உங்கள் உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்து அழைப்புவிடுங்கள்" என்கின்ற உத்தரவுதான்.

முதல்முதலாக இஸ்லாம் என்றொரு மார்க்கம் குறித்த வெளிப்படையான அறிவிப்பும் அதில் இணைய வரும்படியான அழைப்பும் அந்த நான்காவது ஆண்டில்தான் முகம்மது நபியால் செய்யப்பட்டது.

இஸ்லாம் என்கின்ற பதம் முதல் முதலில் பாலஸ்தீனைச் சென்றடைந்ததும் அப்போதுதான்.

கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரேபிய வர்த்தகர்களிடம் என்னென்ன இருந்தன என்று நகைச்சுவையாக ஒரு பட்டியல் போடுவார்கள். அவர்களிடம் ஏராளமான ஒட்டகங்கள் இருந்தன. அதைக் காட்டிலும் அதிகமாக அடிமைகள் இருந்தார்கள். அடிமைகளைக் காட்டிலும் அதிகமாக வைப்பாட்டிகள் இருந்தார்கள் என்று அப்பட்டியல் முடிவுபெறும்.

இதெல்லாவற்றைக் காட்டிலும் அவர்களது சொத்தாக இருந்த முக்கியமான விஷயம், தாழ்வு மனப்பான்மை.

சொத்து, சுகங்கள், அடிமைகள், வளமை இருப்பினும் கல்வியிலும் உலக ஞானத்திலும் தாம் பிற்பட்டவர்கள் என்கிற எண்ணம், அன்றைய பணக்கார அராபியர்கள் எத்தனையோ பேருக்குமே உண்டு. தமது இறைநம்பிக்கை, வழிபாட்டு உருவங்கள் பற்றி பெருமிதம் இருந்தாலும், மதக்கல்வி ரீதியில் தம்மைக் காட்டிலும் யூதர்கள் மேலானவர்கள் என்கிற உணர்வு அவ்களிடையே இருந்திருக்கிறது. யூத மதம் மிகவும் பண்பட்டது; யூதர்கள் அனைவரும் கற்றறிந்த மேலோர் என்னும் எண்ணம் அவர்களது இயல்பாகிப் போயிருந்தது.

இத்தனைக்கும் கிருத்தவம் தான் அன்றைய திகதியில் வருவோரையெல்லாம் அரவணைத்துக்கொள்ளும் மதமாக இருந்ததே தவிர, யூதமதத்தில் பிரசாரம், மதமாற்றம் போன்றவை எதுவும் அறவே இருந்தது இல்லை. இதனாலேயே கூட ஒருவேளை அவர்களுக்கு யூதர்கள் மேம்பட்டவர்களாகத் தெரிந்திருக்கலாம்.

இந்த எண்ணம் அவர்களிடையே எத்தனை தீவிரமாக ஊடுருவி இருந்தது என்பதற்கு ஒரே ஓர் உதாரணம் சொன்னால்போதும். விளங்கிவிடும்.

இஸ்லாம் தோன்றி, மூன்றாண்டுகள் ஆகி, மொத்தமே நாற்பது முஸ்லிம்கள் உலகில் இருந்த தருணம் அது. அரபிகளின் புனிதத் திருவிழாக் காலம் ஒன்று வந்தது. அந்தச் சமயத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து மெக்காவுக்குப் புனித யாத்திரையாகப் பல்லாயிரக்கணக்கானோர் வரத்தொடங்குவார்கள். இன்றைக்கு அதே மெக்காவுக்குத்தான் முஸ்லிம்கள் புனித யாத்திரை மேற்கொள்கிறார்கள். அதே க'அபாவைத்தான் பயபக்தியுடன் சுற்றி வருகிறார்கள். ஆனால் இன்றைய க'அபாவுக்கும் அன்றைய க'அபாவுக்கும் வித்தியாசங்கள் பல. பிரதானமான வித்தியாசம், அன்றைக்கு அங்கே இருந்த ஏராளமான உருவச் சிலைகள், சிறுதெய்வங்கள், க'அபாவை நிர்வாணமாகச் சுற்றிவரும் வழக்கம்கூட இருந்திருக்கிறது.

அப்படிப் புனித யாத்திரையாக வரும் பக்தர்களை உபசரித்து, தங்கவைத்து, விருந்துகள் நடத்தி, புண்ணியம் தேடிக்கொள்வதில் மெக்கா நகரத்துப் பணக்காரக் குறைஷிகளுக்கு எப்போதுமே ஆர்வம் உண்டு. புண்ணியம் மட்டுமே இதற்குக் காரணமல்ல. சில வர்த்தகக் காரணங்களும் உண்டு.

புனித யாத்திரையாக வரும் வெளிநாட்டினருக்கு விருந்தளித்து உபசரிக்கும் குறைஷிகள் அப்படியே அவர்களுடன் சில வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொண்டு தங்கள் தொழிலையும் மேம்படுத்திக் கொள்வது வழக்கம். உலர் பழ-வகைகள், தானியவகைகளை ஏற்றுமதி செய்வது அன்றைய குறைஷகளின் பிரதான தொழில். கிட்டத்தட்ட, மத்திய ஆசியா முழுவதி லும் அன்றைய மெக்கா வர்த்தகர்கள் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தார்கள். சில ஆபிரிக்க நாடுகளுக்கும் தூர கிழக்கு நாடுகளுடனும் அவர்களுக்கு வர்த்தகத் தொடர்பு இருந்திருக்கிறது.

இந்த வர்த்தக உறவுகள் எப்போதும் சுமூகமாக இருப்பதற்கு, புனித யாத்திரை காலங்களில் மெக்காவுக்குவருவோரை நன்கு கவனிப்பது மிகவும் அவசியம். யாத்திரிகர்கள் வசதியாகத் தங்குவதற்கு, நெரிசலில் சிக்கிக் கொள்ளாமல், சௌகரியமாக க'அபாவில் வழிபட்டுத் திரும்புவதற்கு, உணவுப் பிரச்சினை இல்லாமல் உண்டுகளிப்பதற்கு, இன்னபிற வற்றுக்கு மெக்கா குறைஷிகள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள்.

இது வருஷா வருஷம் நடப்பதுதான். ஆனால் அந்த வருஷம் அவர்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. முகம்மது, அவர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இஸ்லாம் என்கிற புதிய மார்க்கம் என்னதான் சொல்கிறார் முகம்மது என்று சும்மா வேடிக்கை பார்க்கப் போகிறவர்கள் கூட அவரது அடிபணிந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிடுகிற அபாயம். அதுநாள்வரை பகிரங்கமாகப் பிரசாரம் மேற்கொள்ளாதிருந்த முகம்மதுவும் அவரது தோழர்களும், இஸ்லாம் தோன்றிய அந்த நான்காம் ஆண்டின் தொடக்கத்தில் பகிரங்கப் பிரசாரத்துக்கான இறை உத்தரவு கிடைக்கப் பெற்றவர்களாக, மெக்காவுக்குவரும் யாத்திரிகர் களிடையே இஸ்லாம் குறித்துப் பேசுவதற்குத் தயாராக இருந்தார்கள்.

என்னசெய்வது முகம்மதுவின் பிரசாரத்தைத் தடுக்கலாம் என்று குறைஷிகள் யோசித்தார்கள். அவரை ஒரு மந்திரவாதி என்றும் சூனியக்காரர் என்றும் சித்திரித்துக் கூடியவரை அவரை யாரும் நெருங்க இயலாமல் செய்வதற்கு ஒருபுறம் ஏற்பாடு செய்தார்கள். மறுபுறம் கலகக்காரர் என்றும் பித்தலாட்டக்காரர் என்றும் மக்கள் விரோத, இறைவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என்றும் சொல்லிப்பார்த்தார்கள். கெட்ட ஆவியால் பீடிக்கப்பட்டவர் என்றும் ஒரு வதந்தியைத் திட்டமிட்டுப் பரப்பினார்கள்.

குறைஷி வர்த்தகர் சமூகத்தின் இத்தயைக நடவடிக்கைகள் ஒரு விபரீதத்தை உண்டுபண்ணியது. குறைஷி சமூகத்திலேயே இளைஞர்களாக இருந்தவர்கள், தமது தந்தைமார்களும் பிற உறவினர் களும் ஏன் இந்த முகம்மதுவைப் பற்றி எப்போதும் தவறாகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர் என்னதான் சொல்கிறார், செய்கிறார் என்று அறியும் ஆவல்மிக்கவர்களாக முகம்மது இருக்கும் இடம்நாடிப்போக ஆரம்பித்தார்கள்.

இதைக் காட்டிலும் குறைஷி களுக்கு வேறு பிரச்சினை வேண்டுமா? யாத்திரிகர்களையல்ல முதலில் தமது மக்களை அவர்கள் முகம்மதுவிடமிருந்து 'காப்பாற்றி'யாக வேண்டும். ஆகவே சிறுபிள்ளைத் தனமான சில நிபந்தனைகளை அவர்கள் முகம்மதுவுக்கு வைக்கத் தொடங்கினார்கள்.

ஒரு பௌர்ணமி தினத்தன்று முகம்மதுவிடம் சென்று, "உண்மை யிலேயே நீங்கள் ஓர் இறைதூதர் என்று நாங்கள் எப்படி நம்புவது?" என்று சவால்விட்டார்கள். "பார், இந்த முகம்மது எப்படித் திண்டாடப் போகிறார்" என்று தம் குலத்தின் இளவல்களைப் பார்த்து பெருமித மாகப் புன்னகை புரிந்தார்கள்.

ஆனால், முகம்மது கண்மூடி தியானித்த மறுகணம் அந்த அற்புதம் நடக்கத்தான் செய்தது. பௌர்ணமி நிலவு இரண்டாக இரு பிறைகளாகப் பிரிந்து காட்சியளித்தது!

உடனே முகம்மது ஒரு மந்திரவாதி, கண்கட்டுவித்தை செய்கிறார் என்று அலறத்தொடங்கிவிட்டார்கள் குறைஷி கள்.

ஒன்றல்ல; இதைப்போல் வேறுபல சம்பவங்களும் முகம்மதுவின் வாழ்க்கையில் நடந்ததற்கான சரித்திரக் குறிப்புக்கள் இன்றும் வாசிக்கக் கிடைக்கின்றன. ஆனால், சித்து வேலைகளையும் அற்புதம் நிகழ்த்துவதையும் முகம்மதுநபி, இஸ்லாத்தின் மையப்புள்ளியாக ஒருபோதும் வைத்ததில்லை. இஸ்லாத்தின் மையம் என்பது குர்ஆன்தான்.

'குன்' என்கிற ஒரு சொல்லை மரியத்தின் மணிவயிற்றில் வைத்துத்தான் முகம்மதுவுக்கு முந்தைய நபியான இயேசுவை இறைவன் படைத்தான் என்று இஸ்லாம் சொல்கிறது.

அந்தச்சமயம், சொல்லிலிருந்து உதிர்த்தவர் இறைதூதர். இம்முறை சொல்லில் இருந்த உதிர்த்தது குர்ஆன் என்கின்ற ஒரு வேதமாக. குர்ஆன்தான் முக்கியமே தவிர, நிகழ்த்தப்படும் அற்புதங்களல்ல. நிகழ்த்துபவருமல்ல.

இதை, மாற்ற யாரையும்விட முகம்மது மிக நன்றாக உணர்ந் திருந்தார். தாம் இறைவனால் இஸ்லாத்தை விளக்கவும் பரப்பவும் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு கருவி மட்டுமே என்பதைப் பரிபூரணமாக அறிந்திருந்தார்.

(தொடரும்...)

# தற்கொலை! தடுக்க முடியுமா?

**தற்கொலை** தொடர்பாக மனிதர்கள் தம் வாழ்வில் ஒரு தரமாவது சிந்தித்திருப்பார்கள் எனக் கூறப்படுகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்காக தற்கொலை செய்வதற்கான எண்ணங்களை நான் கொண்டிருந்தேன். இன்று அவற்றை மீளப் பார்க்கும் பொழுது எந்தளவு சிறுபிள்ளைத்தன மானது என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அன்று அக்கணத்தில் அது மிகவும் முக்கியமானதாக இருந்திருக்கின்றது. இந்த அனுபவம் எனக்கு மட்டுமல்ல இதை வாசிக்கின்ற உங்களின் பல பேருக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஏதோ ஒரு காரணத் தினால் அன்று அவ்வாறு செய்யாது தப்பித்து இன்றுவரை வாழ்வுடன் போராடிக்கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றோம். அதேவேளை பலர் அக்கணத்தில் எடுத்த முடிவால் தம் வாழ்வை முடித்திருக்கின்றனர். இவ்வாறு வாழ்வை முடித்தவர்களது மன நிலை மற்றும் எவ்வாறு இத் தற்கொலை எண்ணங்கள் ஏற்படுவதை மாற்ற அல்லது தடுத்து நிறுத்த உதவலாம் என்பது தொடர்பானதே இந்தப் பதிவு. இதனூடாக தற்கொலையற்ற ஒரு சமூகத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை நோக்கி நாம் சிந்திக்கலாம்.

தற்கொலை என்பது உலகத்தில் பொதுவாக காணப்படுகின்ற ஒரு அம்சமாகும். ஆனால் பிற பிரச்சினைகள் போல இதற்கு அந்தளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. உலகத்திலுள்ள சமூகங்களால் மிகவும் தவறாகவும் குறைவாகவும் மதிப்பிடப்பட்ட சமூகநலப் பிரச்சினைகளில் தற்கொலையும் ஒன்றாகும். ஆயுத முரண்பாடுகளாலும் மற்றும் வீதி விபத்துக்களாலும் உலகத்தில் இறப்பவர்களுக்கு சமனாக அல்லது அதற்கும் அதிகமாக தற் கொலையினால் இறப்பவர்கள் இருக்கின்றனர். அதேவேளை தற் கொலையால் ஒருவர் இறக்கின்றபோது நூற்றுக்கு அதிகமான வர்கள் பிழைத்துப்போன தமது தற்கொலை முயற்சிகளால் காயப்படுகின்றனர். எந்த ஒரு வருடத்தை எடுத்துக் கொண்டாலும் முழுச் சனத்தொகையில் ஆறு வீதமானவர்கள் தற்கொலை செய்வது தொடர்பாக சிந்தித்திருக்கின்றனர். ஐந்து வீதமானவர்கள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர் என்கின்றன தரவுகள். ஆனால் நம்மில் பலர் இது மிகப் பெரியதொரு பிரச்சினை என்பதனையும் இதைத் தடுப்பதற்கான செயற்பாடுகள் எந்தளவு முக்கியமானவை என்பதனையும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். மிகச் சிலரே இப் பிரச்சனையின் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொண்டு அதைத் தடுப்பதற்கான வழிவகைகளைத் தேடுவதுடன் தமது பங்களிப்பையும் செய்கின்றனர்.

இன்றைய இலங்கையின் குறிப்பாக வடக்கு கிழக்கு மற்றும் மலையக சூழல்களில் தற்கொலைகள் சதாரணமாக நடைபெறு கின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இது தொடர் பாக மனநல வைத்தியர் எஸ். சிவதாஸ் அவர்கள் தனது நலமுடன் நூலிலும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தற்கொலை செய்பவர் களுக்கு வறுமை, பாலியல் வன்புணர்வு, பாலியல் தொந்தரவுகள், சித்திரவதைகள், வேலையில்லாமை, கல்வி கற்கமுடியாமை, மற்றும் பல்வேறு தோல்விகள் எனப் பல காரணங்கள் இருக்கின்றன. இக்காரணங்கள் குறிப்பிட்டவர்களைப் பொறுத்தவரை வலுவானவை. ஆகவே புறக்கணிக்க கூடியவை அல்ல. அதேவேளை இக் காரணங்களுக்கான காரணிகளை நிவர்த்தி செய்யக் கூடிய வழிமுறைகள் அரசியல் செயற்பாடுகளினால் மட்டுமே சாத்தியமானது. இச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இவர்கள் வாழவேண்டும். ஆகவேதான் தற்கொலை செய்வதிலிருந்து இவர்களைத் தடுப்பது முக்கியமானதாக இருக்கின்றது.

தற்கொலை செய்யாத ஒரு சமூகத்தை உருவாக்கவேண்டிய பொறுப்பு நமக்கிருக்கின்றது. இதற்கு எவ்வாறு தற்கொலைகளைத் தடுப்பது, அதற்கான காரணங்களை நிவர்த்திசெய்வது, மற்றும் அதற்கான மருத்துவ, உள, மன, வள சிகிச்சைகளை அளிப்பது என்பது தொடர்பாக நாம் சிந்திக்கவும் அதற்காக செயற்படவும் வேண்டும். மேலும் ஒருவரை தற்கொலை செய்வதிலிருந்து காப்பாற்றுவதற்கான அவசர முதலுதவி வழிமுறைகளையும் அறிந்திருக்கவேண்டும். தற்கொலை செய்யாத ஒரு சமூகத்தை உருவாக்குவது என்பது மிகவும் சவாலான வேலைதான். ,ருப்பினும் வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளக்கூடிய தாங்குதிறனை மனிதர்களில் வளர்ப்பதற்கான சமூகநல ஆதரவு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதனுடாக தற்கொலை முயற்சிகளை குறைக்கலாம்.

தற்கொலை முயற்சி ஒன்று நடைபெறும் பொழுது அதைத் தடுப்பதற்கு பெரும்பாலும் நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. அவை திட்டமிட்டதாகவோ அல்லது திட்டமிடப்படாத உடனடி செயலாகவோ இருக்கலாம். ஆனால் அவ்வாறான எண்ணங்கள் குறிப்பிட்ட மனிதர்களில் இருப்பதை ஏற்கனவே இனங்கண்டு கொள்வதனுடாக தற்கொலை செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு தடுக்க முயற்சிக்கலாம். நமது நண்பர்கள், உறவுகள், சக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளர்கள் தாம் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக அல்லது அவ்வாறன எண்ணங்கள் இருப்பதாக பல வழிகளில் குறிப்பால் நமக்கு உணர்த்தியிருப்பார்கள். உணர்த்துவார்கள். உண்மையிலைலே தம்மை மற்றவர்கள் பாதுகாப்பதற்கும் அதற்கான உதவிகளைப் பெறுவதற்குமான சைகைகளை பல சந்தர்ப்பங்களில் அறிவிப்பார்கள். இதனைப் புரிந்து கொண்டால் மட்டுமே நாம் அவர்களுக்கு உதவமுடிவதுடன் அவர்களைப் காப்பாற்றவும் முடியும்.

குறிப்பாக தாம் தற்கொலை செய்து கொள்ளப்போவது தொடர்பான தமது எண்ணங்களை மறைமுகமாக வெளிப்படுத்து வோரிடம் வெளிப்படையாகவும் நேரடியாகவும் கதைப்பது ஆபத்தானது என்கின்ற தவறான நம்பிக்கை வழக்கத்திலிருக்கின்றது. மேலும் இரகசியமாக பிறருடன் உரையாடுவதோ அல்லது அறிந்தும் அறியாதவாறு அமைதியாக இருப்பதோ, அல்லது புறக்கணிப்பதோ ஆரோக்கியமானதல்ல. இவை ஏதுவும் தற் கொலை செயல்கள் நடப்பதை தடுத்து நிறுத்தாது. மாறாக இவர்களுடன் நேரடி யாகவும் வெளிப்படையாகவும் தற்கொலை தொடர்பாக கலந் துரையாடுவதே ஆரோக்கியமானது பயனுள்ளதுமாகும்.

ஒருபுறம் தற்கொலை நடைபெறாது தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும் அதேவேளை, அது தொடர்பான கருத்தியல் வரலாற்றில் எவ்வாறு மாற்றமடைந்து வந்திருக்கின்றது என்பதை அறிவதும் பயனுள்ளதாகும். இது நாம் உருவாக்கும் கருத்தியல்கள் எவ்வாறு சமூகத்தில் தாக்கத்தை செலுத்துகின்றன என்பதை புரிவதற்கு வழிவகுக்கும். இது மட்டுமல்ல, ஒரு கருத்தியலை உருவாக்கும் பொழுது எந்தளவு பொறுப்புணர்வுடனும் பிரக்ஞையுடனும் செயற்படவேண்டும் என்பதையும் புரியவும் உணரவும் வைக்கும் என்றால் மிகையல்ல.

# மற்றுமொரு புனித பூமியில் — அரங்கேறிய அசிங்கம்!

பயங்கரவாதத்தினதும் இனவாதத்தினதும் உயிரோட்டமாக இருப்பது வக்கிர உணர்வும் வன்முறையும்தான். வெறித்தனத்தோடு பலம் உள்ளவரை கண்ணில்பட்டதையெல்லாம் அழித்தொழிப்பதுதான் அதன் தாரகமந்திரம்.

இதுதான் நாம் எதிர்கொண்ட கடந்த கால பயங்கரவாதத்தினதும் இனவாதத்தினதும் வரலாறாகும். தற்பொழுது பயங்கரவாதம் ஒடுக்கப்பட்டுவிட்ட நிலையில் அதன் இன்னொரு வடிவமான இனவாதம் மெல்ல மெல்லத் தலைதூக்குவதற்கான சாயல்கள் தெரிகின்றன.

கடந்த ஒக்ரேபர் 27 ஆம் நாளன்று உலக முஸ்லிம்கள் தியாகத் திருநாளான ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடத் தயாரானபோது அநுராதபுரத்தில் துயரமான ஒரு நிகழ்வு இடம்பெற்றது.

அநுராதபுர நகரத்திலுள்ள மல்வத்து ஓயா லேனில் உள்ள (குர்ஆனைக் கற்றுக் கொடுக்கும்) ஒரு சிறிய மத்ரசா ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று அதிகாலை 2.30 மணிக்கு தீ வைத்துக் கொழுத்தப்பட்டது. வெடிப்புச் சத்தங்களும் தீச்சுவாலையும் எழுவதைக் கண்டு அந்த நடுச் சாமத்தில் அயலில் வசித்த ஊர்வாசிகள் ஓடிச் சென்று பார்த்த பொழுது அந்த மத்ரசா எரிந்து கொண்டிருந்தது.

கிராமத்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததன் பேரில் பொலிஸார் பத்துப்பதினைந்து நிமிடங்களுக்குள்ளாகவே ஸ்தலத்துக்கு விரைந்து வந்தனர். பொலிசார் வருவதற்கு முன்னதாகவே மத்ரசாவில் பற்றி எரிந்து கொண்டிருந்த தீ கிராம வாசிகளால் அணைக்கப்பட்டு விட்டது.

அநுராதபுரத்தில் முளைவிட்டிருக்கின்ற இந்த இனவாத வக்கிரம் அங்கு இப்பொழுது தான் முதன்முறையாக ஏற்பட்ட தொன்றல்ல. இதற்கு முன்னரும், இந்த வருடத்தில் அங்கிருந்த இறைநேசரின் அடக்கஸ்தலம் என்றழைக்கப்படுகின்ற தர்காவும் பட்டப் பகலில் பொலிசார் உட்பட எல்லோரும் பார்த்திருக்க இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது.

சமீப காலங்களில் குறிப்பாக பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அநுராதபுரத்தில்தான் முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தலங்களைத் தாக்கியழிக்கும் நடவடிக்கை தொடக்கி வைக்கப்பட்டது எனலாம்.

அதன்பின்னர் பொருளாதார மத்திய நிலையமாக இருக்கின்ற தம்புள்ளையில் அமைந்துள்ள ஹைரியா ஜும்மாப் பள்ளிவாசல் அதுவும் பட்டப்பகலிலேயே தீவிர உணர்வுகொண்ட ரங்கிரி பௌத்த மதகுருவின் தலைமையில் சேதப்படுத்தப்பட்டது.

அதன்பின்னர் தெஹிவளையிலும், அதனை அடுத்து குருநாகல், ராஜகிரிய, கொஹில வத்தை என்று வியாபித்து இப்பொழுது ஆரம்பித்த இடத்துக்கே அதாவது அநுராதபுரத்துக்கே வந்து நிற்கின்றது மத எதிர்ப்பு வெறித்தனம்.

மத வழிபாட்டுத் தலங்களைத் தாக்க ஒரு போதும் இடமளியேன் என்று மாகாணசபைத் தேர்தல் காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியவர்களின் சொல் ஒன்றே முஸ்லிம்களுக்கு ஒரு ஆறுதலாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்தது. அந்த வாக்குறுதியில் முஸ்லிம்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துமிருந்தார்கள்.

ஆனால், ஜனாதிபதியின் அந்த வாக்குறுதியைக்கூட கேள்விக்குள்ளாக்கும் வகையில் இந்த அராஜகம் அநுராதபுர புனித நகரில் மீண்டும் அரங்கேறியுள்ளது.

அநுராதபுர நகரில் சுமார் 1700 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்கின்றார்கள். சனத்தொகையளவில் பார்த்தால் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் என்ற எண்ணிக்கையைத் தொட்டுவிடும்.

அங்குள்ளவர்களின் கருத்துப்படி அநுராதபுர நகரத்திலே பூர்வீகமாக வாழ்கின்ற சிங்களவர்களும் அதற்கடுத்தபடியாக இரண்டாவது பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லிம்களும் மூன்றாவது எண்ணிக்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமூக சகவாழ்வுடன் பரஸ்பரம் உதவி ஒத்தாசை செய்துகொண்டு ஐக்கியமாக வாழ்வதாகக் குறிப்பிடுகின்றார்கள். இங்குள்ள எந்த இனத்தைச் சார்ந்தவர்களும் துவேஷ எண்ணங்களோடு பழகியிருக்கவில்லை என்பதையும் அவர்கள் வலியுறுத்திச் கூறுகின்றார்கள்.

இதுபோக அநுராதபுர நகரத்திலே புதிதாக வந்து குடியேறிவர்கள் என்று சொல்வதற்கு எவரும் இல்லை. அதாகப்பட்டது எல்லோரும் கிட்டத்தட்ட அங்கிருப்பவர்களில் 99 சதவிகிதமானோர் சிங்களவர்களாயினும் முஸ்லிம்களாயினும் தமிழர்களாயினும் அவர்கள் பூர்வீகவாசிகளேதான் என்கின்றனர் ஊர் மக்கள். ஆகையினால் புதிதாக இனத்துவேஷ பகைமை உணர்வுகளை உசுப்பிவிடும் எண்ணம் சிறிதளவேனும் ஊர்வாசிகளிடம் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றே அவர்கள் அடித்துச் சொல்கின்றார்கள்.

அவர்களது கூற்றுப்படி வெளியிலிருந்து வந்த விஷமிகள்தான் இந்த மத்ரசா எரிப்புக்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இதே நிலைமைதான் தம்புள்ளை பள்ளிவாசல் எதிர்ப்பின்போதும் இருந்தது என்பதை உற்றுக் கவனிக்கவேண்டும். வெளியூரிலிருந்து கொண்டுவந்து இறக்கப்பட்டவர்களே அங்கு குழப்பத்தையும் இனங்களுக்கிடையிலான கசப்புணர்வையும் தூண்டினார்கள் என்கின்ற உண்மை அங்கே தம்புள்ளையில் மக்களது கணிப்பில் பதிந்துள்ளது.

அநுராதபுர மத்ரசாவுக்குள் தீப்பந்தம் கட்டி உள்ளே எறிந்துவிட்டுப் போன அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. மத்ரசா 40 வீதம் எரிந்துவிட்ட நிலையில் தீ அணைக்கப்பட்டு விட்டது. அஸ்பெஸ்டஸ் சீட்ஸ்களில் நெருப்புத் தாவி எரிய ஆரம்பித்த அவை வெடிக்கும் சத்தங்கள் அயலவர்களுக்குக் கேட்ட போதுதான் கிராம வாசிகள் விழித்துக் கொண்டு ஸ்தலத்திற்கு ஓடிவந்தார்கள்.

பொலிசார் தாமதமின்றி ஸ்தலத்திற்கு விரைந்து வந்ததுடன் முடிந்தளவு விசாரணையில் தீவிரமாக இருந்த விதம் பாராட்டத்தக்கது என உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் தம் வசம் கூட்டி வந்த மோப்ப நாய்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கப்பால் நகரவில்லை.

இந்தப் பள்ளிவாசல் அநுராதபுர பெரிய பள்ளிவாசலின் நிர்வாகத்தின் கீழ்தான் இயங்கி வருகின்றது. நகரின் மையப்பகுதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்திலேயே இந்த எரிக்கப்பட்ட மத்ரசா அமைந்துள்ளது.

தௌஹீத் அமைப்பைச் சேர்ந்த ஒரு தனவந்தரின் முயற்சியால்தான் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டு பின்னர் அது அநுராதபுரம் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் கைகளுக்கு மாறியது.

ஏற்கெனவேயும் இது மாதிரி இரண்டு பள்ளிவாசல்கள் தௌஹீத் பிரிவினரால் கட்டப்பட்டு பெரிய பள்ளிவாசல் பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டுமுள்ளது. இப்போது எரிக்கப்பட்ட இந்த மத்ரசா 1994 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது.

இம்முறை ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை தௌஹீத் அமைப்பினர் அங்குள்ள ஸாஹிறா மகா வித்தியாலயத்தின் மைதானத் திடலிலேயே தொழுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் தப்லீக் குழுவினர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மைதானத் திடலில் தொழுவதைத் தவிர்த்து அவரவர் நிர்வாகத்திலே உள்ள பள்ளிவாசலுக்குள்ளேயே நடாத்துவோம் என்று அவர்கள் கூறினர். இருந்தபோதிலும் தௌஹீத் அமைப்பினர் அந்த வழிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. தமது தீர்மானத்தில் உறுதியாக நின்றனர்.

இந்த விவகாரம் இழுபறியாகி இறுதியில் வெள்ளிக்கிழமையன்று பொலிஸ் வரை சென்றுவிட்டது. இருசாராரையும் அழைத்த பொலிஸார் இரவு பன்னிரண்டு மணிவரைப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அதன்படி தௌஹீத் அமைப்பினர் தாங்கள் மறுநாள் சனிக்கிழமை ஸாஹிறா வித்தியாலய விளையாட்டு மைதானத் திடலில் தொழுகை நடாத்துவதற்கு பொலிசாரின் பாதுகாப்பை வேண்டிநின்றனர்.

இவர்கள் தொழுகை விடயமாக முரண்பட்டு பொலிசுக்குச் சென்று பொலிசாரின் விசாரணை முடிந்து திரும்பி வந்த ஒரு சில மணி நேரங்களிலேயே இந்த குர்ஆன் மத்ரசா எரிக்கப்பட்டது.

குர்ஆன் மத்ரசா எரிக்கப்பட்ட நிகழ்வையும் ஏற்கெனவே தொழுகை நடத்துவதில் இஸ்லாமிய இயக்கங்களுக்கிடையே

*(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)*

இருந்த முரண்பாண்டையும் இணைத்துப் பார்ப்போர் இது உள் வீட்டுப்பிரச்சினையாக இருந்திருக்கக் கூடுமோ என்றும் முடிச்சுப் போட முனைகின்றனர்.

ஆனால், உண்மையில் மத்ரசா எரிப்புச் சம்பவத்திற்கும் பெருநாள் தொழுகையை மைதானத் திடலில் நடத்துவதற்கும் முன்வந்த உள்வீட்டுப் பிரச்சினையால் அங்குள்ள குர் ஆன் மத்ரசா எரிக்கப்படவில்லை என்பதை அங்குள்ள இஸ்லாமிய இயக்கங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஊர் மக்களும் இதனை பக்கச் சார்பின்றி அடித்துச் சொல்கின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் நெருக்கடி மிகுந்த தற்போதைய காலகட்டத்தில் முஸ்லிம் இயக்கங்கள் அற்பத்தனமான விடயங்களுக்கெல்லாம் முரண்பட்டு நின்று பொலிஸ் நிலையம் வரை விசாரணைகளுக்குச் சென்று கைகட்டி நிற்பது அசிங்கமானது என்பதையும் இது குழப்பத்தைத் தூண்டி அதில் குளிர்காய நினைக்கும் விஷமிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துவிடும் என்பதையும் பொதுமக்கள் பெருந்துயரத்தோடு வெளிப்படுத்துகின்றனர்.

மத்ரசாவின் தீ அணைக்கப்பட்டு எரிக்கப்பட்ட அந்த மத்ரசாவை புனரமைப்புச் செய்வதற்கு வடமத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் அவர்கள் ஐந்து இலட்ச ரூபாவை உடனே வழங்கியுள்ளார். இது பாதிக்கப்பட்டுப் போயுள்ள சமூகத்திற்கு தற்காலிக ஆறுதலைக் கொடுத்துள்ள போதிலும் விஷமிகளின் மனதில் எரிந்து கொண்டிருக்கின்ற இனவாதத் தீயை நிரந்தரமாக அணைக்க வழிகண்டாக வேண்டும் என்பதே அமைதியை விரும்புவோரின் எதிர்பார்ப்பு.

# அமெரிக்கத் தூதுவரின் மட்டு. விஜயமும் அரசியலும்

*பிரகஸ்பதி*

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிச்சேல் ஜே சிசன் கடந்த வாரத்தில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதும், பல இடங்களுக்கு விஜயம் செய்ததும் நடைபெற்றிருந்தது. ஆனால் அவரது வருகை குறித்தான வெறும் செய்திகளோடு மட்டும் நிறுத்தப்பட்ட விபரங்கள் குறித்து இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசன் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டு, மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் 15ஆம் விடுதியில் செயற்பட்டும் வலது குறைந்தோருக்கான சிகிச்சை நிலையத்தை பார்வையிட்டதுடன், இந்த நிலையத்தில் வலது குறைந்தோரில் கால்களை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் செயற்கை கால்கள் பொருத்தும் நடவடிக்கையினை அமெரிக்க தூதுவர் பார்வையிட்டார்.

பின்னர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.முருகானந்தனுடன் கலந்துரையாடினார். இதையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் விடுதிகள் சிலவற்றையும் தூதுவர் பார்வையிட்டார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு விஜயம்செய்து, புதிய அமெரிக்க தூதுவர் யு.எஸ்.எயிட் உதவியில் கலாசார மத்திய நிலையமாக மாறவுள்ள ஒல்லாந்தர் கோட்டையையும் பார்வையிட்டார்.

அதனையடுத்து, அமெரிக்கத் தூதுவர், அரசியல், மக்கள் பிரதிநிதிகள் பலரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதேவேளை, படுவான்கரை பகுதியில் கடந்த காலங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டு, யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் ஊடாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம், கஹுமுந்தன்வெளி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைக் கட்டடங்களை அமெரிக்கத் தூதுவர் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலய பிரதிநிதிகள் மற்றும் யூ.எஸ் எயிட் நிறுவன அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவ் விஜயத்தின்போது கிரான் குளத்தில் சப்பாத்து தொழிற்சாலை ஒன்றுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து பேசிய அமெரிக்கத் தூதுவர் மிச்சேல், தேவையுடையவர்களை இனம் கண்டு உதவுவதே அமெரிக்காவின் நோக்கமாகும். இதன் அடிப்படையிலேயே இலங்கையில் தேவையுடையவர்களை இனங்கண்டு ஐக்கிய அமெரிக்காவின் உதவித்திட்டங்கள் ஊடாக கொழும்பிலுள்ள அமெரிக்கா தூதுவராலயம் மற்றும் யூ.எஸ்.எயிட் ஆகிய உதவுகின்றன. இதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை மக்களுக்கு அமெரிக்கா உதவி வருகின்றது.

இலங்கை மக்களையும் அமெரிக்க மக்களையும் இணைக்கின்ற உறவுப் பாலமாக இரண்டு நாடுகளின் தேசியக் கொடிகள் உள்ளமை குறிப்பிடத்தது.

இந்த கிரான்குளம் கிராமம் கடந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசம் என்பதை நான் நன்கு அறிவேன். இந்த தொழிற்சாலை இங்கு அமையப் பெறுவதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். இந்தப் பிரதேசங்களில் கல்வி மற்றும் வாழ்வாதாரத்திற்கான தேவைகள் அதிகம் உள்ளன.

அத்துடன் இங்கு உற்பத்தி செய்யப் படும் பாதணிகள் மிகவும் அழகானவையாக உள்ளன. இந்த தொழிற்சாலை மூலம் சிறந்த உற்பத்தியை ஏற்படுத்தி இந்த நாட்டின் பொருளதார வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றும் என நான் நினைக்கின்றேன் எனத் தெரிவித்திருந்தார்.

இதே நேரம், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் வாகனம் கரடியனாறு – புல்லுமலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் மட்டக்களப்பு திரும்பும்போது கரடியனாறில், விபத்துக்குள்ளாகியியுமிருந்தது.

அமெரிக்கத் தூதுவர் பயணித்த வாகனம் இராணுவ வீரரொருவரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியமையினாலேயே இந்த வாகன விபத்து இடம்பெற்றிருந்தது. எனினும் இந்த வாகன விபத்தினால் அமெரிக்கத் தூதுவரிற்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. அத்துடன் அவர் பயணித்த வானம் சிறியளவில் சேதத்திற்குள்ளாகியுமிருந்தது.

மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவ வீரருக்கு சிறியளவில் காயம் ஏற்பட்டது.

அவர் மட்டக்களப்பில் தங்கியிருந்த நாட்களில், கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண அமைச்சர்களான ஹாபிஸ் நஸீர் அஹமட் மற்றும் ஏ.எம்.மன்சூர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது பொதுமக்களின் குறைநிறைகளையும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் என்பன மாகாண அமைச்சர் களினால் அமெரிக்க தூதுவரிடம் விளக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதேபோன்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயம் செய்து மட்டக்களப்பு மேயர் சிவகீதா பிரபாகரனை சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பில் மட்டக்களப்பு பிரதி மேயர் ஜோர்ஜ் பிள்ளை மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாநகரத்தின் அபிவிருத்தி, தற்போதை அமைதியான சூழலில் மக்களின் வாழ்க்கை நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் அமெரிக்கத் தூதுவர் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளை சந்தித்தும் கலந்துரையாடினார். இச் சந்திப்பு காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளை சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது.

இந்த சந்திப்பின்போது அமெரிக்கத் தூதுவருக்கு முஸ்லிம்களுக்குள்ள காணிப் பிரச்சினைகள் மற்றும் காத்தான்குடியில் திண்மக் கழிவகற்றல் பிரச்சினை தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்துடன், சந்திப்பையடுத்து 1990ஆம் ஆண்டு காத்தான்குடியில் 103பேர் தொழுகையில் வைத்து புலிகளால் படுகொலை செய்யப்பட்ட பள்ளிவாயலும் அமெரிக்கத் தூதுவருக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது எதற்காகக் காண்பிக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

இதன்போது பள்ளிவாயல் சம்மேளன தலைவர் மர்சூக் அஹமது லெவ்வை மற்றும் சம்மேளன பிரதிநிதிகளான காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களான சல்மா அமீர் ஹம்சா மற்றும் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.சபீல், சம்மேளன பிரதிச் செயலாளர் எம்.அன்சார் நளீமி, சம்மேளன பிரதிநிதிகளான எம்.சரீப் மற்றும் இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் செயலாளர் அஷ் ஷெய்க் எம்.ஜாபீர் நழீமி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

யுத்த காலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பெரிய புல்லுமலையில் அமெரிக்க நிதியுதவியில், மக்களை மீள நிரந்தரமாகக் குடியமர்த்துவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றனர். இவை தொடர்பிலான ஆராய்வினை மேற்கொள்வதற்காகவே அமெரிக்கத் தூதுவர் புல்லுமலை சென்றிருந்தார்.

மட்டக்களப்பு, பதுளை வீதியிலுள்ள மீள்குடியேற்றக் கிராமமான பெரிய புல்லமலையில் 'சோவா' நிறுவனத்தினால் தற்காலிகமாக அமைக்கப்படவுள்ள சந்தைக்கான காணியை வழங்குவதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏறாவூர் பற்று பிரதேச சபைத் தவிசாளர் விணோத் உறுதி வழங்கியிருந்தார்.

(08 ஆம்பக்கம் பார்க்க...)

# திவி நெகும சர்ச்சை;

# சமுர்த்தி பணியாளர்களின் எதிர்காலம்?

**அலசுவது மதியூகி**

சமுர்த்தி அதிகார சபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை, மலையக அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றை உள்ளடக்கிய திவிநெகும திணைக்களத்தை உருவாக்கும் சட்டத்தால் எந்தவொரு சமுர்த்தி உத்தியோகஸ்தருக்கும் பாதிப்பு ஏற்படாது எனப் பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியிருக்கின்றார். அதேநேரம் சமுர்த்திப் பயனாளிகளும் அச்சங்கொள்ளத் தேவையில்லையெனவும் அவர் கூறினார்.

சமுர்த்தி அதிகாரிகளை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமென மஹிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமையவே சமுர்த்தி அதிகாரிகளையும் திவிநெகும திணைக்களத்துக்குள் உள்வாங்கி அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

1995ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை உருவாக்கப்பட்டது. அன்று முதல் சமுர்த்தி அதிகாரிகள் கிராம மட்டங்களில் மக்களுக்காகப் பணியாற்றி வருகின்றனர். திவிநெகும திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி அதிகார சபையை இணைத்துக் கொள்ளும்போது எந்தவொரு சமுர்த்தி அதிகாரிக்கும் அநீதி இழைக்கப்படாது. அவ்வாறான வகையிலேயே இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி அதிகாரிகளுக்கு மூன்று வகையான தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

95ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி அதிகாரசபையில் பணியாற்றிவரும் பணியாளர்கள் 95ஆம் ஆண்டிலிருந்து ஒய்வூதியம் பெறக்கூடிய வகையில் திவிநெகும திணைக்களத்தின் கீழ் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்படுவார்கள். இதனை விரும்பாத சமுர்த்தி அதிகாரிகள் 95ஆம் ஆண்டு முதல் திவிநெகும திணைக்களம் உருவாக்கப்பட்ட திகதி வரையில் தாம் செய்த பணிக்கான கொடுப்பனவுகளை முழுமையாகப் பெற்றுக்கொண்டு, திவிநெகும திணைக்களத்தில் புதிய பணியாளர்களாக இணைந்துகொள்ளமுடியும். எனினும், அவர்களின் சேவைக்காலம் கவனத்தில் கொள்ளப்படும்.

இதற்கும் விரும்பாத சமுர்த்தி அதிகாரிகள் அமைச்சினால் வழங்கப்படும் நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகிக்கொள்ள முடியும். எந்தவொரு சமுர்த்தி அதிகாரியும் பாதிக்க அரசாங்கம் இடமளிக்காது. அதேநேரம், எந்தவொரு சமுர்த்தி பயனாளியும் பாதிக்கப்படமாட்டார். சமுர்த்தி அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய சமுர்த்தி அதிகாரிகள் ஒய்வூதியம் உட்பட அரச பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடனும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். இவர்கள் திவிநெகும திணைக்களத்தில் பதவி உயர்வு பெறுவதற்கும் அவர்களுக்கு முடியும்.

சமுர்த்தி அதிகார சபையைச் சேர்ந்த 24 ஆயிரம் அதிகாரிகள் உள்ளடங்கலாக 26 ஆயிரம் பேர் திவிநெகும திணைக்களத்துக்கு உள்வாங்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தின் ஊடாக 900 கோடி ரூபாவை அரசாங்கம் மோசடி செய்ய முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் 32 ஆயிரம் கோடி ரூபாவை என்று கூறும் அமைச்சர் சமுர்த்தி அதிகார சபையில் உள்ள பலர் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் உயர் பதவிகளில் உள்ளனர். அடிமட்டத்தில் இறங்கி மக்களுடன் பணியாற்றினார்கள் என்பதாலேயே அவர்கள் அரசியலில் உள்ளனர். எனவே தான் திவிநெகும வேலைத்திட்டத்தில் சமுர்த்தி அதிகாரிகளையும் உள்ளடக்க நாம் தீர்மானித்தோம் என்கின்றார்.

**1995ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகார சபை உருவாக்கப்பட்டது. அன்று முதல் சமுர்த்தி அதிகாரிகள் கிராம மட்டங்களில் மக்களுக்காகப் பணியாற்றி வருகின்றனர். திவிநெகும திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி அதிகார சபையை இணைத்துக் கொள்ளும்போது எந்தவொரு சமுர்த்தி அதிகாரிக்கும் அநீதி இழைக்கப்படாது. அவ்வாறான வகையிலேயே இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி அதிகாரிகளுக்கு மூன்று வகையான தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.**

**95ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி அதிகார-சபையில் பணியாற்றிவரும் பணியாளர்கள் 95 ஆம் ஆண்டிலிருந்து ஒய்வூதியம் பெறக்கூடிய வகையில் திவிநெகும திணைக்களத்தின் கீழ் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்படுவார்கள்.**

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 16 ஆயிரம் பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களையும் பயன்படுத்தி திவிநெகும வேலைத்திட்டம் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படும். இதன் ஊடாக பயனாளிகள் தமது வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர் கூறினாலும், திவிநெகும 'வாழ்வின் எழுச்சி' என்ற திட்டமானது சட்டமாக்கப்படுவதற்கு மாகாண சபைகளின் அங்கீகாரம் பெறப்படவேண்டும் என்ற சர்ச்சையில் சிக்கி இப்போது நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கின்றது.

பெரும்பாலும் இவ்வாரம் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அது பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுமென்று தெரிகின்றது. நீதி மன்றத்தின் தீர்ப்பு மேற்படி சட்டதிருத்தத்திற்கு சாதகமாக இருக்காது என்ற நிலைமையே உள்ளது.

இந்தச் சந்தேகத்துக்குக் காரணம், பிரதம நீதி அரசருக்கு எதிரான சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் திவிநெகுமவை அமுல்படுத்த தடையாக கருதப்படும் 13ஆவது திருத்தச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் என்பனவாகும்.

மத்திய அரசு தேவை எனக்கருதும் சட்டமொன்றை நேரடியாகவே அமுல்படுத்த முடியாதபடி மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெறவேண்டியதன் தர்ம சங்கடத்துக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமையானது அரசுக்கு பலவீனமான நிலைமையையே ஏற்படுத்துகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு இருக்கும் அரசு பாராளுமன்றத்தின் ஊடாக சட்டமொன்றை இயற்றிக் கொள்வது மிகவும் இலகுவான காரியமாகும். அத்தகைய பலமான அரசு திவிநெகுமவை சட்டமாக்குவதற்கு மாகாண சபைகளிடம் மண்டியிடுவது ஏற்புடையதல்ல என்பதே தற்போதைய சர்ச்சைகளுக்குக் காரணமாகும்.

ஆனால் மத்திய அரசிலிருந்து மாகாண அரசுகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுகின்ற சட்டதிருத்தங்களில் இவ்வாறான ஒழுங்குகள் அமையப் பெற்றுள்ளன. இல்லாவிட்டால் மாகாண சபைகளின் அதிகாரங்களை ஒரே ஒரு தீர்மானத்திலேயே மத்திய அரசு பிடுங்கிக் கொள்ளவும், மாற்றி அமைக்கவும் முடியுமான சூழலே நாட்டில் இருக்கும். அவ்வாறான நிலைமையானது, தற்போதே போதுமான அதிகாரங்கள் இல்லை என்று அழுது கொண்டிருக்கும் மாகாண சபையின் சொச்ச அதிகாரங்களையும் எந்த நேரத்தில் மத்திய அரசு பறித்துக் கொள்ளுமோ என்ற அச்சத்தைக் கொடுப்பதாகவே இருக்கும்.

இன்னொரு பக்கத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் ஒன்று உள்ளது. அதாவது மாகாண சபையின் அங்கீகாரத்தை கோரி நிற்கும் அரசு நினைத்தால் தனக்கிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பிரயோகித்து 13ஆவது திருத்தச் சட்டத்தையே இல்லாமல் செய்து மாகாண சபைகளை கலைத்துவிடவும் முடியும்.

இப்படி ஒரு யோசனையை மனதில் கொண்டே திவிநெகும என்ற சர்ச்சை திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக இப்போது சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்து மாகாண சபைகளை கலைத்து மத்திய அரசு சுதந்திரமாக செயற்பட விரும்புகின்றது என்ற கருத்துக்கள் ஒருபுறமும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது செய்தால் அது கொண்டுவரப்பட்டதன் பிரதான நோக்கமான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பதையும் முழுமையாக நிராகரித்தல் என்பதையே அரசு சாதிக்க நினைக்கின்றது என்கின்ற கருத்து இன்னொருபுறமும் உண்டு.

இதற்கிடையே திவிநெகும திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் சமுர்த்தி அதிகார சபையினால் இலங்கையில் சுமார் 33இலட்சம் பேர் பயன்பெறுகின்றனர்.

வடமாகாணத்தில் தற்போது யாழ்ப்பாணத்திலேயே அதிகமான மக்கள் சமுர்த்திப் பயனாளிகளாக இருக்கின்றனர். அடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் தற்போதுதான் பயனாளிகள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பணத்தில் 79925 குடும்பங்கள் நன்மையடைகின்றனர். இவர்களில் 54199 குடும்பங்கள் சமுர்த்திப் பண முத்திரை பெறும் குடும்பங்களாக இருக்கின்றனர். அதன்படி 750 ரூபா பெறும் குடும்பங்கள் 39165, 1200 ரூபா பெறும் குடும்பங்கள் 10314, 1500 ரூபா பெறும் குடும்பங்கள் 4660 என்று கணிப்பு கூறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் 25726 குடும்பங்கள் சமுர்த்தி வங்கியிலிருந்து வாழ்வாதார மற்றும் கடன் பெறுகின்ற பயனாளிகளாக இருக்கின்றனர்.

கிளிநொச்சியில், மீள்குடியேறிய மக்களிலிருந்து சமுர்த்திப் பண முத்திரை பெறுவதற்கு தகுதியுடைய குடும்பங்களாக 9570 குடும்பங்களும்,முல்லைத்தீவிலிருந்து 9967 குடும்பங்களும்,மன்னாரிலிருந்து 13166 குடும்பங்களும், வவுனியாவிலிருந்து 12324 தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கில், தற்போதைய வங்கிப் பயனாளிகளாகவும், பண முத்திரை பெறுவோராகவும் திருகோணமலையில் 38560 குடும்பங்களும், மட்டக்களப்பில் 84640 குடும்பங்களும், அம்பாறையில் 79451 குடும்பங்களும் இருக்கின்றனர்.

2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மகிந்த சிந்தனையின் அடிப்படையிலேயே சமுர்த்தி அதிகார சபையை அமைச்சு ஒன்றின் கீழ் இணைத்து அதற்கு விஷேடமான நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்கான பரிந்துரைகள் முன் மொழியப் பட்டிருந்தன.

அதற்கமைய 2010ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திவிநெகும வேலைத்திட்டத்தோடு பொருளாதார அமைச்சின் கீழ் சமுர்த்தி அதிகார சபை இணைக்கப்பட்டது. இப்போது திவிநெகும சட்ட அங்கீகாரத்தைப் பெறாவிட்டால் சமுர்த்திப் பணியாளர்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

ஒருவேளை சமுர்த்தி அதிகார சபையை வேறு ஒரு அமைச்சுடன் இணைத்து சமுர்த்தி பயனாளிகளுக்கு பாதகம் வராதபடி அரசு நடவடிக்கை எடுக்கமுடியாதா என்ற கேள்விகள் எழுப்பப்படலாம். ஆனால் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையிலும், நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள நிலையிலும் திடீரென சமுர்த்தி அதிகார சபையை திவிநெகுமவிலிருந்து பிரித்து வேறு ஒரு அமைச்சுக்குள் இணைப்பது சாத்தியமில்லை. உதாரணத்துக்கு 2005இல் ஜனாதிபதி கூறியது, 2010இல் அமுலுக்கு வந்தது இப்போது 2013இல்தான் சட்ட அங்கீகாரத்துக்கு வருகின்றது என்றால் இதற்கே எட்டு ஆண்டுகள்பிடித்துள்ளதை அவதானிக்கமுடியும்.

இந்தச் சிக்கலில் திவிநெகும சட்ட அங்கீகாரத்தைப் பெறாதுபோகுமானால், தெற்கு, மலையக அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படுவதுபோல் சமுர்த்தி பயனாளிகளும் பாதிக்கப்படும் நிலை உருவாகும். இதனால் ஏனைய மாவட்டங்களிலுள்ள பயனாளிகளை விடவும், மூன்று தசாப்தத்துக்கும் மேலாக பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் கூடுதல் பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கவேண்டியதாக இருக்கும்.

(07ஆம் பக்கத் தொடர்...) **அமெரிக்கத் தூதுவரின்...**

இது தொடர்பிலான கலந்துரையாடல், சோவா நிறுவன பிரதிநிதிகள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பெரிய புல்லுமலை மக்கள் இணைந்து பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோருடன் நடைபெற்றிருந்தது.

இக் கலந்துரையாடலில், பெரிய புல்லுமலை பிரதேசத்தில் குடியேறிவரும் மக்களின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் சோவா நிறுவன பிரதிநிதிகள் அப்பிரதேசத்தில் தங்கியிருந்து அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறித்தும், இப்பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ள மக்களின் சந்தை வசதிகளை மேம்படுத்தும் வகையில் சோவா நிறுவனம் இந்தத் தற்காலிக சந்தையை அமைக்கவுள்ளமை குறித்தும் கலந்துரையாடி முடிவுகளும் எடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பிரதேசமான புல்லுமலைப்பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தினைத் துரிதப்படுத்துவதற்கான செயற்திட்டத்திற்கு யூ.எஸ்.எயிட் நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தில் பஸ் நிலையம், சந்தைக்கட்டடத் தொகுதி, மருத்துவ சிகிச்சை நிலையம், மற்றும் மும்மதங்களினதும் வணக்கஸ்த்தலங்கள் என்பன அமைக்கப்படவுள்ளன.

அதேநேரம், ஆலயங்களுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கான தங்குமிட வசதிகளை அமைத்தல், பாதிக்கப்பட்டுள்ள விநாயகர் ஆலயத்தினை அமைத்தல், கிறிஸ்தவ தேவாலயத்துக்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கு தங்குமிடத்தை ஏற்படுத்தல் எனப் பல விடயங்கள் குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

புல்லுமலைப் பிரதேசம், யுத்தம் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை 95 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர். காடுகள் வளர்ந்து மிக மோசமாக உள்ளதனால் இன்னமும் 500இற்கும் அதிகமான குடும்பங்கள் இப்பிரதேசத்தில் மீளக் குடியேற முடியாதநிலை காணப்படுகிறது. அத்துடன் இருப்பிட வசதிகள் இன்மையாலும் மக்கள் குடியேறுவதில் தயக்கம் காட்டிவருகின்றனர்.

மட்டு- அம்பாறை மாவட்டங்களின் எல்லைக்கிராமங்களான பெரிய புல்லுமலை, சிப்பிமடு, கோப்பாவெளி, சமகிபுர, பதியத்தலாவ போன்ற இடங்களிலிருந்து கடந்த கால யுத்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் மகாஓயா பிரதேச செயலாளர் பிரிவுகளில் தங்கியுள்ளனர்.

இந்த இடத்தில், அமெரிக்க நாடானது, தமது நிறுவனமான யு.எஸ். எயிட் மூலமாக மேற்கொண்டு வரும் திட்டங்கள் அவற்றின் பயன்கள் குறித்துச் சிறிது ஞாபகப்படுத்த வேண்டும்.

அதேநேரம், கடந்த 2010 ஆம்ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அப்போதைய மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் மில்ரோய் பெர்ணாண்டோ வருகை தந்திருந்தமையும், அதன்போது, பெரிய புல்லுமலை ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆற்றிய உரையும் நினைவுபடுத்தப்பட்ட வேண்டும் என நினைக்கிறேன்.

இரண்டரை இலட்சம் பேர் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த போது இருந்த கவனம் உங்களுடைய விடயங்களில் இருக்கவில்லை. 30 வருடங்களாக நடைபெற்ற பிரச்சினைகளுக்கும் அதன் பாதிப்புகளுக்கும் இருசாராரும் பொறுப்பாகும்.

நீங்கள் உங்களுடைய சொந்தஇடங்களுக்கு சென்று இருந்தால் அங்கு அனைத்துவிதமான வசதிகளையும் செய்துதருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்போது நீங்கள் தங்கியுள்ள இடங்களில் இருக்க விரும்பினாலும் இருக்கலாம். உங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது எங்களுடைய நோக்கமாகும். உங்களுடைய தேவைகள் குறித்து எங்களுக்கு தெரிவியுங்கள். நமது ஜனாதிபதியின் நோக்கத்துக்கு அமைவாக அனைத்து மக்களுடைய தேவைகளையும் நிறைவேற்றவே செயற்பட்டு வருகிறோம் எனத் தெரிவித்திருந்தார்.

அரசியலுக்கப்பால் தன்னாலான அனைத்து உதவிகளை யும் மீளக்குடியேறும் பெரிய புல்லுமலை மக்களுக்காக செய்து தர நடவடிக்கை எடுத்துவரும் அமெரிக்கா தொடர்ந்தும் தாம் சார்ந்த நிறுவனங்களின் ஊடு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம்.

அதனையும் தாண்டி அரசியலுக்கானதாக அமைத்துக்கொள்ளாது அழிவுற்ற மக்களுக்கானதாக அமெரிக்க நாடானது வடக்குக் கிழக்கில் அதிகமான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதும் சாதாரண மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# டயானாவின் காரின் விலை 10 கோடி

**மறைந்த** பிரிட்டிஷ் இளவரசி டயானா பயன்படுத்திய "ரோல்ஸ் ராய்ஸ்' கார், 10 கோடி ரூபாய், ஆரம்ப விலைக்கு ஏலம் விடப்பட உள்ளது. பிரிட்டிஷ் இளவரசர் சார்லசின் முதல் மனைவியான டயானா, சார்லஸ்-கமீலா பார்க்கர் உறவினால் வெறுப் படைந்து 96ஆம் ஆண்டு, விவாகரத்து பெற்றார். 97ஆம் ஆண்டு, காதலர் தோடி அல் பயத்துடன், பாரிசில் பயணம் மேறங்காணட ப்போது, ஏறபடட கார விபத்தில் பலியானார். இவையெல்லாம் உலகம் இருக்கும் வரை நினைவில் இருக்கப் போகின்ற சமாசாரங்கள்.



சார்லஸ் - டயானா தம்பதியர், அமெரிக்காவுக்கு செல்லும் போது, ரோல்ஸ் ராய்ஸ் என்கின்ற காரை பயன்படுத்தினர். வாஷிங்டனில் உள்ள, பிரிட்டன் தூதரகத்தில் இந்த கார் வைக்கப்பட்டுள்ளது. 79ஆம் ஆண்டு இந்த கார் வாங்கப்பட்டாலும், குண்டு துளைக்காத வகையில், ஒரு கோடி ரூபாய் செலவில் மாற்றம் செய்யப்பட்டு 82ஆம் ஆண்டுதான் பயன்பாட்டுக்கு வந்தது. வெள்ளியின் நிறம் கொண்ட இந்த கார், எதிர்வரும் 9ஆம் திகதி, சிகாகோவில் ஏலம் விடப்பட உள்ளது. இக் காரின் ஆரம்ப ஏல விலை, 10 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கார் விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை, டயானா ஆரம்பித்த, புற்றுநோயால் பாதித்த குழந்தைகளுக்கான அறக்கட்டளைக்கு அளிக்கப்பட உள்ளது.

# கண்ணில் பட்டது பண்டைய நகரம்

ஐரோப்பா கண்டத்தில் உள்ள பல்கேரியா நாட்டில் கிறிஸ்து பிறப்புக்கு முந்தைய 4700 ஆண்டுகள் பழமையான நகரம் ஒன்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர்.

அந்த நாட்டின் புரோவாடியா நகருக்கு அருகே பூமிக்கடியில் இருந்த சுற்றுச்சுவருடன் கூடிய ஒரு 2 அடுக்கு



மாடி வீடு மற்றும் கல்லறைகளை அவர்கள் தோண்டியெடுத்துள்ளனர். கி.மு. 4700 - 4200 ஆண்டுகள் வரை பழமையானதாக இருப்பதாக கணிக்கப்பட்டுள்ள இந்த நகரில் 350 குடும்பங்கள் வாழ்ந்ததாக சொல்லப்படுகிறது.

இந்த இடம் உப்பு உற்பத்தி மையமாக இருந்திருக்க வேண்டும். இங்குள்ள நீரூற்று தண்ணீரை கொதிக்க வைத்து உப்பு செங்கற்களை அவர்கள் உற்பத்தி செய்து, இறைச்சியை பாதுகாப்பதற்கு அதை பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்த நகரத்தை நிர்மாணிக்க உதவிய இந்த உப்புக்கு அப்போது நல்ல மவுசு இருந்திருக்கிறது. அதை அவர்கள் வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதியும் செய்திருக்கிறார்கள்.

கடந்த 40 வருடங்களுக்கு முன்பு இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தங்க குவியலுக்கும் தற்போதைய கண்டுபிடிப்பிற்கும் தொடர்பு இருக் கலாம் என்றும் கூறப்படுகிறது. உலகின் பழமையான நாகரிகமான கிரேக்க நாகரிகத்திற்கும் 1500 ஆண்டுகள் இது பழமையானது என்று கூறப்படுகிறது.

ரோமானியா மற்றும் பல்கேரியா பகுதிகளில் உள்ள உப்பு, தாமிரம் மற்றும் தங்கச் சுரங்கங்களே இந்த நகரம் இருந்ததற்கான சான்றாகவும் சொல்லப்படுகிறது.



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 35 துன்பியல் தொடர்

எனக்கு அவன் கேட்டதின் அர்த்தம் புரியவில்லை.

ஆனாலும் நான் கைதுசெய்யப்பட்ட பின்பு, எனது வீட்டுக்காரர்கள் யாராவது அவர்களது ஆட்களைப் பிடித்து எனது விடுதலைக்கு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறார்களோ எனவும், அதனைத்தான் இவன் பூடகமாகக் குறிப்பிடுகிறானோ எனவும் எண்ணினேன். ஆனால் எனது மனைவியைப் பொறுத்தவரை எவ்வித அரசியல் ஈடுபாடும் இல்லாதவர் என்பதுடன், இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற அனுபவமும் இல்லாதவர். 'சரி, யாரோ சிலர் என்மீது அக்கறை கொண்டு முயற்சி எடுத்திருந்தாலும்கூட, அது இவர்களைப் பொறுத்தவரை நன்மைக்குப் பதிலாக தின்மையையே கொண்டு வரும்' என அஞ்சினேன்.

நான் அமைதியாக நிற்பதைப் பார்க்க அவனுக்கு கோபம் தலைக்கேறியிருக்க வேண்டும். "என்னடா நான் கேக்கிறன். நீ ஒண்டும் கேக்காத செகிடன் போலை நிக்கிறாய்" என அதட்டினான்.

நான், "நீங்கள் என்ன கேக்கிறியள் எண்டு விளங்கல்லை" என ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கூறினேன்.

"இப்ப ஒண்டும் விளங்காதுதான். போகப்போக எல்லாம் விளங்கும்" என்று சொல்லிவிட்டு, என்னை அங்கு அழைத்து வந்தவனை நோக்கி, "கம்மாலைக்கு கூட்டிக்கொண்டு போய் காலிலை உள்ளதை வெட்டிவிடு" என்றான்.

எனக்கு காந்தி சொன்னதன் அர்த்தம் புரிந்தும் புரியாததாக இருந்தது. அவன் முதல் என்னிடம் கேட்ட விடயங்களையும், இப்பொழுது சொன்ன விடயத்தையும் வைத்துப் பார்க்கும்போது, 'அது இதுவாகத்தான் இருக்க வேணும்' என்ற ஒரு நப்பாசை மனதில் கிளர்ந்து எழுந்தது. நான் என்னை கம்மாலை நோக்கி அழைத்துச் சென்றவன் பின்னே தத்தித்தத்திச் சென்றேன்.

கம்மாலையில் இருந்தவன் என்னை வியப்புடன் பார்த்தான். ஏனெனில் ஐந்து தினங்களுக்கு முன்னர், அவன்தான் எனது கால்களில் அந்தச் சங்கிலிகளை 'வெல்டிங்' செய்து ஒட்டிவிட்டவன்.

அவன் என்னை அழைத்து வந்தவனைப் பார்த்து, "என்ன பூட்டுப் போடட்டாமோ?" என வினவினான். சிறைக்குள் சிலரின் கால்களில் சங்கிலி வெல்டிங் செய்து ஒட்டப்படாமல், சிறிய பூட்டுகள் மூலம் பிணைக்கப்பட்டிருந்ததைக் கண்டிருந்தேன்.


"இல்லை வெட்டிவிடட்டாம்" என என்னை அழைத்து வந்தவன் கம்மாலைக்காரனிடம் சொன்னான்.

"ஐயாவுக்கு கொஞ்சம் வெள்ளி திசை இருக்குது போலை" என கம்மாலைக்காரன் கிண்டல் செய்துவிட்டு, எனது கால்களில் இருந்த சங்கிலிகளை ஒரு வெட்டிரும்பு மூலம் வெட்டிவிட்டான். சங்கிலி போடும்போது எப்படி அவஸ்தைப்பட்டேனோ, அதேபோல வெட்டும் போதும் அவஸ்தைப்பட நேர்ந்தது. அவன், நான் ஒரு மனிதன் என்பதை மறந்து, தான் விரும்பியவாறு எனது கால்களை மடக்கியும் திருப்பியும்தான் அந்தச் சங்கிலிகளை வெட்டி முடித்தான். இருந்தாலும் எனது கால்பூட்டுகள் கழற்றப்பட்டதில் உள்ளூர பரம சந்தோசமாக இருந்தது. ஆனால் அதை நான் வெளிக்காட்டவில்லை. வெளிக்காட்டினால், எனது மகிழ்ச்சியை நிறுத்துவதற்காகவே மீண்டும் சங்கிலி போட்டுவிடுவார்கள்!

அவன் மீண்டும் என்னை காந்தியிடம் அழைத்துச் சென்றான். சங்கிலி வெட்டப்பட்டாலும், சிறிது வித்தியாசமாகவே என்னால் நடக்க முடிந்தது. காந்தி அதைப் பார்த்துவிட்டு, "என்ன நடிச்சுக் காட்டிறியா?" என உறுமினான். பின்னர் என்னைப் பார்த்து, "சங்கிலி இல்லைத்தானே எண்டிட்டு ஓட வெளிக்கிட்டியோ, பிறகு காலுக்கு கையுக்கு இடுப்புக்கு கழுத்துக்கு எண்டு எல்லா இடமும் சங்கிலி போட்டு வடிவு பாக்க வேண்டிவரும்" என எச்சரிக்கை செய்தான்.

'நானாவது ஓடுறதாவது' என நினைத்துக் கொண்டு, அவன் சொன்னதை ஏற்றுத் தலையை ஆட்டினேன். பின்னர் அவன் என்னை அழைத்துக்கொண்டு போய் சிறைக்குள் விடும்படி பணித்தான். நான் உள்ளே சென்றபோது, முதலில் என்ன ஏது என எனது முகத்தை ஏறிட்டு நோக்கிய சக கைதிகள், பின்னர் நான் கால்களில் சங்கிலி இல்லாமல் சுதந்திரமாக நடந்து வருவதைப் பார்த்துவிட்டு, என்னை ஆச்சரியத்துடன் நோக்கினர். அந்தப் பார்வைகளில் பலவித அர்த்தங்கள் இருந்தன. 'நீ வலு கெதியாய் வெளியே போய்விடுவாய்!' என்ற அர்த்தம், அந்தப் பார்வைகளின் ஒட்டுமொத்தச் செய்தியாக இருந்ததை அவதானித்தேன்.

எனது காலை உணவான வெண் சீனிப் பொங்கலை உண்ட பின், தயாபரன் வந்து என்னை விசாரணைக்காக அழைத்தான். அவனுடன் புறப்பட்டேன். அவன் அன்றைய தினம் அழைத்ததுக்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும் என எண்ணினேன். அவன் புத்தாண்டு தினத்தில் விசாரணைகளை ஆரம்பிக்க விரும்பியிருக்கலாம். புதிய கைதி என்றபடியால், அதுவும் அரசியல் கட்சியொன்றைச் சேர்ந்த கைதி என்றபடியால், பல சுவாரசிய விடயங்களை அறிவதற்கு ஆவல் பட்டிருக்கலாம். அல்லது அவனது தலைமை ஒரு குறிப்பிட்ட காலவரையறையை எனது விசாரணைக்கு வழங்கியதால், விசாரணையைத் துரிதப்படுத்துவதற்காக உடனேயே ஆரம்பித்திருக்கலாம்.



எது எப்படியிருந்தாலும் என்னைப் பொறுத்த வரையிலும்கூட, எனது விசாரணை விரைவில் முடிந்து, அவர்கள் எனக்கான தண்டனையை - அது மரண தண்டனையாக இருந்தாலும்கூட - விரைவில் வழங்கிவிட வேண்டும் என விரும்பினேன். (புலிகளால் கைதுசெய்யப்படுபவர்கள் திரும்பி வருவதில்லை என்ற ஒரு நியதி இருந்ததால், நானும் அவ்வாறு கருதினேன்)

நடந்து செல்லும்போது, "என்ன, கால் சங்கிலி வெட்டியாச்சுப் போலை?" என எனது கால்களைப் பார்த்துக்கொண்டே வினவினான்.

"ஓம்!" எனப் பதிலளித்தேன். அவன் சிரித்துவிட்டு, தொடர்ந்து நடந்தான்.

வழமை போலவே விசாரணைக் குடிலில் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டோம். இருப்பதற்கு சென்றமுறை போல நாற்காலியும் தரப்பட்டிருந்தது.

அவன் தனது கையில் கொண்டு வந்த அல்லது பைல்களையும், எழுதுதாள்களையும் எடுத்து ஒழுங்குபடுத்திய பின்னர், பேனாவைத் திறந்து வைத்துக்கொண்டு சிறிது நேரம் யோசித்தான். பின்னர் என்னை நோக்கி, "இவ்வளவு நாளும் நடந்தது குடும்ப விபரம் பற்றிய விசாரணை. இனி நடக்கப் போறது தான் உங்கடை குற்றச்சாட்டு பற்றிய உண்மையான விசாரணை. இந்த விசாரணை முதலிலை பேப்பர் பேனையுடன்தான் ஆரம்பமாகும். விசாரணையிலை நீங்கள் தொடர்ச்சியாக பொய் சொல்லி, விசாரணைக்கு ஒத்துழைக்கல்லை எண்டால், பிறகு கம்பியள் தடியளாலையும் விசாரிக்க வேண்டிவரும். அதைவிட கடுமையான முறையளும் இருக்கு. எல்லாம் உங்களைப் பொறுத்தது" என எச்சரிக்கும் பாணியில் சொல்லிவிட்டு என்னைப் பார்த்தான்.

நான், "அப்படியெல்லாம் ஒழிக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. நான் பிழை விட்டிருந்தால்தான் ஒழிக்க வேணும். நான் செய்த குற்றம் என்ன எண்டதே எனக்குத் தெரியல்லை" எனக் கூறினேன்.

"அப்ப நீங்கள் ஒரு பிழையும் செய்யல்லை எண்டு கூறுறியளோ?" எனக் கேட்டான்.

நான் அவனை ஆரம்பத்திலேயே கோபப்படுத்த விரும்பவில்லை. எனவே, "அப்பிடி நான் வாதாடல்லை. என்ரை குற்றச்சாட்டு என்னண்டு தெரியாததாலை தான் அப்படிக் கூறினேன்" எனச் சொல்லிச் சமாளித்தேன்.

"சரி விசாரணை நடக்கேக்கை எல்லாம் தெரியும்தானே?" எனச் சொல்லிவிட்டு விசாரணையை ஆரம்பிக்கத் தயாரானான். அவனது பேச்சுத்தொனியில் முந்தைய நாட்களைவிட சற்று கடுமை இருப்பது போலத் தோன்றியது. நானும் அவனது கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரானேன்.

எனது அரசியல் பிரவேசத்துக்கான காரணத்தை அறிய முயன்ற முதற்கட்ட விசாரணை.

தயாபரன் நடாத்த ஆரம்பித்த முதற்கட்ட விசாரணையை வைத்து, என்ன குற்றச்சாட்டில் என்னைக் கைதுசெய்துள்ளார்கள் என அறியலாம் என நான் கருதினேன்.

ஆனால் அதற்கு மாறான முறையில் அவனது விசாரணை ஆரம்பமானது. அவன் முதலில் எனது அரசியல் வாழ்வின் ஆரம்பம் பற்றிச் சொல்லும்படி என்னிடம் கேட்டான். அதாவது எந்த ஆண்டில் நான் அரசியலில் ஈடுபடத் தொடங்கினேன் எனக் கேட்டு, அதிலிருந்து விசாரணையைத் தொடர விரும்புவது போலத் தோன்றியது.

நான் 1963ம் ஆண்டு, எனது 15வது வயதில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் "கல்லூரியில் கல்வி கற்பதற்காகச் சென்றபோதே அரசியல் ஈடுபாடு "'ஏற்பட்டதாகக் கூறினேன். அரசியல் மட்டுமின்றி, நவீன இலக்கியத்துடனும் இக்காலகட்டத்திலேயே பரிச்சயம் ஏற்பட்டதையும் கூறினேன்.

அவன் உடனும் என்னை இடைமறித்து, "அப்பவும் இனப்பிரச்சினை கடுமையாக இருந்ததா?" என வினவினான்.

நான் அதற்கு சற்று விளக்கமாகப் பதிலளித்தேன். 1956ல் எஸ்.டபிள்யூ. ஆர்.டீ.பண்டாரநாயக்கவின் ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து, தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதையும், அதை எதிர்த்து தமிழரசுக் கட்சி நடாத்திய போராட்டத்தையும் எடுத்துக் கூறினேன். பின்னர் 1957ல் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக உருவான பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையையும் பற்றிக் கூறினேன்.

அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவிடாமல், அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பௌத்த பிக்குகளையும் அழைத்துக் கொண்டு கொழும்பிலிருந்து கண்டிக்குப் பாத யாத்திரை சென்றதையும் குறிப்பிட்டேன். பின்னர் ஐ.தே.கவின் ஏற்பாட்டில், பௌத்த பிக்குகள் கொழும்பில் ரோஸ்மீட் பிளேசிலிருந்த பண்டாரநாயக்கவின் வீட்டை முற்றுகையிட்டதையும், அதன் காரணமாக பண்டாரநாயக்க அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்ததையும் எடுத்துக் கூறினேன்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



### பேதைமை

**பேதைமை என்பதொன்று யாதெனின்**
**ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்.**

பேதைமை என்று சொல்லப்படுவது யாது என்றால், தனக்குக் கெடுதியானதைக் கைக்கொண்டு ஊதியமானதைக் கைவிடுதலாகும்.

குறள்:831

# எது வேண்டும்?

**பாண்டியனும், ராசேந்திரனும்** குருகுல வாசம் முடிந்து விடைபெறுவதற்காக குருவிடம் வந்தனர்.

"நீங்கள் விடைபெறும் முன்பாக என்னிடம் என்ன வேண்டுமென்றாலும் கேட்கலாம்?"என்று குரு சொன்னார்.

'நான் நிறைய பொருளீட்டும் வழிமுறையை நீங்கள் சொல்ல வேண்டும்" என்று கேட்டான் பாண்டியன்.

ராசேந்திரனோ, 'எனக்கு எதிலும் அளவான ஆசை வேண்டும். போதும் என்ற மனதிற்கான வழிமுறைகளை எனக்குச் சொல்லித் தந்தால்போதும்'' என்றான்.

இருவரின் விருப்பத்திற்குத் தேவையான அறிவுரைகளைக் கூறி ஐந்தாண்டு கழித்து தன்னைப் பார்க்க வருமாறு அனுப்பி வைத்தார்.



இருவரும் தங்களுக்குத் தெரிந்த வாணிபத்தை செய்யத் தொடங்கினர். பாண்டியன் வட்டித் தொழில், வாணிபத் தொழில், பட்டுத் தொழில் என்று பலவேறு தொழில்கள் செய்து செல்வத்தை அளவுக்கு மிஞ்சி சம்பாதித்துக் கொண்டிருந்தான். இது போதாதென்று வெளிநாடுகளுக்கும் சென்று சம்பாதித்தான்.

இவ்வளவு சம்பாதித்தும் அவன் பண ஆசை அவனை விடவில்லை. இதனால் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை.

ராசேந்திரன், தனக்குத் தெரிந்த வேலைகளைச் செய்தாலும் பண ஆசை கொண்டு மகிழ்ச்சியைத் தொலைக்கவில்லை. எதிலும் அளவோடு சம்பாதித்தான். குடும்பத்தோடும் மகிழ்ச்சியாக இருந்தான்.

ஐந்தாண்டு கழித்து குருவிடம் இருவரும் வந்தனர். பாண்டியன் தான் மகிழ்ச்சியாக இல்லை என்று கூறினான். ராசேந்திரன் மகிழ்ச்சிக்கும், செல்வத்துக்கும் பஞ்சமில்லை என்றான். குரு ராசேந்திரனை பாராட்டினார்.

உடனே பாண்டியன், "ராசேந்திரனை என்னை விட கெட்டிக்காரன் என்று சொல்கிறீர்கள். ஆனால் அவன் என்னளவு சொத்து சேர்க்கவில்லையே?" என்று பெருமை அடித்துக் கொண்டான்.

குரு பேசினார், ''உனக்கு இருப்பதைக் கொண்டு திருப்தியோடு வாழ முடிகிறதா, ஆனால் ராசேந்திரனிடம் செல்வம் நிறைய இல்லாவிட்டாலும், போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து என்ற இலக்கணப்படி வாழ்கிறானே, குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்கிறானே, நீ ஏராளமான பணம் வைத்திருந்தும் உன்னிடம் மகிழ்ச்சி இல்லையே, பணம் சம்பாதிப்பது மகிழ்ச்சியை அனுபவிக்கத்தானே? பணத்தை அழகு பார்க்கவா?" என்று கேட்டார்.

பாண்டியன் பதில் பேச முடியாமல் தலைகுனிந்தான்.

"மகிழ்ச்சியோடு வாழ, போதும் என்ற மனம்தானே தேவை. வாழ்க்கை என்பது அழகிய பூஞ்சோலை. இவன் அந்த வாழ்க்கை வாழ்கிறான். நீ ஒன்றும் இல்லாத பாலைவன வாழ்க்கை வாழ்கிறாய்" என்றார் குரு.

"ஆமாம் குருவே, என் ஆசையின் காரணமாக பேராசை வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன். உணவு சமைப்பது சாப்பிடுவதற்குத்தான், அழகு பார்க்க அல்ல என்பதை விளங்கிக் கொண்டேன். இனி போதும் என்ற மனதோடு வாழ்க்கையை மனநிறைவோடு அனுபவிப்பேன்" என்றான் பாண்டியன்.

குரு, இருவரையும் வாழ்த்தி வழியனுப்பினார்!

## தகவல் களஞ்சியம்

- உலகிலேயே நதியின் நடுவே அமைந்துள்ள தீவு மஜ்லி (பிரம்ம புத்திரா நதி).
- அஸ்கார்பிக் அமிலம் எனப்படுவது விற்றமின்-சி.
- இந்தியாவிலேயே முழுமையாக உருவாக்கப்பட்ட முதல் செயற்கை கோள் இசாட்.
- சுரப்பிகளில் பிரதானமானது பிட்யூட்டரி சுரப்பி.
- அமேசன் நதி தென் அமெரிக்காவில் பாய்கிறது.
- கடல் மட்டத்துக்கு கீழே உள்ள நாடு டென்மார்க்.

## சரியா? தவறா?

### சூரியன் உதிக்கும் போது அதன் முதல் ஒளி விழும் மாநிலம் அசாம்.



இது தவறு. சூரியன் உதிக்கும்போது அதன் ஒளியை முதலில் பெறும் மாநிலம் அருணாச்சல பிரதேசம் இதனால்தான் இந்த மாநிலத்திற்கு ஒளியேற்றும் நிலம் என்று சிறப்பு பெயர் உண்டு. ஏராளமான பள்ளத்தாக்குகளும், மலைகளும் நிறைந்த இந்த மாநிலத்தில் உள்ள டாங் பள்ளத்தாக்கில் தான் உதயத்தின்போது சூரியனின் முதல் வெளிச்சம் விழுகிறது.

### குளோபல் வோர்மிங் எனப்படும் புவி வெப்பமடைதல் என்பது இயற்கையான செயல்தான்!



இது தவறு. உலகம் முழுவதும் அச்சுறுத்தும் வகையில் வளர்ந்து வரும் புவி வெப்பமடைதல் என்பது இயற்கையான செயலல்ல. மனித தவறுகள்தான் இதற்கு காரணம் ஆகும். இயற்கை எரிபொருளான மரங்கள், நிலக்கரி, பெற்றோலிய பொருட்கள், இயற்கை எரிவாயு போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் காபன் ஒக்சைட்டின் அளவு அதிகரித்துக்கொண்டே போகிறது. இதனால் தான் புவி வெப்பமடைதல் நிகழ்கிறது.

## டைவிங்

1800ஆம் ஆண்டுகளில் இருந்தே டைவிங் விளையாட்டு பிரபலமாக இருந்து வருகிறது. குறிப்பாக ஐரோப்பிய ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்- வீராங்கனைகள் டைவிங்கில் ஆர்வத்துடன் இருந்தனர்.




இவர்கள் கோடை காலங்களில் கடல்நீரில் ஏரோபிக்ஸ் பயிற்சிகள் செய்வது வழக்கம். டைவிங் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் ஆகிய இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியான விளையாட்டுகள்தான். இருப்பினும் டைவிங் விளையாட்டு நீச்சலுடன் தொடர்புடைய விளையாட்டாக கருதப்படுகிறது.

**சாதனையாளர்கள்**

1988ஆம் ஆண்டு சியோல் ஒலிம்பிக் போட்டியின் போது டைவிங் பந்தயத்தில் அமெரிக்க வீரர் கிரேக் லகானிஸ் கலந்து கொண்டார். ஒரு போட்டியின் போது அவரது டை விங் பலகையில் அவர் தலை மோதியது. இதில் லேசான காயம் அடைந்த போதிலும் அடுத்து நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு 2 தங்க பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்




போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 19.11.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல.965
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

## 7 வித்தியாசங்கள்



இரண்டு படத்திற்கும் இடையே சுமார் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## விடுகதைகள்

1. உதைக்கத் தெரிந்தவனுக்கு உழைக்கவும் தெரியும் - அவன் யார்?
2. தென்றல் வீச, வீதியெல்லாம் முத்துகள் உதிர்கிறது - அது என்ன?
3. கிட்ட இருக்குது பட்டணம், ஆனால் எட்டித்தான் பார்க்க முடியவில்லை - அது என்ன?
4. இறக்கை உண்டு பறக்காது, எட்டி உதைத்தால் தாங்க முடியாது - அது என்ன?
5. தண்ணீரும், தரையும் இல்லாமல் வளரும் செடி - அது என்ன?
6. குறுக்கே வெட்டி சக்கரமும், நெடுக வெட்டி சங்கும் கண்டேன் - அது என்ன?

விடைகள்:
1. கழுதை, 2. பனி, 3. முதுகு, 4. தீக்கோழி, 5. தலைமுடி, 6. வாழைப்பழம்

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 963

பரிசுக்குரியவர்:
கு.டர்சிகா, 2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்

01. J.அபிஷன், அம்பாழ் வீதி, எழுத்தூர், மன்னார்.
02. எஸ்.ஷர்மி, எழுத்தூர், மன்னார்.
03. எம்.ஸ்ரீபன், கோளாவில் -01, அக்கரைப்பற்று.
04. ம.தாட்சாயினி, பரந்தன், கிளிநொச்சி.
05. கு.ஆர்த்தி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
06. மு.ஆமில், ஹோனமுல்லை, பாணந்துறை.
07. ச.ஹர்சினி, கடவளை, கினிகத்தேனை.
08. த.பிரகாஷ், மகாவெலமுல்ல, வெள்ளவாய.

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங் கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

130

**கிராமத்துக்குள்** கொள்ளைக்கோஷ்டி புகுந்துவிட்டது என்ற தகவல் பொலிசாருக்கு எட்டியதும் அவர்கள் உடனே புறப்பட்டு வந்தனர்.

கிராம எல்லையில் தனது ஆட்களில் இருவரை மான்சிங் காவலுக்கு நிறுத்திவிட்டுத்தான் சென்றிருந்தான்.

பொலிசார் வருவதைக் கண்டதும் அவர்கள்தான் ஓடி வந்து தகவல் கொடுத்தனர்.

> “உங்களுக்கு ஸ்ரீராம் ஆட்களில் தானே கோபம்? அவனது சகோதரி அடுத்த வீட்டில்தான் இருக்கிறாள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் அம்மா.” என்றாள்.
>
> பூலானை நிர்வாணமாக்கி விட்டு ஸ்ரீராமும், குசுமாவும் பல்லைக்காட்டி இளித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் பக்கத்தில் நின்றவள் ஸ்ரீராமின் சகோதரி தான். பூலான் கூனிக் குறுகிக் கொண்டு, நெஞ்சு வெடித்துவிடும் போல பீறிட்ட துயரத்தை அடக்கிக் கொண்டு தவித்தபோது "தேவடியாள்" என்ற சொல்லால் எறிந்தவள் இவள்தான். அந்த நினைவு வந்ததும் பூலானுக்கு தன் முன்பாக நிற்பவள் பெண்ணாகவே தெரியவில்லை.”

“பொலிஸ்... பொலிஸ் வருகிறது” என்று முதலில் பூலானிடம் தான் சொன்னார்கள். பூலானுக்கு அவர்கள் சொன்னது காதில் விழுந்தமாதிரித் தெரியவில்லை.

சுட்டுக்கொல்லப்பட்ட பண்ணையார்கள் இரத்த வெள்ளத்தில் எருமைகள் போல விழுந்து கிடந்தார்கள். கிராமம் எங்கும் அவலக்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

அன்று ஸ்ரீராமும் அவன் ஆட்களும் தன்னை வதைத்த போது கிராமமே கைகொட்டிச் சிரித்த காட்சியை மனக் கண்ணில் நிறுத்திப் பார்த்தாள் பூலான்.

அதனால் அவலக்குரல்கள் எதுவும் அவள் மனதில் சங்கடத்தையோ, பரிதாபத்தையோ தோற்றுவிக்கவில்லை.

பூலானிடம் சொன்ன தகவலை மான்சிங்கிடம் ஓடிப்போய் தெரிவிக்க, அவன் உஷாரானான்.

நெருக்கடியான தருணங்களில் தங்கள் குழுவினரை எச்சரிக்கவும், வாபஸ் பெறச் செய்யவும் விசில் ஊதுவதுதான் வழக்கம்.

அன்று மான்சிங் விசில் எடுத்து ஊதினான். பண்ணயாளர் வீடுகளுக்குள் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தவர்கள் விசில் சத்தம் கேட்டதும் வெளியே ஓடி வந்தார்கள்.

மான்சிங் பூலானைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினான்.

அப்போதுதான் பூலானுக்குச் சூழ்நிலை பின் விபரீதம் புரிந்தது.

அந்தக் கிராமத்தில் இருந்து வெளியே செல்லக்கூடிய வழிகள் பற்றி முன்கூட்டியே மான்சிங் அறிந்துவைத்திருந்தான்.

அதனால் பொலிசார் கிராமத்துக்குள் புகுந்தபோது, மறு பாதைவழியாக தன் ஆட்களை அழைத்துக் கொண்டு வெளியேறினான் மான்சிங்.

பொலிசார் தங்களைப் பின் தொடர்ந்து வராமல் இருப்பதற்காக, வானத்தை நோக்கி சுட்டுக்கொண்டுதான் அவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறினார்கள்.

பல கிராமங்களைச் சுற்றிக் கொண்டுதான் அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. செல்லும் வழியில் ஓரிடத்தில் சற்றுநேரம் ஓய்வெடுத்தார்கள்.

பண்ணையாளர்கள் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளையும், பணத்தையும் பூலானிடம் கொடுத்தார்கள்.

பூலானுக்கு எல்லாமே பிரமிப்பாக இருந்தது. மான்சிங்கை நோக்கினாள்.

“பெற்றுக் கொள்ளுங்கள். குழுவுக்கு யார் தலைமை தாங்குகிறார்களோ, அவரிடம்தான் கொள்ளையிட்ட பொருட்களை ஒப்படைக்கவேண்டும். அதுதான் எங்கள் விதிமுறை. இவற்றை உங்கள் கைகளால் பாபாவிடம் ஒப்படைக்கலாம்.” என்றான் மான்சிங்.



பூலான் அனைத்தையும் பெற்றுக் கொண்டாள். ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டாள். அந்த மூட்டையை ஒருத்தன் சுமந்து செல்ல, பாபாவின் இருப்பிடம் நோக்கிச் சென்றார்கள்.

விக்ரம் மல்லாவைப் பூலான் நினைத்துக்கொண்டாள். மல்லா சொன்னது போலவும், அவன் விரும்பியது போலவும் கொள்ளை ராணியாகத் தான் மாறிவிட்டதை நினைக்க அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

பூலானுக்கு ஆவிகளிலும் நம்பிக்கை இருந்தது. மல்லா ஆவியாகத் திரிந்து இந்தக் காட்சிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பான் என்று நினைத்தாள்.

மல்லா தன்னைவிட்டுப் போக மாட்டான். எப்போதும் தன்னைச் சுற்றித்தான் ஆவியாக நடமாடிக் கொண்டிருப்பான் என்று திடமாக நம்பினாள்.

பூலானும், மான்சிங்கும் தங்கள் ஆட்களோடு பாபாவின் இருப்பிடம் சென்றபோது ஆச்சரியம் காத்திருந்தது.

பாபாவே நேரில் வந்து வரவேற்றார்.

“பூலான்தேவிக்கு ஜே” என்று எல்லோரும் உரக்கக் கோஷித்தனர்.

பாபா தன் கண்களில் சந்தோசம் மின்ன பூலானைப் பெருமையுடன் நோக்கினார்.

பூலானுக்கு உணர்ச்சிமயமான அந்தச் சூழல் நெஞ்சுக்குள் குளிர்ந்த தண்ணீரைக் குடமாகக் கொட்டியது போலிருந்தது.

அன்றிலிருந்து இரண்டாவது நாள் பூலான் தலைமையில் இன்னொரு கிராமத்துக்குள் மான்சிங்கும் பாபாவின் ஆட்களுடன் புறப்பட்டனர். அதுவும் பண்ணையாளர்களின் கிராமம்தான். பண்ணையாளர்களின் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

பண்ணையாளர்களின் நான்கு லொறிகளில் அனைத்தும் ஏற்றப்பட்டன.

“எங்கேயடா ஸ்ரீராம்? பண்ணையார் சாதிக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறவனடா?” என்று கேட்டு ஒரு பண்ணையாரை உதைத்தாள் பூலான்.

பண்ணையாரின் மனைவி பூலானிடம் மன்றாடினாள்.

“உங்களுக்கு ஸ்ரீராம் ஆட்களில் தானே கோபம்? அவனது சகோதரி அடுத்த வீட்டில்தான் இருக்கிறாள். எங்களை ஒன்றும் செய்யாதீர்கள் அம்மா.” என்றாள்.

அதன் பின்னர் பூலான் அங்கு நிற்கவில்லை. ஒரே பாய்ச்சலில் அடுத்த வீட்டுக்குள் பாய்ந்தாள்.

அந்த வீட்டுக்குள் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு அங்கு இருப்பது ஸ்ரீராமின் சகோதரி என்பது தெரியாது.

அவள் ஒரு மூலையில் பயத்தில் நடுங்கிக் கொண்டு நின்றிருந்தாள். அவள் கணவனும் பக்கத்தில் நின்றான்.

பூலான் நேராகச் சென்று “எங்கேயடி உன் அண்ணன் ஸ்ரீராம்?” என்று கேட்டாள்.

அப்படிக்கேட்ட போதுதான் அவள் முகத்தை தெளிவாகப் பார்த்தாள் பூலான்.

எங்கேயோ அவளைப் பார்த்தது போல நினைவு வந்தது. தன் நினைவின் இடுக்குகளில் அவசரமாய்த் தேட நினைவுக்கு வந்துவிட்டது. ஸ்ரீராமுடனும், குசுமாவுடனும் அவளைப் பார்த்திருக்கிறாள் பூலான்.

பூலானை நிர்வாணமாக்கிவிட்டு ஸ்ரீராமும், குசுமாவும் பல்லைக்காட்டி இளித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் பக்கத்தில் நின்றவள் இவள்தான்.

பூலான் கூனிக்குறுகிக் கொண்டு, நெஞ்சு வெடித்துவிடும் போல பீறிட்ட துயரத்தை அடக்கிக் கொண்டு தவித்தபோது “தேவடியாள்” என்ற சொல்லால் எறிந்தவள் இவள்தான்.

அந்த நினைவு வந்ததும் பூலானுக்கு தன் முன்பாக நிற்பவள் பெண்ணாகவே தெரியவில்லை.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்

# மழைகாலத்தில்

## நீங்கள் செய்ய வேண்டியவை



நாடெங்கிலும் பருவமழை தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், மழை காலங்களில் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய மின்பாது காப்பு குறிப்பு:

மழை காலங்களில் டிரான்ஸ்போர்மர்கள், மின்கம்பங்கள், மின் பகிர்வு பெட்டிகள், ஸ்டே வயர்கள் அருகே செல்லக் கூடாது.

மழையாலும், காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின் கம்பி அருகே செல்லக்கூடாது. எங்கேயாவது, மின் கம்பி அறுந்து விழுந்திருந்தால் உடனடியாக மின்சார நிலையத்துக்கு தகவல் கொடுக்கவேண்டும்.

மழை காலங்களில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு தூரமாகச் செல்ல வேண்டும்.

இடி, மின்னலின்போது வெட்டவெளியில் இருக்காமல், கொங்கிரீட் கூரையிலான பெரிய கட்டடங்கள், வீடுகள், பஸ்கள், கார், வேன் போன்றவற்றில் தஞ்சமடைய வேண்டும். அதேநேரம் குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பஸ் நிழற்குடையின் கீழோ ஒதுங்கக் கூடாது.

உரிய இடமில்லை என்றால், மின்கம்பிகள், மின்கம்பங்கள், உலோகக் கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளை தேர்ந்தெடுக்கலாம்.

திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு போன்றவற்றின் அருகில் இருக்கக் கூடாது. டிவி, மிக்சி, கிரைண்டர், கம்பியூட்டர், தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது. ஒவ்வொரு வீட்டிற்கும் எர்த் பைப் போடவேண்டும். மேலும் அதனை குழந்தைகள், விலங்குகள் தொடாத வகையில் அமைத்துப் பராமரிக்கவேண்டும்.

மின்கம்பத்துக்கு போடப்பட்டுள்ள ஸ்டே வயர் அல்லது மின் கம்பத்தில் கயிறு கட்டி துணிகாய வைக்கக் கூடாது.

மின்கம்பத்திலோ, அதை தாங்கும் கம்பிகளிலோ கால் நடைகளைக் கட்டக்கூடாது. மின்கம்பங்களை பந்தல்களாக பயன்படுத்தக் கூடாது. அவற்றின் மீது விளம்பர பலகைகளை கட்டக் கூடாது.

# மருத்துவ குணம் கொண்ட முருங்கை



பச்சைக்கீரைகளில் எவ்வளவோ எண்ணிலடங்கா பயன்கள் இருக்கின்றன. நாம்தான் அதனை முறையாகப் பயன்படுத்துவதில்லை. கீரை வகைகளை உணவோடு சேர்க்கச் சொல்லி சும்மாவா சொன்னார்கள் நம் மூதாதையர்கள்.

கீரை வகைகளில் இரும்புச் சத்து கணிசமாக உள்ளது. அந்தவகையில் முருங்கைக் கீரையின் பயன்களைப் பார்ப்போம். முருங்கை மரம் முழுவதும் மனிதனுக்கு பயனளிக்கிறது.

முருங்கைப் பூ மருத்துவ குணம் கொண்டது. முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடுதணியும். வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய், பித்தமூர்ச்சை இவற்றை நீக்கும் குணம் படைத்தது முருங்கைக் கீரை.

இது ஒரு சத்துள்ள காய். உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்கவல்லது. இதன் சுபாவம் சூடு. ஆதலால் சூட்டு உடம்புக்கு ஆகாது. இதை உண்டால் சிறுநீரும் தாதுவும் பெருகும். முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை புளி சேர்த்து சமைப்பது நல்லது.

முருங்கைப் பட்டையை நீர்விட்டு அரைத்து வீக்கங்களுக்கும் வாயு தங்கிய இடங்களுக்கும் போடலாம். முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கிவிட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும்.









## பூமிகா கணவரின் கட்டுப்பாட்டில் அனுஷ்கா!

யோகா டீச்சராக இருந்து நடிகையாக மாறிய அனுஷ்காவுக்கு ரூ.25 கோடிக்கு மேல் சொத்துகள் உள்ளன. அனுஷ்கா இவற்றை பல்வேறு தொழில்களிலும் முதலீடு செய்துவருகிறார். படத்துக்கு ஒரு கோடிக்கு மேல் சம்பளம் வாங்கும் அனுஷ்கா, அதை ரொக்கமாகவோ அல்லது காசோலையாகவோ வாங்கும் பொறுப்பை பூமிகாவின் கணவர் பரத்திடம் விட்டிருக்கிறாராம். பரத் தாகூர் ஒரு யோகா மாஸ்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷொப்பிங் போனால்கூட, அதற்கான பணத்தை பரத்தின் மனேஜர்தான் வந்து செட்டில் செய்கிறாராம். அனுஷ்காவின் பணத்தை, விசாகப்பட்டிணத்தில் உள்ள மதுரவாடா, கைதராபாத்தில் உள்ள தொடர்மாடி வியாபாரத்தில் முதலீடு செய்துள்ளாராம் பரத். சொந்த ஊரான பெங்களூரிலும் நிலங்கள் வாங்கியுள்ளார்களாம்.

பூமிகாவுக்கும் அவர் கணவர் பரத் தாகூருக்கும் அனுஷ்காவுக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா? சில விடயங்களை டீப்பா ஆராய்ச்சி செய்தால் முடிவு நாசமாகத் இருக்கும்!!

## கும்கி நாயகனுக்கு அடுத்த வாய்ப்பு

எங்கேயும் எப்போதும் படத்தின், மெகா வெற்றிக்குப் பின், அடுத்த அடியை நிதானமாக எடுத்து வைத்துள்ளார், இயக்குநர் சரவணன். பிரபல இயக்குனர் லிங்குசாமி தயாரிக்கும், அடுத்த படத்தை இயக்கப் போகிறார். இந்த படத்தில் ஹீரோவாக நடிப்பவர், கும்கி படநாயகன், விக்ரம் பிரபு. இந்த படத்துக்கு என்ன பெயர் வைப்பது என்பது குறித்து, இயக்குனர் மற்றும் படப் பிடிப்பு குழுவினருக்கு இடையே, நீண்ட நாளாக ஆலோசனை நடந்ததாம். இறுதியில், இவன் வேற மாதிரி என்ற, வித்தியாசமான தலைப்பை தேர்வு செய்துள்ளனர். இந்த படத்தின் படப்பிடிப்பு துவங்கினாலும், இன்னும் ஹீரோயின் தேர்வு செய்யப்படவில்லையாம். படத்தின் பெயர் மட்டுமல்ல, படத்தின் கதையுமே, மற்ற படங்களில் இருந்து வேறுபட்டதாக இருக்கும் என்கின்றனர், படக் குழுவினர்.

## பேச தடுமாறுகிறார் கேத்ரீனா

ஷாருக்கான், சல்மான்கான் என்று முன்னணி பொலிவுட் நடிகர்களுடன் ஜோடியாக நடித்து வருபவர் நடிகை கேத்ரினா கைப். லண்டனில் பிறந்து வளர்ந்த கேத்ரினா கடந்த 10 வருடமாக இந்தி படங்களில் நடித்துவருகிறார். ஆனாலும் இந்தியில் சரளமாக் பேசமுடியாமல் தவிக்கிறார்.

அவர், சமீபத்தில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பங்கேற்றபோது ஒரு பெண் நிருபர் ஆங்கிலத்தில் கேள்விகேட்டார். இந்தக் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் சொல்கிறேன். எனக்கு அதுதான் வசதியாக இருக்கிறது என்று கூறிப் பதிலளித்தார்.

இது குறித்து கேத்ரினா கூறுகையில், இந்தி படங்களில் 10 வருடமாக நடித்துவந்தாலும் இந்தியில் சரளமாக பேசுவதற்கு தயக்கம் இருக்கிறது. ஆங்கிலத்தில் பேசுவதற்குத் தான் எனக்கு எளிதாக இருக்கிறது. 24 மணி நேரமும் என்னுடன் இந்தி பேசுபவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடன் பேசிப் பழகியும் சில கேள்விகளுக்கு இந்தியில் பதில் சொல்லத் தெரியவில்லை.

வேற்றுமொழிகளில் நடிக்கும் எல்லா கதாநாயகிகளுக்கும் இந்த பிரச்சினை இருக்கிறது என்றும், சரளமாக இந்தி பேசுவதற்கு இன்னும் பயிற்சி எடுத்து வருகிறேன் எனவும் கூறியுள்ளார்.

## பாலாவின் ...

அஜ்மல், ராதிகா ஆப்தே நடித்த வெற்றிச் செல்வன் படத்...
இயக்குனர் பாலா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இ...
இயக்குனர்கள் அமீர், சீனுராமசாமி, கவிஞர் தமிழச்சி தங்கபா...
பெற்றுக்கொண்டனர்.

'யாவரும் நலம்' படத்தில் விக்ரம் குமாரி...
வேலை பார்த்த ருத்ரன் இந்தப் படத்தை இ...
பேசிய இயக்குனர் ருத்ரன், சில வருடங்...
இயக்குனர் பாலாவிடம் உதவிஇயக்கு...
அவருக்கு கடிதம் எழுதினேன்.

அதற்கு அவர் எனக்கு பதில் ...
கடிதங்களிலுள்ள வார்த்தைகள்தா...
இயக்குனராகும் வாய்ப்பைக் கொடு...
இயக்குனராக இருக்கும் அவர் எனக்...
இன்னும் இருபது, முப்பது வருடங்க...
யிடுவேன். அப்போது அந்தக் கடிதங்...
எல்லோருக்கும் பொக்கிஷமாக இ...




## சுய த... அடிக்கிற...

பாஸ் என்ற பாஸ்கரன் ...
பிடித்திருக்கிறது. என்றபோ...
இல்லை. ஆனால் இப்...
இயக்கிவரும் செல்வ...
போட்டிருக்கிறார். ...
இரட்டை வேடங்...
பிக்ஸ் காட்சிக...
மேலும்
காடுகளில்
மாதக்கணக்...
படப்பிடிப்...
நடத்திவிட்...
திரும்பிய
செல்வராகவ...
அடுத்தகட்ட
படப்பிடிப்பை
ஐதராபாத்திலுள்ள...
சிட்டியில் நடத்துகிறார். அங்கேயும் பிரமாண்டமான ...
போடுகிறார்களாம். இதன்காரணமாக படத்தின் பட்ஜெட் ...
எகிறும் என்கிறார்கள். ஆனால் இதையறிந்து காலறை தூக்கி...
நடக்கிறார் ஆர்யா. என்ன சமாச்சாரம்? என்று கேட்பவர்களிட...
50 கோடி, 60 கோடியில நான் நடிக்கிற படம் படமாவுது. அ...
நானும் பெரிய நடிகருதானே. என் ரேஞ்ச் என்னன்னு எனக்...
இப்பத்தான் தெரிய ஆரம்பிச்சிருக்கு என்று ஸ்டைலாக முடி...
விடுகிறாராம் ஆர்யா.

## ஆரோக்கியமான பே...

கன்னட நடிகை நந்திதா அட்டகத்தி படத்தில் கதாநாய...
இப்படத்தை தொடர்ந்து நளனும் நந்தினியும், எதிர்நீச்சல் பே...
நடித்து வருகிறார். இது குறித்து நந்திதா கூறுகையில், இந்த ...
படங்களிலும் அட்டகத்தி மாதிரியே ரொமான்டிக் கலந்த காதல் ...
நடிக்கிறேன். அதில் ஒரு படத்தில் ப்ரியா ஆனந்தும் இன்னொரு ...
நடிப்பதால், எங்களுக்குள் ஆரோக்கியமான நடிப்புப் போட்டியும் ...
றது. என்னைத் தேடி மாறுபட்ட வேடங்களும் வருகிறது என்றாலும் ...
காலத்துக்கு காதல் கதைகளுக்கே முதலிடம் கொடுத்து நடிப்பேன். ...
முத்தக்காட்சி, கிளாமர் என்றெல்லாம் அத்துமீறமாட்டேன் என்று தெ...

## கூட்டு முயற்சி

விஜய், காஜல் அகர்வால் இணைந்து நடித்துள்ள துப்பாக்கி ரிலீசுக்கு தயாராகி வருகிறது. ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் உருவாகியிருக்கும் துப்பாக்கி படத்திற்கு ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.

இப்படத்தில் விஜய்யும் ஆண்டிரியாவும் இணைந்து பாடிய கூகுள் கூகுள் பாடல் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்பாடல் உருவாக்கத்தின்போது இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ், ஹறிஸ் ஜெயராஜ், ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன் எனப் படக்குழுவினர் இணைந்து பங்காற்றியுள்ளனர்.








துள்ளி விளையாடு

# போராடி வென்றது கள்ளத் துப்பாக்கி

கொலிவுட்டில் தீபாவளிக்கு வெளியா-கும் படங்களில் ஒன்றான 'கள்ளத்துப்பாக்கி' படத்துக்கு தணிக்கை குழு தடை விதித்தது. பின்னர் தயாரிப்பாளர், இயக்குனர் ஆகியோர் கொடுத்த நீண்ட விளக்கத்துக்கு பின்பும் 35 இடங்களில் காட்சிகளை வெட்டிய பின்பும் ஏ சான்றிதழ் கொடுத்தனர்.

இது குறித்து தயாரிப்பாளர் ரவிதேவன் கூறுகையில், கள்ளத் துப்பாக்கி படத்தை முதலில் பார்த்த தணிக்கை குழுவி னர் வன்முறை அதிகம் இருப்பதாக கூறி தடை விதித்தனர். பின்பு மறுதணிக்கை குழுவுக்கு விண்ணப்பித்தோம். படத்தை பார்த்தபின்பு 7 மணி நேரம் அதிகாரிகள் எங்களிடம் கேள்வி கேட்டனர். ஒவ்வொரு காட்சிக்கும் விளக்கம் அளித்தேன் என்றும் பின்னர் அவர்கள் கூறிய காட்சிகளை வெட்டிய பின்பு ஏ சான்றிதழ் அளித்தனர் எனவும் கூறியுள்ளார்.

இப்படத்தின் தயாரிப்பாளர் ரவிதேவன், விஜய் நடித்துள்ள துப்பாக்கி படத்தை வெளியிடுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு வரை தடை கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ...பொக்கிஷம்

...திற்கான இசை வெளியீடு விழாவிற்கு
...சக் குறுந்தகடை வெளியிட்டார்.
...ர்டியன் மற்றும் பலர் இணைந்து

...டம் அசோஸியேட்டாக
...பக்கியிருக்கிறார். விழாவில்
...ளுக்கு முன்பு நான்
...ளராக சேர ஆசைப்பட்டு

...ழுதினார். அந்தக்
... என்னை இன்று எனக்கு
...திருக்கிறது. இன்று பிரபலமான
...த எழுதிய கடிதங்களை
... கழித்து நான் வெளி
...கள் எல்லாமே
...க்கும் என்றார்.



பூவோமும் புயலோமும்

# ...பட்டம்
## ...ார் ஆர்யா

...த்துக்குப்பிறகு ஆர்யாவின் மார்க்கெட் சூடு
...தும் பெரிய வியாபாரம் என்று சொல்லும்படியாக
...ாது அவரை வைத்து இரண்டாம் உலகம் படத்தை
...ாகவன் அந்த படத்துக்கு 50 கோடி பட்ஜெட்
...இப்படத்தில் ஆர்யா, அனுஷ்கா இரண்டுபேருமே
...ளில் நடிப்பதோடு, ஏராளமான கிரா-
...ம் இருக்கிறதாம்.
...ஜார்ஜியா

...கில்
...ப
...
...ன்

...பிலிம்
...செட்டுகள்
...இன்னும்
...ிட்டு
...தில்,
...படின்னா
...கே
...யை கோதி

# ...ாட்டி

...யாக நடித்தார்.
...ான்ற படங்களில்
...ரண்டு
...நாயகியாக
...நாயகியாக
...டந்து வருகி
..., இன்னும் சில
...அதேசமயம்
...வித்துள்ளார்.

# புடவைக்கு மரியாதை

யாவரும் நலம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான நடிகை நீது சந்திரா, சமீபத்தில் படவிழா ஒன்றிற்கு புடவை அணிந்து சென்னை வந்திருந்தார். விழாவுக்கு வந்த சில வி.ஐ.பி.க்கள் நீது சந்திரா புடவை கட்டி வந்ததை குறிப்பிட்டு பெருமையாக பேசினர்.

இது குறித்து நீது சந்திரா, என்னதான் வித விதமான மொடேர்ன் உடைகள் அணிந்தாலும், புடவைதான் பெண்களுக்கு அழகு சேர்க்கும். இந்திய பாரம்பரியத்தின் பெருமையை போற்றும்வகையில், புடவை அணிந்து விழாக்களுக்கு செல்வதை கௌரவ-மாக கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.





# தேன் கிண்ணம்

## புரிந்து கொண்டால் சரி!

பொருட்கள் விலை ஏற்றம், ஒரு
பொருட்டு அல்ல
நெருக்கடி நிலை பற்றியும்
வருத்தமல்ல, அபிவிருத்தி
ஒன்றையே
நாட்டு மக்கள்
அனுகூலமென நம்பியே
அரசை ஆதரித்தனர்!

எதிர்க்கட்சி பேச்செல்லாம்
உதிர்ந்துபோச்சு
இருந்து செய்த ஆசனமும்
பறிபோய் விட்டது
புரிந்துகொண்டால், அரசியலில்
மக்கள் எந்தப் பக்கம்
விரிந்து வரும் காலம் பதில் சொல்லும்!

கவிக்குயிலன்,
சேனையூர் - 06



## ஈழத்துக் கவிஞர்கள்

### தானா விஷ்ணு

(1976)

ஈழத்துக் கவிஞர். இயற்பெயர் தம்பித்துரை விஜயசங்கர். 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்து எழுதத் தொடங்கியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர். தற்போது ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

கவிதை, கட்டுரை, விமர்சனம், இதழியல் ஆகிய துறைகளில் ஆர்வமுடையவர். இவரது கவிதைகள் ஈழநாடு, ஈழநாதம், வெளிச்சம், மூன்றாவது மனிதன், அம்பலம், வான் முழக்கம், எரிமலை, தெரிதல் ஆகிய ஈழத்து இதழ்களிலும் உயிர்மை என்ற தமிழகத்துச் சிற்றிதழிலும் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இயங்கும் உயில் என்ற கலை இலக்கிய அமைப்பின் செயற்பாட்டாளர்களில் ஒருவராக உள்ளார்.

**'தவிர'** என்ற சிற்றிதழின் ஆசிரியர்.

இவரது நூல்கள்.

நினைவுள் மீள்தல்: (கவிதைகள் ) முதற்பதிப்பு டிசெம்பர் 2003, வெளியீடு மீளுகை.

கறுப்புருவம் சுமக்கும் ஆமைகள்: செப்ரெம்பர் 2012.

மரணத்தில் துளிர்க்கும் கனவு - ஆழி பதிப்பகம் 2011

( ஈழத்துக் கவிகள் எண்மரின் கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பில் தானா விஷ்ணுவின் 10 கவிதைகள் உள்ளன.)

**இவரது கவிதைகளில் ஒன்று**

### ஓவியத்தின் கோடுகளில் நீளும் வாழ்ந்து போனவனின் குறிப்பு

வாழ்தல் மீதான வேணவாவினை
நிர்க்கதிக்குள்ளாக்கும் போர் மீதில் கவிகிறது
மீளவும் எனது சாபம்.

தேவதைகாள்!
எனது இறுதிப் பிரார்த்தனைகளும்
அர்த்தமிழந்தன.
தூக்கிலிடப்பட்ட எனது இளமையை
குற்றுயிராக வேனும் காப்பாற்ற முடியா
விழிகள் இழந்த குரங்கென
தொங்கித் திரிகிறேன் பிரபஞ்சக் கிளைகளெங்கும்.

சுருக்கில் நசுங்கும் ஆயுள் கழுத்தில்
கயிறுவரைந்த கோடுகளை
யாவரும் அறிவதற்காய்
யாரேனும் பத்திரப்படுத்தட்டும்.

தேவதைகாள்!
அர்த்தமிழந்து போன உங்களுக்கான
துயர் மிகுந்த பிரார்த்தனைகளையும்
மீளத்தாரும்
வாழ்வினைத் தொலைத்தலையும்
பைத்தியக்காரனின் நாட்குறிப்புக்களில்
அவற்றினைச் சேமித்தல் வேண்டும்.

வரலாற்றிலிருந்து துடைத்தழிக்கப்படப் போகும்
எனது குறிப்புகளை
நான் வரையும்
சிக்கல் நிறைந்த ஓவியங்களிலிருந்து
யாவரும் வேறுபடுத்திக் கொள்ளட்டும்.

வாழ்வின் மீதான வேணவாவினை
நிர்க்கதிக்குள்ளாகும் போர் மீது கவிகிறது
மீள மீள எனது சாபம்
ஒரு குடுகுடுப்பைக்காரனின் வார்த்தைகள் போல.

வேலணையூர் தாஸ்

# சொல்ல மறந்த நன்றி

ஸைனப் தாஹா
மன்னார்.

முகம் சிதைந்து மூக்குடைந்து
முகவரி தொலைக்கப்பட்ட
முல்லை வனத்து
முன்னாள் சர்வாதிகாரியே!

நீ இருக்கும் போதே
நான் நன்றி சொல்ல
மறந்து விட்டேன்.

சயனைட் குப்பியை
சட்டென்று கடித்து
'சாகடா' தமிழா என்று
சாதாரணமாய்
சொன்ன உனக்கு - உனது
கழுத்தில் தொங்கிய சயனைட்டை
கடித்தே உயிர்விட
துணிவின்றியே - வீரத்தமிழனின்
வீரத்தை தலைகுனிய வைத்தவனே!

வடக்கு முஸ்லிம்களின் சொத்தை
மடக்க நினைத்து
துப்பாக்கி முனையில்
அடக்கி விரட்டி படித்த
உனக்கு நான்
நன்றி சொல்ல மறந்துவிட்டேன்.
ஏன் தெரியுமா?
உன் அராஜகப்பிடிக்குள்
அகப்பட்டால் பேச்சுரிமை
எழுத்துரிமை பெற்று
சுதந்திரக் காற்றை - தெற்கிலே
சுவாசிக்க முடிந்தது
அதற்கு ஒரு நன்றி!

கப்பமென்றும் வரி என்றும்
ஒப்பமின்றி வாங்கிவிட்டு
ஏப்பம் விட்ட உன்னில் நின்றும்
தப்பி வந்தோம் அதற்கு ஒரு நன்றி!

உனது பாசிசப் பிடிக்குள் எங்கள்
பாசக் குழந்தைகள்
படைக்குவிப்புக்கு
பயன்படாமலே
பாதுகாக்கப்பட்டார்கள்
அதற்கு ஒரு நன்றி!

ஊண் இன்றி உறக்கமின்றி
ஏனென்று கேட்டுவிட்டால்
இரக்கமின்றி
எகிறிக் குதிக்கும் - உன்
துப்பாக்கி முனையின் முன்னிற்கும்
துர்ப்பாக்கியம் இன்றி
சுகமாக இருந்தோம்
அதற்கு ஒரு நன்றி!

கிபீர் வந்து குண்டு போட
பல் குழலால் குலை நடுங்க
பதுங்கிப் பதுங்கி பங்கருக்குள்
பதைபதைக்க - அவை
உயிர் பறிக்க - இது
எதுவுமில்லை எங்களுக்கு
அதற்கு ஒரு நன்றி!

இறுதி நேரத்திலும் இரக்கமின்றியே
உன் உயிர்காக்க அடுத்தவன் உயிரை
பகடைக்காயாக
பக்கத்தில் வைத்துக் கொண்டாய்
கடைசியில் அப்பாவிகள்
காலின்றி... கையின்றி...
இவையெதுவுமின்றி
எங்களை அனுப்பிவைத்தாய்
அதற்கு ஒரு நன்றி!

என்ன செய்ய? நீ இருந்திருந்தால்
நான் நன்றி சொல்லியிருப்பேன்.
இறந்தாலும் இன்னும் சிலருக்குள்
இறவாமல் வாழ்கின்றாய்
இவர்களுக்காவது தெரியட்டும்
எங்களின் உயிரை மட்டும்
மிச்சமாக எடுத்துக்கொண்டு
மீண்டும் வராதே என்றனுப்பிய
மிலேச்சத்தனத்தின் நன்மைகளை
மீண்டும் மீட்டிப் பார்த்துக் கொள்ளட்டும் !
மேலை நாடுகளில் இருந்து கொண்டு.



# வேஷ அதிகாரங்கள்



எங்கள் துயரின் வலிகளைவிட
இழப்புக்களின் கனதி அதிகம்.

அழுது... அழுது...
அரற்றி ஓய்ந்த பின்பும்
மனதுள்
இன்னமும் சில நினைவுகள்
இறுக்கமான நிலையில்.

பட்டுக் களைத்த பின்பு
புத்தி விரிகிறது...
கெட்டு அழிந்த பின்பு
ஞானம் தெளிகிறது...
ஞான வெளிப்பில்
போகவேண்டிய இடமும் புரிகிறது
புதிய பாதையாக.



எம்துயர் துடைக்கவென
தோற்றம் பெற்ற அதிகாரங்கள்
தங்கள் தேசியத்தினூடாக
எங்கள் இயல்பு வாழ்வியலை
அர்த்தமிழக்கச் செய்துவிட்டன.
இப்பொழுது
நாம் பாடிக் கொண்டிருப்பது
முனகல்கள் நிறைந்த
முகாரி ராகங்கள் மட்டுமே.

இக் கணப்பொழுதினிலும்; அவை
மூச்சற்ற பிணங்கள் போன்ற
முகபாவனைகளோடு
கூடவராத நாடக வேஷத்துடன்
நடக்கின்றன குதூகலித்தபடி...
எங்கள் வாழ்வின்
இடர்கள் மீதேறி!

அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 07



# சிங்கை மைந்தன் 11

## அமரசிம்மன்

அவர்களது உரையாடலை செவிமடுத்த மன்னரும் புன்னகை பூத்தார். என்ன நடக்குமோ என்று தவித்துக் கொண்டிருந்தாள் இளவரசி மதுரவல்லி.

போராட்டம் ஆரம்பமாகி விட்டது. காலைக் கதிரவ–னின் ஒளிபட்டு இருவருடைய வாட்களும் மின்னிக் கொண்டிருந்தன. அட்டூழியம் பாய்ந்து தாக்கிக் கொண்டிருந்தான். கொள்ளையர்கள் பாவிக்கும் கனதியான வளைந்த வாளினை அவன் கண்டபடி சுழற்றிக் கொண்டு அமரசிம்மன் மீது சீறும் புலி போல பாய்ந்து கொண்டிருந்தான். அவனுடைய வாள் வீச்சிற்கு தற்காக்கும் நிலையிலேயே அமரசிம்மனுடைய வாள் வீச்சு இருந்தது. அட்டூழியத்தின் போராட்ட வேகம் மேலோங்கிக் கொண்டிருந்ததே தவிர அமரசிம்மன் அவனைத் தாக்காது தற்காப்புக்காகவே வாளைப் பயன்படுத்தினான்.

அடுத்த வினாடி என்ன நடக்குமோ என்று ஒவ்வொருத்தருடைய மனமும் திக் திக் என அடித்துக்கொண்டிருந்தது. அட்டூழியத்தின் வாள் அமரசிம்மனின் உடலில் இறங்கிவிட்டதோ என எண்ணுமளவுக்கு ஒவ்வொரு விநாடியும் நகர்ந்து கொண்டிருந்தது. அதே சமயம் பின்புறமாக நகர்ந்துகொண்டிருந்த அமர சிம்மன் கால் தடுக்கி மல்லாந்து விழுந்து விட்டான். அவனது மார்வை நோக்கி அட்டூழியத்தின் வாள் இறங்கியது. சேர இளவரசி கரங்களினால் வழிகளை மூடியவாறு திடீரென இருக்கையை விட்டு எழுந்து நின்றாள்.

***

நீல வான வீதியில் நிலாப் பெண் நிர்வாணமாக நீந்திக் கொண்டிருந்தாள். பஞ்சுப் பொதிகளாக அவளை மூடிக்களிக்கும் முகிற்கூட்டங்கள் எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. நிலா முற்றத்தில் நின்று அந்த அழகுக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற சேர இளவரசி மதுரவல்லி காலடி ஓசை கேட்டு திரும்பினாள். அவளுடைய தோழி நீலவேணி பால் குவளையுடன் அவளை நாடி வந்துகொண்டிருந்தாள்.

"பால்கூட சாப்பிடாமல் இங்கே வந்து என்னதான் ஆராய்ச்சி செய்கின்றீர்கள் இளவரசி?" என்று கேட்டாள் நீலவேணி.

"மனதிற்கு இனிய நினைவுகளை தனிமையில்தான் அனுபவிக்க வேண்டும் நீலவேணி"

"என்னிடம் கூடக் கூற முடியாத அத்தனை இரகசியமோ தேவி"

"தோழியிடம் கூற முடியாத விடயமில்லை. ஆனால் கனி யாத காயாக இருக்கும் விடயத்தை எப்படிக் கூறுவது?"

"கனியாத விடயத்தைக் கற்பனையில் கனிய வைக்கின்றீர்களா தேவி?"

"நான் தளபதி அமரசிம்மனைப் பற்றி தவறாக எடைபோட்டுவிட்டேன். அத்துடன் மன்னர் முன்னிலையில் மந்திரியாரிடம் தர்க்கமும் செய்துவிட்டேன். அவர்களுக்கு தளபதியிடமிருக்கும் நம்பிக்கை அளவிற்கரியது என்பதை இன்று காலையில்தான் புரிந்து கொண்டேன். உண்மையில் கால் தடுக்கி அவர் விழுந்ததும் அவர் கதையே முடிந்து விட்டதாகத்தான் நினைத்தேன். அந்த அதிர்ச்சி நிகழ்வைப் பார்க்கக் கூடாது என்றுதான் கண்களை மூடினேன். என்னை அறியாமலே திகைப்புற்று இருக்கையை விட்டெழுந்தேன். "அமைதியாய் இரு தேவி" என்று மன்னர் கூறியதும் கைகளை விலக்கிப் பார்த்தபோது மனப்பிரமையோ என்று கூட நினைத்தேன். அந்தக் கணநேரக் காட்சியை காணக் கூட முடியாதளவுக்கு... நினைத்தாலே வெட்கமாகயிருக்குதடி நீலவேணி"

"இதில் வெட்கப்பட என்னதான் இருக்கின்றது தேவி. நானும் உங்களைப் போன்று திகைத்துத்தான் நின்றேன். ஆனால் கண் இமைக்கும் நேரத்தில் கொள்ளைக்காரனின் வாள் காற்றில் பறந்தது. மின்னலென துள்ளி எழுந்தார் தளபதி. நீங்கள் எழுந்து நின்றதை அப்பொழுதுதான் அவதானித்தேன்" என்றாள்.

"நிறைகுடம் தளம்பாது என்பதற்கு உதாரணமான அவர் உண்மையிலேயே மகாவீரன்தான்"

"அதனை நீங்கள்தான் சொல்ல வேண்டுமா?"

"நான் மட்டுமா?அந்தக் கொள்ளையனே கடைசியில் மண்டியிட்டுக் கதறினானே"

"இளவரசி! அமரசிம்மன் ஓர் அபூர்வ மனிதன் என்றுதான் அரண்மனை பூராக ஒரே கதையாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி அவர் கடற்படையை பலமாக்கிக் கொண்டு இராஜ்ஜிய விஸ்தரிப்புச் செய்யவும் போகிறாராம். அதனால்தான் கடலோடிகளான கடற்கொள்ளையர்களைத் திருத்தி கடற்படையில் பணிக்கு அமர்த்தி வருகின்றாராம்" எனக் கூறியவாறு வெற்றுக் குவளையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

"நீலவேணி! நீ கீழே போகின்றாயா?"

"ஆமாம் தேவி! நீங்கள் கற்பனை உலகில் சஞ்சரிக்க நான் இடைஞ்சலாக இருக்கவில்லை"

"நான் உன் மனம் நோகும்படி ஏதும் சொல்லிவிட்டேனா? நீ என் உயிர்த் தோழியில்லையா? நான் தனிமையில் தவிப்பது உனக்குச் சம்மா நீலவேணி?"

"தேவி! நீங்கள் எது சொன்னாலும் நான் செய்யத் தயார். தயவு செய்து என்னை அமரசிம்மனிடம் தூது போகும்படிமட்டும் கேட்டுவிடாதீர்கள்?" என்று சிணுங்கினாள்.

"நீ பொல்லாதவள் மட்டுமில்லையடி. என் மனதில் உள்ளதை அறியவும் விரும்புகின்றாய். அப்படித்தானே?"

"அதற்காக இல்லை தேவி"

"வேறு எதற்காக இந்தப் பீடிகை?"

"அந்த மனிதர் பெண்கள் விடயத்தில் மிகப் பொல்லாதவராம்"

"யார் அமரசிம்மரா? ஏன் நீலவேணி நீ என்னைப் பயமுறுத்துகின்றாயா? அவர் பெண்கள் விடயத்தில்...."

"தேவி நீங்கள் நான் கூறியதைத் தவறாக நினைத்து விட்டீர்கள்"

"ஏனடி என்னருமைத் தோழி. என்னை குழப்பி என்னிடமிருந்தே ஏதாவது பிடுங்கலாம் என்று நினைக்கின்றாயா?"

"இல்லையம்மா! பெண் வாடையே விரும்பாத மனிதராம் அவர். அந்த மனிதரிடம் நீங்கள் என்னைத் தூது அனுப்பி விடுவீர்களோ என்றுதான் நான்..."

"அவரை எப்படி மடக்கலாம் என்பதைத்தான் நான் உனக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை நீலவேணி! இந்த மதுரவல்லி மனம் வைத்தால்...? வேண்டாம்... நீ தூது போகவேண்டாம். நான் அப்படி ஏங்கித் தவிக்கவும் வேண்டாம். நீ போகலாம்..." என்று அவளுக்கு விடைகொடுத்தாள்.

அவள் சென்றதும் மீண்டும் தனிமையில் விடப்பட்ட இளவரசியின் மனதில் அன்று காலையில் நடந்த நிகழ்ச்சிகள் மீண்டும் தோன்றின.

அமரசிம்மன் மார்பில் கொள்ளைக்காரனுடைய வாள் பாய்ந்துவிட்டதோ என்று அஞ்சி விழிகளை மூடியவள் மன்னரின் குரல் கேட்டதும் கரங்களை விலக்கிப் பார்த்ததும் தான் காண்பது மனப் பிரமையாகியிருக்குமோ என்று வியந்தாள். அடுத்துக் கேட்ட அமரசிம்மனின் குரல் அவளைச் சுயவுணர்வுக்குள்ளாக்கவே ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

"நண்பனே! நிலத்தில் குந்திக்கொண்டிருக்கும் உனது வாளை எடுத்துக்கொள். இதுவரை உனது தாக்குதல்களை நான் தற்காப்பு முறையில் தடுத்துக் கொண்டேன தவிர நான் வாள்வீசிப் போரிடவில்லை. காரணம் நீ முறையான வாட் போரிடவில்லை. முறையான போர்முறைக்கு அப்பால் கொள்ளைக்காரனான நீ என்னை எப்படிக் கொல்லலாம் என்பதிலேயே உன் முழுக்கவனமும் இருந்தது. சரி! இனியும் நான் காலத்தைக் கடத்த விரும்பவில்லை. உனது வாளை எடுத்துக் கொள்" என்று கூறித் தனது வாளைச் சுழற்றினான்.

(தொடரும்...)

**என்** பெயர் ஆன் ஃப்ராங்க். 1929ல் ஜெர்மனியின் ஃப்ராங்க்ஃபர்ட் நகரில், ஓட்டோ ஃபிராங்க்–எடித் ஆகியோரின் இளைய மகளாகப் பிறந்தேன். வசதி படைத்த குடும்பம். ஜெர்மனி, நாஜிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்தவுடன் நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாமுக்கு என் குடும்பம் குடிபெயர்ந்தது. அப்போது எனக்கு வயது 4. அப்பாவும் அம்மாவும் படித்தவர்கள். எங்களை அருமையாக வளர்த்தார்கள்.

என்னுடைய 13வது பிறந்தநாள் அன்று மிகவும் பிடித்த ஒரு பரிசு கிடைத்தது... தடித்த அட்டை கொண்ட அந்த டயரியைக் கண்டதும் என் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை! சராசரி பெண்களைப் போல இதில் கண்டதையும் எழுதக்கூடாது என்று முடிவு செய்தேன். இந்த டயரியில் நான் எழுதப்போகும் விஷயங்களுக்கு ஓர் அர்த்தம் இருக்கவேண்டும். எனக்கு நெருக்கமான ஒரு நண்பன் வேண்டும்... அதுதான் இந்த டயரி. இன்று முதல் 'கிட்டி' என்று பெயர்கொண்ட என் டயரி நண்பனிடம் நான் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்கிறேன்.

டயரி எழுத ஆரம்பித்த சில நாள்களுக்குள் குலைநடுங்க வைக்கும் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. ஆம்... நாங்கள் எங்காவது தலைமறைவாகச் சென்று வாழவேண்டும். அல்லது வதை முகாமுக்குச் செல்லவேண்டும்.

எதற்காக?

நாங்கள் யூதர்கள். எங்கள் ஜெர்மனியின் நாஜிபடை நெதர்லாந்தைக் கைப்பற்றியவுடன் இங்கும் அதே சட்டங்கள் தொடர்ந்தன. என் அப்பா கஷ்டப்படும் யூதர்களுக்கு உணவு, உடை, பணம் போன்ற உதவிகளைச் செய்து வந்தார். இந்தச் செயல்கள் எல்லாம் எங்களுக்கு எவ்வளவு ஆபத்தைக் கொண்டுவரும் என்று எல்லோருக்கும் தெரியும். 'ஒரு உயிரைக் காப்பாற்ற முடிந்தால் மற்ற விடயங்கள் அற்பமானவை' என்பார் என் அப்பா. என் அக்கா மார்காட்டுக்குத்தான் அன்று சம்மன் வந்தது. சம்மன் வந்தவர்களை இரகசிய வதைமுகாமுக்கு அழைத்துச் செல்வார்கள். அந்த வதை முகாம்களைப் பார்த்துதான் 'நரகம்' என்ற வார்த்தையை உருவாக்கியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

சரியான உணவு, உடை கொடுக்கமாட்டார்கள். நூறு பேருக்கு ஒரு கழிப்பறைதான். தண்ணீர் பற்றாக்குறை. ஆண்களையும் பெண்களையும் ஒன்றாக குறு–கிய இடத்தில் அடைத்திருப்பார்கள். மனிதத்தன்மை அற்ற அந்த முகாம்களில் ஒழுக்க விதிமீறல்கள் அதிகமிருக்கும். சிறுமிகள்கூட கர்ப்பமாக இருப்பார்கள். தினமும் சிலர் செத்துக்கொண்டிருப்பார்கள். பலர் சாவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சுகாதாரமின்மையால் நோய்கள் உற்பத்தியான வண்ணம் இருக்கும்.

# வதைமுகாமில் ஒரு வண்ணத்துப்பூச்சி!



> இனத்தின் பெயரால் எந்த ஒரு மனிதரும் இனி சாகக்கூடாது... எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் பூமியில் போர் நிகழக்கூடாது என்பதுதான். இனத்தின் பெயரால் உயிரை இழந்த கடைசி மனிதர்கள் நாங்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், இன்றும் இனத்தின் பெயரால் படுகொலைகளும் அழித்தொழிப்புகளும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. என்னைப் போல எத்தனையோ லட்சம் பேர் பலியாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சாத்தியமாகாத கனவா என்னுடையது? ஹிட்லர்கள் ஒருபோதும் மரிப்பதில்லையோ?

மதச்சின்னமான மஞ்சள் நட்சத்திரத்தை நாங்கள் எப்போதும் அணிந்திருக்க வேண்டும். சைக்கிளை ஓட்டிக்கொண்டு செல்லக்கூடாது... தள்ளிக்கொண்டுதான் நடக்க வேண்டும். டிராம்கள், வாகனங்களில் பயணம் செய்யக்கூடாது. யூதர்களின் கடைகளில் மாலை 3 முதல் 5 மணிக்குள் மட்டுமே பொருள்களை வாங்க வேண்டும். 8 மணிக்கு மேல் வெளியே வரக்கூடாது. சினிமா, நாடகம் பார்க்கக்கூடாது. டென்னிஸ், நீச்சல், ஹாக்கி போன்ற விளையாட்டுகளும் நாங்கள் விளையாடக் கூடாது. யூதர்களுக்கான தனிப்பட்ட பள்ளியில் மட்டுமே நாங்கள் படிக்க வேண்டும்.

அம்மாவும் அப்பாவும் நண்பர்களிடம் பேசினார்கள். நானும் அக்காவும் புத்தகங்கள், பேனா, பென்சில் போன்றவற்றை எடுத்துக்கொண்டோம். ஒவ்வொருவரும் அணிந்திருந்த உடைகள் மீது மேலும் 2, 3 உடைகளை அணிந்துகொண்டோம் (பெரிய பைகளுடன் சென்றால் எங்களைக் கண்டுபிடித்து விடுவார்கள்). சிறிது நேரப் பயணத்துக்குப் பிறகு ஒரு பெரிய கட்டடத்துக்கு வந்து சேர்ந்தோம். இது என் அப்பாவின் அலுவலகம்.

(22 ஆம் பக்கம் பார்க்க)




# லேடிஸ் ஸ்பெஷல்

## பெண்களே இணையத்தளத்தில் அரட்டையா?

மின்னஞ்சலில் நண்பர்களுடன் அரட்டை அடிப்பது என்பது எல்லோருக்குமே மிகப் பிடித்தமான காரியமாகிவிட்டது. அதுவும் ஒரு குழுவாக அரட்டை அடிப்பதில் இருக்கும் மகிழ்ச்சியே தனிதான். நமக்குத் தெரிந்த, பழகிய நண்பர்களுடன் அரட்டை அடிப்பது என்பது ஒன்றும்



பெரிய விஷயம் அல்ல. அதில் எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால் நாம் எல்லோரும் தெரிந்த நண்பர்களுடன் மட்டுமா அரட்டை அடிக்கின்றோம். இல்லையே... சாட்டில் புதிதாக எத்தனை நண்பர்களை பிடிக்கின்றோம். அவர்களுடன் மணிக்கணக்காக அரட்டை அடிக்கின்றோம். அதையும் தாண்டி அவர்களை சந்திப்பது, அவர்களுடன் ஊர் சுற்றுவது, என எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறது உலகம்.

சரி இதெல்லாம் நல்ல நண்பர்கள், நல்ல நபர்களுடன் பழகும்போது சரி.... ஏதாவது ஓரிடத்தில் சரியில்லாமல் போகும்போது என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் தவிர்க்க வேண்டாமா? அது நம் கையில்தான் இருக்கிறது.

யாரிடமும் முதலில் அறிமுகம் ஆகும்போது, நீங்கள் அவரை நேரில் பார்க்கவில்லை. அவரைப் பற்றி எதுவும் தெரியாது. எனவே மிக நிதானமாக உங்களது அறிவைப் பயன்படுத்தி அவரிடம் மெல்ல மெல்ல பழகவேண்டும். எதிலும் அவசரம் கூடாது.

சாட்டிங்கிலும் மிகுந்த பாதுகாப்பான இணையத்தளங்கள் உள்ளன. ஏனோதானோவென்று ஏதாவது ஒரு இணையத்தளத்தில் அல்லாமல் பாதுகாப்பான இணையத்தளத்தில் அரட்டை அடிப்பது நல்லது.

மின்னஞ்சலில் சாட் செய்யும் அனைவரும் நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. நீங்கள் உங்களால் முடிந்தவரை நேர்மையாக இருங்கள். மற்றவரிடம் அதையே எதிர்பாருங்கள். ஆனால் அவ்வாறே இருப்பார் என்று எப்போதும் நினைக்காதீர்கள்.



# கர்ப்ப காலமும் உடல் எடை வேறுபாடும்

கர்ப்ப காலத்தில் பெரிதாகும் கருப்பை, வளரும் சிசு, நஞ்சுக்கொடி, ஆம்னியாடிக் திரவம், உடலில் நீர் சேர்தல், கொழுப்பு சேர்தல் போன்றவற்றால் உடல் எடை அதிகரிக்கும். இது தனிப்பட்டவர்களிடையே மாறுபடும். அதாவது, ஒவ்வொருவர் ஒவ்வோர் அளவு எடை கூடுவர். சராசரியாக எடை ஐந்திலிருந்து ஒன்பது கிலோ வரை அதிகமாகும். எடை கூடுதல் கர்ப்பத்தின் முதர்வைப் பொறுத்து மாறுபடும்.

முதல் மூன்று மாதங்களில் வாந்தியும் பசியின்மையும் இருந்தால் கணி சமான எடை கூடுதல் இருக்காது. கர்ப்ப காலத்தின் இரண்டாம் கட்டத்தில், ஒரு வாரத்திற்கு அரை கிலோ எடை கூடி மொத்தமாக மூன்றரை முதல் நாலரை கிலோ வரை எடை கூடும். மேலும், பிரசவத்திற்கு முன் அரை கிலோவிலிருந்து ஒன்றரை கிலோ வரை எடை குறையும். கர்ப்ப காலத்தின் எடை கூடுதல், கருவின் எடையைப் பொறுத்து இருக்கும். கர்ப்பத்தின்போது மொத்த உடல் நீரின் அளவு ஏழு லீற்றர் வரை அதிகரிக்கும். மேலும், கடைசிக் கட்டத்தில் சிறுநீரகங்கள் அதிகளவு உட்கொள்ளக்கூடிய தண்ணீரை வெளியேற்ற சிரமப்படும். பொதுவாக ஒரு சராசரி பெண் கர்ப்ப காலத்தில் அவளின் அசலான எடையிலிருந்து பத்து சதவீதம் எடை கூடுவாள்.

ஆரம்பத்தில் அதிக குண்டான பெண்கள் ஒல்லியானவர்களைக் காட்டிலும் எடை கூடுவார்கள். கணுக்கால்களிலும், கால்களிலும் வீக்கமேற்படுவது சாதாரணமாக நிகழக்கூடியதே. இது சாதாரணமாக மாலை நேரங்களில் ஏற்பட்டு சில மணி நேரங்கள் ஓய்வு எடுத்தால் மறைந்துவிடும். இது கால்களில் இருக்கும் இரத்தச் சிரைகளில் ஏற்படும் அதிக அழுத்தத்தின் காரணமாக ஏற்படக்கூடியதாகும்.

# கருவளையம் மறைவதற்கு...

### கண்களைசுற்றி

கருவளையம் ஏற்பட பல காரணங்கள் இருந்தாலும், அவற்றில் சரியான தூக்கம் இல்லாததே முதல் காரணம் என்று கூறலாம். நல்ல தூக்கம் மிகவும் அவசியம். பகல் தூக்கத்தை விட இரவு தூக்கம் மிகவும் முக்கியம். இரவு தூக்கம் என்பது தொடர்ச்சியாக 8மணி நேரமாவது இருக்குமாறு உங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வது நல்லது.

தயிர், கஸ்தூரி மஞ்சள், தூய சந்தனம் இந்த மூன்றையும் கலந்து தினமும் கண்ணுக்கு அடியில் தடவி 15 நிமிடம் கழித்து ஊறவைத்து பின்பு கழுவினால் கண்ணின் கருவளையம் நீங்கும்.

பாதம் பருப்புகளை பாலுடன் சேர்த்து ஊறவைத்து அரைத்து கண்களை சுற்றி பேக் போடுவதால் கண்ணின் கருவளையம் மறையும். வெள்ளரிக்காயை அரைத்தோ அல்லது வட்டமாகவோ நறுக்கி கண்களின் மீது பேக் போட்டுவந்தால் கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும்.

தலையில் தேங்காய் எண்ணெய் தேய்த்து விரல் நுனியில் நன்றாக மசாஜ் செய்யவும். இதனால், உடலுக்கு அதிக குளிர்ச்சி கிடைக்கும். உள்ளங்கையில் தேங்காய் எண்ணெய் ஊற்றி அதனை மோதிர விரலால் தொட்டு கணகளை சுற்றி வலது புறமாக மசாஜ் செய்யவும், இது இரத்த ஓட்டத்தை அதிகரித்து சோர்வை போக்கும்.

சந்தனக் கல்லில் சாதிக்காயை அரைத்து பூசிவந்தால் கருவளையம் விரைவில் மறையும். நந்தியாவட்டை பூவை நீரில் கழுவி வெள்ளைத்துணியில் சுற்றி கண்களின் மேல் வைத்து கட்டிவர கண்கள் பிரகாசமாகும். இவ்வாறு இயலாதவர்கள் பறித்த பூவை தண்ணீரில் கழுவி கண்ணின் மேல் ஒற்றியெடுக்க கண்கள் குளிர்ச்சியடைந்து பிரகாசமாகும்.



வெண்ணெயுடன் கொத்தமல்லி சாற்றைக் கலந்து கண்களுக்கு பேக் போட கண்கள் கருவளையம் நீங்கி பிரகாசமாக இருக்கும்.

கண்கள் பளபளப்பாகவும் பொலிவுடனும் இருக்க தினமும் இரவில் கண் இமைகளில் விளக்கெண்ணெயை ஒன்று அல்லது இரண்டு சொட்டு விட்டுவர வேண்டும்.

உடல் சூட்டினால் ஏற்படும் கண் எரிச்சல் மற்றும் கண் சிவப்பு இவற்றிற்கு கருஞ்சீரகம் 100கிராம் நல்லெண்ணெயை கண்ணின் மேலும், கண்ணைச் சுற்றியும் தேய்த்து கழுவினால் கண் எரிச்சலும் சிவப்பும் மாறும்.

## சமையல் குறிப்பு



# வெஜிடபிள் பனீர் டிக்கா

தக்காளி - 2
பச்சை, சிவப்பு, மஞ்சள் குடமிளகாய் - தலா ஒன்று
பனீர் - 250 கிராம்
கடைந்த தயிர் - கால் கப்
மாங்காய்த்தூள், மசாலா, மிளகுத் தூள் - எல்லாம் சேர்த்து 2 கரண்டி
சீரகத்தூள், மசாலா, உப்பு - தேவையான அளவு
வெண்ணெய் - 1 கரண்டி.

பனீரை ஒரு அங்குலம் சதுரத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயம், குடமிளகாய், தக்காளி ஆகியவற்றை விதைகளை நீக்கிவிட்டு, சதுரமாகவே நறுக்கிக் கொண்டு உப்பு, சீரகத்தூள், மிளகுத் தூள், மசாலா, கடைந்த தயிர் ஆகியவற்றுடன் சேர்த்து கலந்துஇரண்டு மணி நேரம் ஊறவிடுங்கள். பின் ஒரு வடை கம்பியில் ஒரு துண்டு குடமிளகாய், ஒரு துண்டு வெங்காயம், தக்காளி, சிவப்பு குடமிளகாய், பனீர் என்று மாற்றி மாற்றி வரிசையாகக் குத்தி மிதமான தீயில் காட்டி, கம்பியை சுழற்றியவாறே சுட்டெடுங்கள்.

ஐந்து நிமிடம் போதும். அனைத்தும் வெந்துவிடும். கருக விடாமல் கவனமாக வாட்ட (சுட) வேண்டும். பின் எடுத்து சூடாக இருக்கும்போதே வெண்ணெயை அதன்மேல் தடவி சாட மசாலாவைத் தூவி பரிமாறவும். இதை சூடாக சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

குறிப்பு: இந்த வெஜிடபிள் பனீர் டிக்காவை கரி அடுப்பில் செய்தால் சுவையாக இருக்கும். விரத நாட்களில் வெங்காயத்தை நீக்கிவிட்டு வித்தியாசமாக இப்படி செய்து சாப்பிடலாம்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-341

**கேள்வி : விண்வெளிக்குச் சென்ற முதற் பெண்மணி யார்?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-19.11.2012

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 341
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 339 இற்கான விடை :- வீடு, குடும்பம், சனசமூகம், வேலைசெய்யும் இடம், பொது இடம், யுத்தம், இடப்பெயர்வு.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- Dr.J.சந்திரமதி, சில்வா ரோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

341

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

# அருகில் வந்திருக்கும் ஆபத்து?

வாகரை வாணி

மக்கள் போராட்ட இயக்கம் என்கின்ற அமைப்பினர் இலங்கையின் புத்தளம் மன்னார் கிளிநொச்சி உள்ளிட்ட வடபகுதி எங்கணும் பொதுமக்களை விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

இந்தியாவின் அணு உலையால் எமது வாழ்வு ஆபத்தில் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இந்தியாவின் தென் பிராந்தியக் கரையில் இலங்கைக்கு மிக அண்மித்ததாக அணு உலை அமைக்கப்பட்டு வருகின்றது. அந்த அணு உலையில் வெடிப்போ, கசிவோ அல்லது வேறு ஏதாவது ஆபத்துக்களோ ஏற்படும் பட்சத்தில் அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு இலங்கையைத் தாக்கக்கூடும். அது காற்று கடல் நீர், பறவைகள் மற்றும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படும் மருந்துகள் ஊடாகவும் இங்கு வரமுடியும். அப்படியொரு நிலைமை உருவானால் இலங்கையர்களாகிய நாம் செத்து மடியநேரிடும்.

இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆய்வுகளின்படி இந்தியாவிலுள்ள அணு உலையில் விபத்து ஏற்பட்டால் இலங்கையின் வடமாகாணம் முழுமையாகவும் புத்தளம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களும் மற்றும் வேறு பிரதேசங்களும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

அந்தப் பாதிப்பு திடீர் மரணங்களில் தொடங்கி புற்றுநோய் போன்ற மெல்லக் கொல்லும் நீண்டகால நோய்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் பிள்ளைகளையும் அங்கவீனர்களாக உருவாக்கக் கூடிய பயங்கரமும் உள்ளது.

இவ்வாறான ஆபத்து நம் கண்ணெதிரே இருக்கும்போது நமது அரசு என்ன செய்து கொண்டிருக்கின்றது? இந்த அழிவுக்குரிய செயற்பாட்டை நிறுத்துமாறு இந்தியாவிடம் இலங்கை அரசு கேட்கவுமில்லை. இந்தியாவிடம் சென்று இந்த அழிவுக்குரிய அணு உலையின் செயற்பாட்டை நிறுத்தி மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுங்கள் என்று கேட்பதற்குப் பதிலாக நமது அரச அதிகாரிகள் இந்தியா சென்று ஆபத்து ஏற்படும் பட்சத்தில் மக்கள் இறந்தால் இழப்பீடு எவ்வளவு கிடைக்கும் என்பது குறித்தே பேசியிருக்கின்றார்கள்.

எங்களது மரணத்திற்குப் பின்னர் பணம் தேடுவதற்கே அவர்கள் முயற்சிக்கின்றார்கள். இந்தியாவிலிருந்து கிடைக்கும் வரப்பிரசாதங்களை எண்ணி எதிர்க்கட்சியில் இருக்கும் எந்தவொரு அரசியல்வாதியும்கூட வாயைத் திறப்பதே இல்லை. இந்தியா கோபித்துக் கொள்ளும் என்ற பயத்தில் அவர்கள் அணு உலையால் ஏற்படக்கூடிய பேராபத்துக்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பதும் இல்லை.



இத்தகைய நயவஞ்சக அரசியல்வாதிகளை நம்பி மோசம் போகாமல் எமது உயிர்களை நாமே பாதுகாத்துக் கொள்ள நாம் தயாராக வேண்டும். இந்த கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இப்போது தென்னிந்திய மக்கள் போராடி வருகின்றார்கள். நாங்களும் அவர்களோடு சேர்ந்து போராடவேண்டும். நமது சூழலையும் நமது ஜீவாதாரமான மீன்பிடித்தொழிலையும் நமது உயிரையும் பாதுகாத்துக்கொள்ள நாங்கள் முன்வரவேண்டும். நாம் அனைவரும்ஒன்று சேர்ந்து இந்த அழிவுகளை நிறுத்துமாறு இந்திய இலங்கை அரசுகளை வலியுறுத்துவோம்."என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம், தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில், கூடங்குளம் எனும் ஊரில் அமைக்கப்பட்டுள்ளது. இது இந்திய அணுமின் கழகத்தின் நிருவாகத்தில் ரஷ்ய நாட்டின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் 1988 ஆம் ஆண்டு, அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ரஷ்ய நாட்டுப் பிரதமர் மிக்கேல் கொர்பச்சோவும் கையெழுத்திட்டிருந்தனர்.

ஆனால், அதன்பின்னர் ரஷ்யா என்ற ஒற்றைத் தேசம் பல நாடுகளாகத் துண்டு துண்டுகளாகப் பிரிந்து போனதனாலும், இந்திய அணுக்கரு வழங்குவோர் குழுமத்தின் ஒப்புதல் பெறவில்லை என்ற காரணத்திற்காக அமெரிக்கா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலும் இந்தத் திட்டம் பத்தாண்டுகள் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

அதன்பின்னர் கூடங்குளம் அணுமின் நிலையத்தைத் தொடங்குவதற்கான ஒப்பந்தம் 2001ஆம் ஆண்டில் மீண்டும் கையெழுத்தானது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 3.5 பில்லியன் (இலங்கை மதிப்பின்படி 340375 கோடி) அமெரிக்க டொலர்களாகும்.

இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இங்கு ஒரு கடற்படைத்தளத்தை உருவாக்கவும் இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 2004 ஜனவரி 14 ஆம் திகதியன்று ஒரு சிறிய துறைமுகத்தை அங்கு நிறுவினார்கள்.

கடல்வழியாக எடுத்து வரப்படும் வரும் அணு மின் நிலையத்திற்கான பாகங்களை இந்தத் துறைமுகம் வழியாகக்கொண்டு வந்து 1.5 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்த அணுமின் நிலையத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அதற்குமுன் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து சாலை வழியாக பாகங்களைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம் இருந்தது. இந்த வழி கரடுமுரடானதாக இருந்ததால் சில பாகங்கள் பழுதடைந்ததுடன் போக்குவரத்துச் சிக்கல்களால் காலதாமதமும் ஏற்பட்டது.

முதலில் கூடங்குளத்தில் WER 1200 வகை 1000 மெகாவாட் அணுமின் திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் விரைவில் செயற்படும். இரண்டு உலைகளும் செயல்படும் போது, இந்தியாவில் மிக அதிகமான செயல்திறன் கொண்ட அணு நிலையமாக கூடங்குளம் அணு மின் நிலையம் திகழும்.

கூடுதலாக மேலும் ஆறு அணு மின் உலைகளை இங்கு உருவாக்க இந்திய அணுமின் கழகம் ரஷ்ய நாட்டுடன் 2008ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் ரஷ்யா 1170 மெகாவாட் அணு மின் திறன் கொண்ட நான்கு நான்காம் தலைமுறை WER 1200 வகை அணுமின் உலைகளை வழங்கும்.

இப்பொழுது இந்தியா அணுக்கரு வழங்குவோரின் குழுமத்தின் ஒப்புதலும் பெற்றுள்ளதால் இந்தியாவில் மேலும் அணு மின்நிலையங்கள் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்குவதில் தடைகள் இருக்காது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும் கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் – விடைகள் ஒவ்வொரு நாளும் தினமுரசில் வெளியாகிறது.

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தையும் பத்தே ரூபா கொடுத்து படித்துக்கொள்ள முடியும்


தினமுரசு நாளிதழ் ரூ.10/= மட்டுமே

ஜோசப் கிருஸ்ணா





# நல்லதொரு சந்தர்ப்பம்





**தற்போது** இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐந்து ஒரு நாள் போட்டித் தொடரில் தரவரிசை ஐந்தைக் கொண்டிருக்கிறது. நியூசிலந்து வரிசை எட்டில் இருக்கிறது. ஒப்பீட்டளவில் பலம் குறைந்த அணியாக இருக்கும் நியூசிலாந்தை இலங்கை தோல்வியுறச் செய்து தொடரை வென்றால் புள்ளிகளின் அடிப்படையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் தரவரிசை மாறாதென்று கருதப்படுகின்றது.

தற்போது இங்கிலாந்துக்கும், தென்னாபிரிக்காவுக்கும் தரவரிசை ஒன்றாலும், தொடர்ந்து இந்தியா அவுஸ்திரேலியா அணிகள் என்பனவும் காணப்படுகின்றது.

இலங்கை ஒரு நாள் கிரிக்கெட் அணி அண்மைக் காலங்களில் தம் திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி வெற்றிகளைக் குவித்ததாக இல்லை.

கடந்த தரவரிசையில் சிபி சீரிஸ் போட்டிகளில் இறுதிப் போட்டியில் இலங்கை தோல்விகண்டது. அதன்பின்னர் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் அரை இறுதி ஆட்டங்களுடன் வெளியேற்றம். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 3–1 என்று வென்றாலும்கூட இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரில் 4–1 என்று மோசமான தோல்வியைச் சந்தித்தது. இந்தச் சூழ்நிலையில் அணியின் மனோபலத்தையும், தைரியத்தையும் மேம்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக நியூசிலாந்துக்கு எதிரான தொடர் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனென்றால் வரும் நாட்களில் மீண்டும் பலம் பெற்றுவிட்ட அவுஸ்திரேலிய அணியை அவுஸ்திரேலியாவிலேயே சந்திக்கும் நிலைமை இலங்கைக்கு உள்ளது.


இதற்கு வாய்ப்பான தொடராகவே நியூசிலாந்துத் தொடர் அமையும். நியூசிலந்து 1984 இல் 2– 1 என்று இலங்கை அணியைத் தோற்கடித்தபின் இதுவரையில் இலங்கையை வென்றதில்லை.

எனவே களநிலமையைப் பொறுத்தவரை இலங்கை நியூசிலாந்தை இந்தத் தொடரில் தோற்கடிப்பதென்பது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை. இந்த விடயத்தில் மஹேல மிகவும் நம்பிக்கை கொண்டவராக இருக்கிறார். அணியிலும் கறை சொல்வதற்கென்று ஒன்றும் இல்லை. ஆனால் தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலைதான் ஒரு கேள்விக்குறி. நடைபெற இருந்த ஒரேயொரு இருபதுக்கு இருபது போட்டியும் அவலமாக முடிந்துவிட்டது. எதற்கும் காலநிலையின் கருணையை எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

# எதிர்பாராதது



**தென்னாபிரிக்காவில்** நடைபெற்று முடிவடைந்த சம்பியன் லீக் இருபதுக்கு இருபது போட்டிகளில் வெற்றிவாகை சூடிய அணி சிட்னி சிக்ஸர்ஸ். அதுவும் பத்து விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்சைப் புரட்டிப் போட்டவர்கள். சிட்னி சிக்ஸர்சின் தலைவர் பிரட்ஹடின். துயரமென்னவென்றால் தென்னாபிரிக்க அணிக்கெதிரான அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவில் பிரட்ஹடின் இல்லை. இவர் நீக்கப்பட்டு மெத்தியூவேட் உள்வாங்கப்பட்டுள்ளார். முப்பந்தைந்து வயதாகும் ஹடின் 43 டெஸ்ட்போட்டிகளில் விளையாடியவர். இறுதியாக நடைபெற்று, இந்தியாவை 4–0 என்று தோல்வியடையச் செய்த அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் கீப்பர் இவர். கடந்த மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப் பயணத்தின்போது ஹடின் அணியில் இணைக்கப்பட்டிருந்தாலும் தனிப்பட்ட காரணங்களால் விலகிக்கொள்ள(மகளின் தீவிரமான சுக வீனம்) அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டவர் இருபத்து நான்கு வயதான மெத்தியூவேட். இப்போது அவரே தொடர்வது ஹடினின்



இடத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. அணித்தலைவர் மைக்கல் கிளார்க் புதிய விக்கெட் காப்பாளருக்கு ஆதரவாகவே கருத்துத் தெரிவித்துள்ளார். சில காலத்துக்கு முன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சைமன் கெட்டிச் அணியில் இருந்து கழட்டி விடப்பட்டபோது, அதன் காரணம் மைக்கல் கிளார்க் என்றே பேச்சு எழுந்தது. இப்போது ஹடின் விடயத்தில் என்னென்ன மறைபொருளோ, இரகசியங்களோ யார் அறிவார்.

இதேவேளை கடந்த வருடம் தென்னாபிரிக்காவின் ஜொகானஸ் பேர்க் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவிற்கு எதிராக ஏழு விக்கெட்டுக்கள் சரிந்த பெட்கமின்சும் அணியில் இல்லை. ஆனாலும் பத்தொன்பது வயது மட்டுமேயான கமின்ஸ் விரைவிலேயே அணிக்குள் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறார். தற்போதுள்ள அணியில் பீட்டர்சிடில், பென் ஹெல்பினாஸ், ஜேம்ஸ் பெட்டின்சன், மிச்சல் ஸ்டாக் வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெறுகின்றனர். அணியில் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களா அல்லது நான்கு பந்துவீச்சாளர்களா என்ற அணித்தலைவரின் முடிவைப் பொறுத்தே முன்னைய நால்வரின் உள்வாங்கலும் அமையும் என்பது இன்னொரு செய்தி. இதேவேளை ரிக்கி பொன்ரிங் அணியில் அங்கம் வகிப்பது அணியின் வரமா, சாபமா என்றொரு கேள்வியும் எழுகிறது. என்ன இருந்தாலும் ஹடின் கைவிடப்பட்டது சரியா, தவறா என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை.

# புதிய வரவுகள்





இலங்கை அணிக்குள் புதிதாகக் புகுந்துகொண்ட ஒரு இளந்தலைமுறை சுழல் பந்துவீச்சாளர் அகில தனஞ்ஜய. இவர் இருபதுபதுக்கு இருபது போட்டிகளில் தன் திறமையை வெளிக்காட்டி இருந்தார். இப்போது இன்னொரு 19 வயதிற்குட்பட்ட அணி வீரர் பற்றிப் பேசப்படுகிறது. அவர் பெயர் தரிந்து கௌசால். இவர் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் களமிறங்குவாரா என்ற கேள்விக்கு மஹேல உறுதியான பதிலேதும் சொல்லவில்லை. திடீரென்று அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து இவரது தன்னம்பிக்கையைக் கெடுத்துவிடக் கூடாதென்பது மஹேலவின் கருத்து. மேலும் இலங்க்க 'A' அணியில் விளையாடி அடுத்த கட்டமாக தேசிய அணி வாய்ப்பைப் பெறுவது மிகவும் நல்லதென்பவர், கௌசால் டெஸ்ட் ஆட்டங்களுக்கு மிகப் பொருத்தமானவராகத் தெரிகிறார் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். டெஸ்ட் ஆட்டத்துக்குப் பொருத்தமானவர் என்ற கருத்து கௌசாலுக்குக் கிடைத்த பெரிய வெகுமதிதான். இதேவேளை இரண்டு மிக இளையோர் பற்றிப் பேசும்போது அனுபவசாலியான ரங்கண ஹேரத் பற்றிப் பேசாமல் இருக்கமுடியாது. ஒரு நாள் தொடரில் அகில தன்னஞ்ஜய உள்வாங்கப்படுவாரா என்ற கேள்விக்கு அணிக்குள் வருவதற்கு ரங்கண ஹேரத்துக்கே கூடிய சந்தர்ப்பம் இருப்பதாக அணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதுவே சாலப்பொருத்தமான முடிவாகவும் தெரிகிறது.

ஆனால் தனஞ்ஜய, கௌசால் என்ற பெயர்களில் இரண்டு மிக இளம் சுழல்பந்து வீச்சாளர்கள் இலங்கை அணியில் நிரந்தர இடம் பிடிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. முரளி இல்லாத அணி என்ன செய்ய இயலும் என்ற ஆதங்கம் நீங்கி, முரளியின் இடத்தை நிரப்ப இளந்தலைமுறையொன்று துடிப்புடன் வெளிப்படுகிறது என்பது மகிழ்ச்சியான செய்தியே.

# ஹிட்லர் வாழ்க்கையில் நிகழ்ந்த திடுக்கிடும் சம்பவங்கள்!

இரண்டாம் உலகப்போர் மூள்வதற்கும் அதன் மூலம் 20 கோடி பேருக்கு மேல் மரண மடைவதற்கும் காரணமாக இருந்த ஜேர்மனிய சர்வதிகாரி ஹிட்லரின் வாழ்க்கை பல திருப்பங்களும் திடுக் கிடும் சம்பவங்களும் நிறைந்ததாகும்.

வட ஆஸ்திரியாவில்(Braunau am Inn) உள்ள பிரானோ என்ற ஊரில் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் அலாயிஸ் சிக்கில் கிராப்பர் ஹிட்லர். இவர் சுங்க திணைக்களத்தின் அதிகாரி யாக வேலை பார்த்து வந்தார். அவரின் மூன்றாவது மனைவியின் நான்காவது மகன் ஹிட்லர்.

1903 இல் ஹிட்லரின் தந்தை இறந்தார். தந்தையின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த ஹிட்லர் நாளுக்கு நாள் முரடனாக மாறினான். மாணவர், ஆசிரியருடன் சண்டை பிடிப்பார். தனது





17ஆவது வயதில் கல்லூரி இறுதி தேர்வில் தேறினார் ஹிட்லர். அதற்காக கொடுத்த சான்றிதழை வாங்கிக் கொண்டுவரும் வழியில் நண்பர் களோடு சேர்ந்து மது அருந்தினார். சான்றிதழையும் கிழித்து எறிந்தார்.

1907 ஆம் ஆண்டில் ஓவியக்கல்லூரி யில் சேர முயன்றார். அதில் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அந்த ஆண்டின் இறுதியில் ஹிட்லரின் தாயார் இறந்துபோனார். அதன் பின்பு ஓவியங்களை தயாரித்து வாழ்க்கை நடத்தினார். இரவில்கூட மண்ணெண் ணெய் விளக்கு வெளிச்சத்தில் கூட ஓவியங்களை வரைவார். இவர் வரைந்த ஓவியங்கள் நல்ல விலைக்கு விற்பனையாகின. அதனால் சொந்தமாக ஓவியக்கூடம் அமைத்தார். இச்சமயத் தில் சிந்தியா என்ற பெண்ணை ஹிட்லர் காதலித்தார். காதல் தோல்வி யடையவே இராணுவத்தில் சேர்ந்தார். முதலாம் உலகப்போரின்போது ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

1918 இல் ஜேர்மனி தோற்றது. இத்தோல்விக்கு ஜனநாயகவாதிகளும் யூதர்களும் தான் காரணம் என்று ஹிட்லர் நினைத்தார். உலகில் ஜெர்மானியரே உயர்ந்த இனத்தவர். உலகம் முழுவதையும் ஜேர்மனிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என விரும்பினார். தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் ஒரு உறுப்பினராக சேர்ந்து தனது பேச்சு வல்லமையால் விரை விலே கட்சித் தலைவரானார். அரசாங்கத்தின் நிர்வாக திறமை இன்மையால் தான் நாட்டில் வறுமை வேலையின்மை பெருகிவிட்டதாக பிரச்சாரம் செய்தார். அரசாங்கத்துக்கு எதிராக மக்களை தூண்டிவிட்டு ஆட்சியை கைப்பற்ற முயன்றார். ஆனால் அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. அரசாங்கம் அவரை கைது செய்து 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்பு அது ஓராண்டு தண்டனையாக குறைக்கப்பட்டது. சிறையிலிருந்த போது 'எனது போராட்டம்' என்ற பெயரில் தன் சுயசரிதையை எழுதினார்.

1928 இல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வியடைந் தது. ஆனால் ஹிட்லர் சோர்ந்து போய்விடவில்லை. தன்னுடைய கட்சியின் பெயரை 'நாசி' கட்சி என்று மாற்றி நாடுமுழுவதும் தீவிரவாதத்தில் ஈடுபட்டார். அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் புரட்சிக்கு வழிவகுத்தார்.

இவருடைய இடைவிடாத உழைப்பும் பேச்சுத் திறனும் இராஜ தந்திரமும் வெற்றி பெற்றன. ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து பெரும் போராட் டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற கட்டடம் கொளுத்தப்பட்டது. ஜனாதிபதியாக இருந்த ஹில்டன் பேர்க் மக்கள் போராட்டத்துக்கு அடிபணிந்தார். 1933 ஜனவரி 30 ஆம் திகதி ஹிட்லரை பிரதமராக நியமித்தார். பிரதமராக இவர் பதவி ஏற்ற ஒன்றரை வருடத்தில் ஜனாதிபதி ஹில்டன் பேர்க் மரணமடைந்தார்.

அதனால் ஜனாதிபதி பதவி யையும் கைப்பற்றிக்கொண்டு ஜேர்மனின் சர்வாதிகாரியானார். பாராளுமன்றத்தை கலைத்தார், இராணுவ திணைக்கள திணை யும், இராணுவ தளபதி பதவி யினையும் தானே ஏற்றுக் கொண்டார். அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் தடை செய்தார். இனிமேல் ஜெர்மனியில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என அறிவித்தார்.

யூதர்களை அடியோடு அழிக்க வேண்டும் என முடிவு செய்து ஒரு பாவமும் அறியாத யூதர்களை கைது செய்து சிறையில் பட்டினி போட்டு சித்திரவதை செய்து கொன்றான். தினமும் சராசரியாக 6000 - 10000 பேர் வரை விஷப் புகை யிட்டு கொல்லப்பட்டனர். ஹிட்லரால் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை சுமார் ஐம்பது இலட்சம் ஆகும். 1939 அல்பேனியா, செக்கொச்லோவக்கியா ஆகிய நாடுகளை கைப்பற்றிக்கொண்டு போலந்து நாட்டின் மீது படைஎடுத்தான்.

இதனால் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகியது. யுத்தத்தின் ஆரம்பத் தில் ஹிட்லரின் கை ஓங்கியிருந்தது. ஆனால் போரில் அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்த பின்பு நிலைமை மாறியது. ஜேர்மனி தலை நகரான பெர்லினில் ஒரு சுரங்கம் அமைத்து தங்கியிருந்தார். இச் சுரங்கத்தில் தான் ஹிட்லரின் அலுவலகமும் படுக்கை அறையும் இருந்தது. ஹிட்லரின் அறை 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டது. 1945 ஏப்ரலின் பின் பெர்லின் நகரின் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுகளை வீசின. ஹிட்லர் தங்கியிருந்த பாதாள சுரங்கத்தின் அருகிலும் குண்டுகள் விழுந்தன. ஈவா பிரவுண் என்ற பெண் 1930 ஆம் ஆண்டு முதல் ஹிட்லர் உடைய மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தார்.

**ஹிட்லரின் மரண சாசனம்**

ஹிட்லர் இறப்பதுக்கு முன் எழுதிய மரண சாசனத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

நாங்கள் இறந்த பிறகு எந்த ஜெர்மன் நாட்டு மண்ணுக்காக கடந்த 12 வருடங்களாக பாடுபட்டு வந்தேனோ இந்த ஜெர்மன் மண்ணிலேயே என்னை யும் ஈவாவையும் உடனே எரித்துவிட வேண்டும்.

என் சொத்துக்கள் எல்லாம் எனக்கு பிறகு என் கட்சிக்கு சேரவேண்டும். கட்சி அழிந்துவிட்டால் நாட்டுக்கு சேர வேண்டும்.

ஜெர்மனி மண்ணின் மீதும், மக்கள் மீதும் நான் கொண்ட பற்றும் பாசமும்தான் என்னை வழிநடத்தின. கடந்த 30 ஆண்டுகளாக என் சக்தி முழுவதையும் என் தாய் நாட்டின் மேன்மைக்காக செலவிட்டிருக்கிறேன்.

இந்தப் போருக்கு நானே மூல காரணம் என்று யாரும் நினைக்க வேண்டாம். ஏனென்றால் போர் வெறி கூடாது. ஆயுதக்குறைப்பு செய்ய வேண்டும்,என்று நானே வலிறுத்தி இருக்கிறேன்.

முதல் உலகப்போருக்கு பிறகு இப்படி இரண்டாவது உலகப்போர் மூளும் என்று நான் சற்றும் நினைக்க வில்லை. எப்படியோ போர் மூண்டு விட்டது.

இந்தப்போரினால் நம் நாடு சந்தித்த பயங்கர விளைவுகள்,நாசமாக்கப்பட பிரம்மாண்டமான மாளிகைகள், தரை மட்டமாக்கப்பட்ட கலையம்சம் மிக்க நினைவுச்சின்னங்கள் யாவும் நம் மீது உலக நாடுகள் நடத்திய கோரத்தாக்கு தலை நம்முடைய பிற்கால சந்ததியின ருக்கு உணர்த்திக்கொண்டே இருக்கும்.

இந்த போருக்கு காரணமானவர் களை பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஜேர்மனிய இளைஞனுக்கும் உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படும்.

இவ்வாறு இறுதிச் சாசனம் எழுதி கையெழுத்திட்டார் ஹிட்லர்.

30 ஆம் திகதி இரவு 9 மணி "இன்று மாலை 4 மணிக்கு இத்தாலிய சர்வதி காரி முசோலினியும் அவரது மனை வியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்". என்று சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்தது.

ரேடியோ செய்தியை ஹிட்லர் நேரடியாக கேட்டார். முசோலினியின் முடிவு, ஹிட்லருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது . அன்றிரவு 12 மணி பெர்லின் நகரம் முற்றிலுமாக ரஷியப் படைகள் வசமாகிவிட்டது என்றும் எந்த நேரத்திலும், சுரங்க மாளிகை தகர்க்கப்படலாம் என்றும், ஹிட்லருக்கு தகவல் கிடைத்தது.

ஹிட்லரின் முகம் இருண்டது. மௌனமாக எழுந்து, தன் தோழர் களுடன் கை குலுக்கினார். பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து, "நானும் ஈவாவும் ஒன்றாக இறந்து விடப்போகிறோம். நாங்கள் இறந்த பின் எங்கள் உடல்களை ஒரு போர்வை யில் சுருட்டி, பெற்றோல் ஊற்றி எரித்து சாம்பலாக்கிவிடுங்கள். எங்கள் அறை யில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள் என் பேனா, கண்ணாடி முதலிய பொருட்களை சேகரித்து, ஒன்றும்விடாமல் எரித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு தன் மனைவியையும் அழைத்து கொண்டு தன் அறைக்கு சென்றார்.

அறைக்கதவு சாத்தப்பட்டது. வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. ஹிட்லரும், ஈவாவும் என்ன ஆனார்கள் என்று வெளியே இருந்தவர்களுக்கு தெரியவில்லை. வெளியே நீண்ட நேரம் காத்திருந்த மந்திரிகளும், தளபதிகளும் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றனர் .

ஒரு சோபாவில் உட்காந்திருந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல்.

அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அவர் சற்றுநேரத்துக்கு முன்னர் தன்னைத்தானே சுட்டுக் கொன்றதால் துப்பாக்கி நுனியில் இருந்து புகைவந்து கொண்டிருந்தது. அவரின் வலது காதுக்கு கீழிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப் படத்தை மார்போடு அணைத்தபடி இருந்தது. அது ஹிட்லரின் தாயாரின் புகைப்படம்.

அவருடைய மனைவி ஈவா வெள்ளைப்புள்ளிகளோடு கூடிய கருநீல மாக்சி உடை அணிந்து இருந்தாள். அவள் உடல் நீலம் பாய்ந்திருந்தது. எனவே அவள் சைனட் விஷம் சாப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது. இருவரது உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப்போர்வையில் சுற்றினார்கள். பின்னர் அந்த உடல்களை தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கி கொண்டு போய் எரித்தார்கள்.

சிலமணி நேரம் அங்கு வந்த ரஷ்ய படைகள் ஹிட்லரை காணாமல் திகைத்து போனார்கள். ஹிட்லர் ஈவு இரக்கம் அற்ற கொடியவராக இருந்தாலும் சில நல்ல குணங்களும் இருந்தன. ஹிட்லர் குழந்தைகளிடமும் மிருகங்களிடமும் அன்பு கொண்டவர். மாமிசம் சாப்பிடமாட்டார். புகை பிடிக்கமாட்டார்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 495

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| | 26 | | 28 | 29 | |
| 31 | 32 | 33 | 34 | 35 | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **19.11.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 495
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு,
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 493- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 சி | 3 யோ | | 5 னு | 6 ம |
| 7 தி | 8 ங் | 9 க | 10 ள் | | 12 த் |
| | 14 க | 15 ம் | | 17 வ | 18 த |
| 19 தோ | 20 ம் | | 22 கா | 23 ம் | 24 ல |
| 25 ம் | | 27 டி | 28 ண் | 29 மி | |
| 31 பு | 32 ழு | | 34 பு | 35 ச | 36 ல் |

**மேலிருந்து கீழ்**

01. போதகன்.
02. அசைவு அல்லது தோத்திரம். (குழம்பியுள்ளது)
03. இது நாம் அறிந்து நடைபெறு வதில்லை. (குழம்பியுள்ளது)
05. கோணம்.
16. பேரோசை (திரும்பியுள்ளது)
18. உடலுக்கு குளிர்மையான பானம் ஒன்று.
23. பழம் தரும் மரங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
26. மனத்திட்பம் இல்லாதவர்.

**இடமிருந்து வலம்**

01. துணை.
05. உறுப்பு குறைவுற்றவரை இப்படியும் அழைப்பர்.
07. இத்தனை மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உணவு உண்ணலாம் (குழம்பியுள்ளது)
13. வாட்டம் அல்லது விம்மியழுதல்.
21. முனிவர்.
28. அறுபது விநாடி கொண்ட நேரம். (திரும்பியுள்ளது)
31. வெற்றியின் இரகசியம் இதில்தான் உள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.493 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எஸ்.ஏ.முகம்மது இபாஸ், அல்மினாபுரம், தில்லையடி, புத்தளம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.
02. த.சைந்தவி, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகல.
03. எவ்.எவ்.ஷபா, அக்கரைப்பற்று.
04. த.செல்வநாயகம், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
05. ம.யழனா, காளிகோவிலடி, திருகோணமலை.
06. க.வரதாராஜா, பெரிய கடை, மன்னார்.
07. ந.நிதர்ஷன், மாசார், பளை.
08. வ.ஜெயரூபன், தம்பசிட்டி, பருத்தித்துறை.
09. ச.இமயவாணன், விஸ்வமடு, கிளிநொச்சி.
10. அ.தர்மினா, உடப்பு, புத்தளம்.



இராமசாமி ரமேஷ்,
அளம்பில்

ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

**"அம்மா!** ஒரு சேட்... கொண்டு வாங்க.." சொல்லி விட்டு வேம்பின் மறுபுறம் மறைந்துகொண்டான். மடல்களின் தூதில் மனங்களை பறிமாறிக் கொண்டாலும், அந்த முதலாம் சந்திப்பின் சங்கடமென்பது இன்பம் தின்னும் துன்பந்தான்!

தாய்தந்த சேட்டினை அவசரமாய் மாட்டிக்கொண்டவன், சூரியனை நோக்கி கிடக்கும் தாமரைகளின் தவிப்போடு வீட்டின் முன் வந்தான். இரு விழிகளும் பேசிக் கொண்டன. ஆனால், உதடுகள் சில மணிகள் ஓர் வார்த்தையைக்கூட உச்சரிக்கவில்லை. புன்னகைத்தபடி அவனின் விழிகள் "வீட்டுக்குள்ளே வாங்க" என்றன. அதை முந்தி "வாங்கோ பிள்ளை வீட்டுக்குள்ள! என்ன தம்பி பார்த்துக் கொண்டு நிக்கிறாய்? பிள்ளைய உள்ளுக்க கூப்பிடய்யா..." சொல்லிவிட்டு தாய் வீட்டினுள்ளே விரைந்து களிமண் குந்திலே பன்பாயை விரித்துவிட்டார். நிலா, மௌனம் தின்றவளாய் நட்சத்திரனின் எளிமையையும் அவன் இயல்பையும் இரை மீட்டிக் கொள்ளும் ஜீவனாய் மீட்ட முனைந்திருந்தாள்.

"பிள்ள! எங்கயிருந்தம்மா வாறீங்க?" மகேஷ்வரி வினவ நிலா உதடு பிரித்துப் பேச எத்தனித்தாள்.

" அம்மா! இது நிலா! என்ர ப்ரண்ட்! சொந்த இடம் கிளிநொச்சி..." அவன் அவளை அறிமுகப்படுத்திய போது, இவளுக்குள் இன்பச் சுனாமி சுழன்றடித்தது.

தன் பெயர் அவனால் உச்சரிக்கப்படுகின்றபோது, புதிதாய் பிறப்பதாகத் தோன்றியது. உடலெங்கும் உற்சாகம், மின்சாரம் பாய்ந்த தாய் பரவியது! ஆனாலும், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. நட்சத்திரனின் உடலெங்கும் முத்துக்களாய் சிதறிக்கிடந்த அம்மையின் அடையாளங்கள் இவளுக்குள் வேதனைக் குழியை வெட்டிவிட்டது. "என் நட்சத்திராவுக்கு, எப்படியெல்லாம் வலித்திருக்கும்?" சோகம்வந்து அவளிடத்தில் அப்பிக்கொண்டது. விழிகளால் அவனை நலம் விசாரித்தாள் நிலா!

" சரி! ரெண்டுபேரும் கதைச்சுக்கொண்டிருங்கோ... நான் இப்ப வாறன்" மகேஸ்வரி கொஞ்சம் பதட்டத்தோடு தான் குசினியை நோக்கி நகர்ந்தாள். "கடவுளே! இருக்க வேனும்.." எதிர்பார்ப்பு ஆவலாய் மேலிட, சீனிப் பேணியைத் திறந்தாள். ஒருவருக்கு மாத்திரம் தேநீர் தயாரிக்க முடியும் சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டுமே!

குசினிக் கதவை ஒருக்கழித்து சாத்திவிட்டு, இரண்டு காணி தள்ளியிருந்த நல்லம்மாவின் பெட்டிக் கடைக்கு ஓடினாள் மகேஸ்வரி. இவளின் வீட்டிற்கு நிலா வந்த நேரத்திலிருந்து அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் தலைகள் வெளியில் முளைக்கத் தொடங்கிவிட்டன. எதிர்ப்படுகின்றவர்கள் எல்லாம், மகேஸ்வரியிடம் வினாத்தொடுக்க முற்படுகையில், இவள் காரியத்தில் கொண்டிருந்த கவனத்தால் கடைக்குப்போகும் சிந்தனையிலிருந்து சிதறவில்லை. நல்லம்மா கடையில் கூட்டம் அதிகமில்லை. அவசரமாக வந்த மகேஸ்வரி,

" நல்லம்மாக்காச்சி!! அக்கோ..." என்று குரலிட,

"ஓம் பிள்ள! நில்லடி... நில்லடி! இந்தா.. டக்கெண்டு வந்துடுறன்.. இந்தக் கருவாட்ட பறணில கொட்டிப்போட்டு ஓடிவாறன்..." என்றாள் நல்லம்மா. ஐயோ!! என்ற அவசரம் இவளுக்கெங்க தெரியப்போகுது.. மகேஸ்வரி உள்ளுக்குள் முணுமுணுத்துக் கொண்டு, கடைக்காரி நல்லம்மா வருவாளா என பார்த்தபடி நின்றாள். மனசுக்குள் வாங்கவேண்டிய பொருட்களையும், அவற்றின் விலைகளையும் கணித்துக் கொண்டிருந்தாள்.

வீட்டிலே, முதல் சந்திப்பின் சொல்லமுடியாத அந்த நேரத்தில் இரண்டு இலக்கியப் பூக்களும் தமை மறந்திருந்தன. நட்சத்திரன் கேட்டான், "எப்போ புறப்பட்டீங்க நிலா?" "காலைலதான்" மொட்டையாய் முடித்துக் கொண்டாள். வெட்கம்வந்து வெளிவந்த பதிலை பாதியிலேயே பறித்துக் கொண்டது.

" இண்டைக்கு மத்தியானத்துக்கு... இங்க சாப்பிட்டு பின்னேரமா போகலாம் தானே!" "ஐய்யய்யோ! நான் இப்பவே வெளிக்கிடப் போறன்.." மனசு சொன்னது, வாழ்நாள் முழுவதும் உன்னோடுதானே இருக்கப் போகிறேன் என்னவனே!! போக விருப்பம் குறைவுதான். ஆனாலும், பெண்ணுக்கு இடப்பட்டுள்ள வரையறைகள் வந்து பயமுறுத்திவிட்டுப் போயின. எந்தவித அத்தாட்சிப் படுத்தலும் இல்லாமல், காதலனாக இருந்தாலும் இன்னொரு ஆடவன் வீட்டில் அநாவசியமாக நிற்பது, நம் கலாசாரத்துக்கு ஒத்து வராது. நிலாவுக்குத் தெரியும்!! "இந்தத் தழும்புகள்... அப்பவும் வலிக்கிறதா நட்சா??" என்று, இவள் முடிக்க, மகேஸ்வரி ஒரு தட்டிலே பிஸ்கட்டுக்கள் கிடக்க, மறு கையில் தேநீர்க் குவளைகளோடு உள்ளே நுழைந்தாள். அம்மாவை ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தியபடி பெருமையோடு பார்த்தான் நட்சத்திரன். இந்த ஜீவன்கள் இல்லாது போனால், என் ஒவ்வொரு அசைவுகளும் அர்த்தப்படாமல் அல்லவா போயிருக்கும்!

இவர்களின் தியாகம்தான் என்னை துலங்கச் செய்யும் பின்னூட்டல்கள்! நெஞ்சம் கனத்தது.

(வலிகள் தொடரும்...)



# அழுகைகள் நிரந்தரமில்லை

வாரமொரு சிறு கதை



அலெக்ஸ் பரந்தாமன்.
புதுக்குடியிருப்பு.

நீண்ட நாட்களாக பொய்த்துப் போயிருந்த வானம் இன்று பொலுபொலுவென கண்ணீர் கொட்டி அழுவது போன்று இருந்தது அவருக்கு. வானம் கொட்டி அழுவதை அவர் எந்த வித இரசனைகளுமின்றி.... கரும்புகை போன்று மண்டிக் கிடந்த அந்த வெளிப் பரப்பை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தார்.

இப்போது வானம் அழுவது போன்று அவரும் அழத் தொடங்கினார். அவருக்கு மனதிலே ஆயிரம் கவலைகள்... பிரச்சினைகள்... பாரிய இழப்புக்கள்...

ஆனால், வானத்துக்கு...?

வானம் ஏன் அழுகிறது...? அதற்கு என்ன கவலை இருக்கிறது? பூமியிலே மனிதர்கள்செய்யும் சில அராஜகச் செயற்பாடுகளைப் பார்த்து மனம் பொறுக்க முடியாமல், வானமும் அழுவதாகக் கூறிக்கொள்வது இதைத்தானோ...?

வானம் தன் அழுகையை நிறுத்தவில்லை. அதேபோன்று அவரும் பழைய நினைவுகளால் உந்தப்பட்ட நிலையில் அழுதுகொண்டிருந்தார் அமைதியாக.

மனதில் உள்ள துன்பச்சுமைகள் அழுவதனூடாக... மெல்ல மெல்ல அதன் கனதி குறைவாகத் தெரிந்தது அவருக்கு.

'அழுதும் என்ன பயன்...?'

அவரது உள்மனம் கூறிக்கொள்கிறது. ஆயினும், அழுவதிலும் ஓர் ஆனந்தம் இருப்பதை அவரால் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

"ஏன்... இதுவரை காலமும் அழுதது போதாதா...?"

மனதில் எங்கோ ஒரு மூலையில் எதிரொலிக்கிறது வார்த்தைகள்.

கல்லுகளும் முள்ளுகளுமாய்... குன்றும் குழிகளுமாய்... எதிர்நீச்சல் அடிப்பதற்கு அவர் மிகவும் சிரமப்பட்டார்.

வலுக்குன்றிய உடலோடு அவருக்கு சுமையாய் தெரிந்தது வாழ்க்கை.

"ஏதோ இருக்கும்வரைக்கும் இழுபடுவம்..." என்று எத்தனை தடவை, எத்தனை நாளைக்குத்தான் மனசுக்குள்ளே சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பது?'

"பட்ட கடன் கழியுமோ?
பாவி உயிர் பிரியுமோ?
கட்டை காடு செல்லுமோ?
கவலைகள் இனி மறையுமோ?"

அவருக்கு உளத்தாக்கங்கள் அதிகமாகும்போது மனது விரக்தியாகப் பாடிக்கொண்டே போகும். அவருக்கென்று உலகில் எதுவுமில்லை. 'தனித்துப் போய் விட்டேன் யான்...' எனும் மனப்பாங்கு அவருள் குடிகொள்ளத் தொடங்கிய நாளில் இருந்து அழுகையே அவருக்கு வாழ்வாகிப் போனது.

சில சமயங்களில், 'நான் ஏன் அழுகிறேன்...? எதற்காக அழுகின்றேன்...?' என்ற எண்ணங்கள்... விபரமற்ற நிலையாகி... அழுதுகொண்டே இருப்பார்.

அவல ஒலிகள்... ஒப்பாரி ஓலங்கள்... இரத்தச் சிதறல்கள்... உடலுறுப்பு இழந்தோர்... போன்றவை அவரது கண்களில் தென்படும் சமயங்களில், அவரின் மனம் தளர்ச்சியுறத் தொடங்கிவிடும். விழிகளில் இருந்து நீர்விழத் தொடங்கும். கால்கள் தளர்ச்சியுற... கரங்களால் எதையாவது பற்றிப் பிடித்துக் கொண்டு நிற்பார்.

"கடந்த காலத்துயரின் வலிகள்... எனக்கு மட்டுமல்ல... எல்லோருக்குமானதே...." என்ற சிந்தனைகள் அவருள் சிறகடிக்கும் சமயங்களில் வாழ்வின் நம்பிக்கை பற்றிக் கொள்ளும்.

மறுவிநாடி....

மீண்டும் பழைய நினைவுகள்... பழைய காட்சிகள்... அதேவலிகள்... அதே பிம்பங்கள்....

அவர் சுயநிலையடைகிறார் திடுக்குற்றவராக.

'உண்மைதான்! இதுவரைகாலமும் அழுகையே வாழ்வாகிப்போன நிலையில், இனி ஆனந்தப்பட என்னதான் இருக்கிறது. சிரித்து மகிழவேண்டிய காலங்களை இடர்கள் நிறைந்த போரின் வலிகள் சீரழித்துவிட்டன. இனி எதுவுமில்லை... என்றான நிலையில், சிரித்து மகிழ என்னதான் இருக்கிறது...?'

விழிகளில் இருந்து ஒழுகும் கண்ணீர்த்துளிகள்...தரப்பாள் வீட்டின் தாழ்வார நீரோடு சங்கமித்துப் போகின்றன. கூடவே, அடித்துச்செல்லப் படும் நீரோடு... அதன் மேல் நீர்க்குமிழிகள்... மனிதனின் வாழ்வைப் போன்று!

அவர் நீர்க்குமிழிகளை உற்றுப் பார்க்கின்றார்.

'மனதைப் பாரமாக அழுத்தும் துயரிடைச் சுமைகள்... இந்த நீர்க்குமிழ்கள் போன்று மறைந்து போகாதா...' எப்பதான் மனதை விட்டு இவைகள் அகலப் போகிறதோ...?'

குளிர்கால நிலையிலும், அவரிடமிருந்து வெளிக்கிளம்புகிறது அனல்மூச்சு. பலமாக வீசத் தொடங்குகிறது காற்று. கூடவே நீர்ப்பிசிறல்கள்... இடி முழக்கங்கள்...

அந்த இடிமுழக்கங்களின் ஒலிகள்.. அவரை மீண்டும் இழுத்துச் செல்கின்றன பழைய நிலைக்கு.

எங்கும் அழுகையின் வெளிப்பாடாகவே இருந்தது. துயர் நிரம்பிய சாவொலிகளைக் காற்று அங்கும்; இங்குமாகக் காவித்திரிகின்றன. வண்ணக்கோல வடிவங்களாய் சிதைந்த தரப்பாள்களில் தெரியும் உதிரத் தெறிப்புகள்... அறுபட்ட உடலுறுப்புக்கள் ஆங்காங்கே மணற்தரைகளில்...

மீண்டும்...

எங்கேயோ இடிமுழக்கங்களுக்கான ஆரம்ப ஒலிகள் அடுத்தடுத்து.

அதன் விளைவு...?

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட அவரின் குடும்பத்தில் தனித்துப் போகிறார் அவர் மட்டும்.

வாழ்வின் பயணம் நேரானதல்ல! வளைவுகளும் நேர்கோடுகளுமாய்...

வானம் அழுது முடித்துவிட்டிருந்தது. ஆகாயமெங்கும் ஆக்கிரமித்து நின்ற மந்தாரம் மெல்ல விலகத் தொடங்குகிறது! வானில் அடம்பிடித்து நின்ற கருமேகக் கூட்டங்களைக் காற்றானது கடும் பிரயத்துடன் இழுத்தபடி... சென்று கொண்டிருந்தது! இருண்ட நிலப்பரப்பெங்கும் மெலிதான வெளிச்சத்தின் பிரதிபலிப்பு! வானத்தின் வெளிப்பின் பின் பூமியின் முகம் நன்கு தெரியத் தொடங்குகிறது.

இயற்கையின் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன!

வீட்டின் தாழ்வார வாசலில் நின்றவாறு, இந்த மாற்றங்களை அவதானித்துக் கொண்டிருந்த அவரது முகத்திலும் தென்பட்டன சில மாறுதல்கள்!

இயற்கை சூட்சுமமாக ஏதோ ஒன்றை வெளிப்படுத்திவிட்டுச் சென்றது போலிருந்தது அவருக்கு. பற்றற்று நின்ற மனம் இப்போது எதையோ பற்றிப் பிடித்ததான உணர்வு அவருக்குள்.

வெளித்த வானத்தை நோக்கி அவரின் விழிகள் மலர்கின்றன! நம்பிக்கை... அவருள் வேரூன்றத் தொடங்குகிறது. நீலவான்பரப்பில் குருவிகள் இரண்டு குதூகலித்தபடி... சிறகடித்துப் பறக்கின்றன.

நீண்ட நாட்களின் பின்பு.... பொலிவாகி புன்னகைக்கிறது அவரது முகம்!

ஆம்!

அழுகைகள் என்றுமே நிரந்தரமில்லை!

# இலக்கிய நயம் 103

தருவது கே.வி.குணசேகரம்


# விதி வழி வரும் வாழ்வு

**"பரியினும் ஆகாவாம் பால் அல்ல உய்த்துச் சொரியினும் போகாதம"**

என்பது குறளின் வாக்கு. விதியின் காரணத்தால் தமக்குச் சேராத பொருட்கள் ஒருபோதும் தன்னை வந்துசேராது. தனக்குரிய பொருட்கள் கடல் கடந்திருந்தாலும் வந்துசேரும் என்று குறள் சொல்கிறது. வேதங்கள் உபநிடதங்கள் பகவத்கீதை, அறநூல்கள், திருமந்திரம் போன்ற அரிய நூல்கள் யாவும் கூறுபவற்றை வள்ளுவர் இரண்டு அடிகளால் கூறிவிடுவார். திருக்குறளைப் படிப்பவர்கள் தமிழிலும், வடமொழியிலும் எழுதப்பெற்ற அத்தனை அறநூல்களையும் கற்றறிந்தவர்களாவர். இவ் அனைத்து நூல்களினதும் தொகுப்புத்தான் திருக்குறள். விதி அல்லது ஊழ் பற்றி பல்லாயிரம் வரிகளில் படிப்பவர்கள் விளங்கிக் கொள்ளமுடியாதவாறுதான் அற நூல்கள் கூறுகின்றன. அதை வள்ளுவன் பத்துக் குறள்களில், இருபது வரிகளில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

உயிர் தான் செய்த வினைக்கு ஈடான பயனைச் சிவபெருமான் வரையறுத்து அவ்வவ் உயிர்களிடம் சேர்த்து வைத்தலே விதி அல்லது ஊழ் எனப்படும். சைவ சித்தாந்தப் படி அவரவர் செய்த வினைப் பயனை அவரவரே அனுபவித்தல் வேண்டும். அவ்வினைப் பயனைப் பங்கீடுசெய்து இன்னொருவருக்குக் கொடுக்கமுடியாது. வீடு பழுதடைந்தால் இன்னொரு வீட்டை அமைப்பதுபோல இவ் உடம்பு பழுதடைந்தால் இன்னொரு உடம்பினை அவ்வுயிரின் வினைக் கேற்பச் சிவபெருமான் படைத்து அவ்வுயிரை அவ்வுடம்பில் செல்ல வைக்கிறான். அவரவர் தகுதிக் கேற்ப, பணபலத்திற்கேற்ப வீடு கட்டுவது போல, அவர்களது பாவ புண்ணியங்களுக்கேற்ப உடல் அமைக்கப்பட்டு உயிருக்குக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு திருமந்திரம் சொல்கிறது.

உலக வாழ்வைத் திருவள்ளுவர் கூறியதுபோல விளக்கமாகவும், புரியும்படியாகவும் யாரும் கூற வில்லை. வேதங்கள் கூறிய தத்துவங்களுக்குப் பல்வேறுவிதமான முரண்பாடான கருத்துக்களைப் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் வள்ளுவர் விதியைப் பற்றிக் கூறிய கருத்துக்களுக்கு முரணான விளக்கங்களை இதுவரை யாரும் சரியாகச் சொன்ன தில்லை. ஒருவனுக்கு செல்வம், அறிவு, புகழ் என்பன ஏற்படவும் ஊழ்தான் காரணம். பெருஞ்செல்வந்தர் பெரும்பொருளை வைத்திருந்தாலும் அதை அனுபவிக்க விதிவேண்டும். பெரும் அறிஞர்களுக்குப் புகழ்வரவும் விதி நன்றாக இருக்கவேண்டும். விதி என்பது ஒவ்வொருவரும் பிறப்புகளில் செய்யும் வினைகள். அந்த



வினைகள் காத்திருத்து உரிய வேளையில் சம்பந்தப்பட்டவரை வந்தடையும். அதற்கு முன்வராது. கடவுளைத் தொழுதாலென்ன, கடும் முயற்சிகள் பலவும் செய்தாலென்ன விதியிருந்தால்தான் அது வந்து சேரும் என்கிறார் வள்ளுவர்.

சிவகுருநாதன் பெரும் பக்திமான். கடவுளைக் கணப்பொழுதும் மறவாமல் தொழுபவன். தானதர்மங்கள் பலவும் செய்பவன். அவன் உழைக்கத் தொடங்கிய நாளில் இருந்து அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்கள் பல எடுப்பான். அவனது நண்பன் நடராஜன். மிகுந்த ஏழை. கடவுள் பக்தியுள்ளவன். இருப்பவர்களுக்கு தன்னால் இயன்றளவு உதவிகள் செய்பவன். அவனுக்குக் கடவு- ளிலும் உழைப்பிலும்தான் நம்பிக்கை. அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை இல்லை. இருவரும் பட்டணத்திற்குச் சென்றால், அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்கள் பலவற்றை சிவகுருநாதன் வாங்குவான். நடேசன் வாங்கமாட்டான்.

உடலை வருத்தி உழைத்து அதிர்ஷ்ட இலாபச் சீட்டை வாங்குகிறாய். ஏதாவது உண்டால் உடலிலாவது சேரும். நீ எடுத்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டின் பணத்திற்கு ஒரு குமரைக் கரை சேர்த் திருக்கலாம் என்பான் நடேசன். அன்று சிவகுருநாதன் பட்டணத்திற்கு வரவில்லை. அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விற்பவன் சிவகுருநாதனைக் காணாமை யால் நடேசனைப் வற்புறுத்தி ஒரு சீட்டைக் கொடுத்தான். நடேசன் பேசிப் பேசிப் பணத்தைக் கொடுத்தான். மறுவாரம் பத்திரிகையில் நடேசனுக்கு முதற்பரிசாக ஒரு கோடி ரூபா கிடைத்த விபரம் வெளியாகியிருந்தது. அதைக் கேள்விப்பட்ட சிவகுருநாதன் கவலைப்படவில்லை. எல்லாம் விதியின்படி தான் நடைபெறும் என நினைத்து நடேசனது வீட்டுக்குச் சென்று அவனைப் பாராட்டி மகிழ்ந்தான்.

# கருத்துக் களம்

திவிநெகும சட்டமூலம் அமுலாக்கப்படுவதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்மொழியப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்கள் இல்லாது செய்யப்படுவதாகக் குரல்கள் கேட்கின்றன.

அதேவேளை திவிநெகும இல்லாது செய்யப் பட்டால் அதன்கீழ் உள்வாங்கப்பட்டுள்ள சமுர்த்தித் தொழிலாளர்களின் எதிர்காலம் பாதிக்கப்டும் என்ற கருத்துக்களும் வாதப்பிரதிவாதங்களும் முன்னெடுக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட இந்திய வம்சாவழித் தமிழன் என்ற வகையில் எமது சமூகத்திற்கு பயன்படக் கூடிய பல்வேறு திட்டங்கள் திவிநெகும சட்டமூலத்திற் குள் அடங்கியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. குறித்த இச்சட்டமூலத்தில் உள்ளடங் கியிருக்கும் சமுர்த்திப் பயனாளர்களாக மலை யக மக்கள் தெரிவு செய்யப்படாத போதிலும், வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு உட்பட்ட வாழ்வாதார தேர்ச்சிகள் சமமான முறையில் வேறுபாடுகள் இன்றி பகிரப்படுமாயின் மலையக மக்கள் இதன்மூலம் அதிக பலாபலன்களை அடையக்கூடியதாக இருக்கும்.

எஸ்.மாடசாமி,
ஹட்டன்.

கருத்துக்களம்.
தினமுரசு, வாரமலர்.
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


கைமேல் பலன் தரும் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ துர்க்கா தேவியே




# சிந்தியா பதில்

**@சிந்தியா! இலங்கையில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஏற்படப்போகும் மாற்றங்கள் எவ்வாறு இருக்கும் என்று நீர் கருதுகிறீர்?**

ம.ஷங்கர், செட்டிக்குளம்.

சர்வதேசம் என்று சொல்லப்படு கின்ற மேற்குலகினால் இலங்கையை நோக்கி கேட்கப்படுகின்ற மனித உரிமை தொடர்பான கேள்விகள் அக்கறைகள் அனைத்துமே அவர்களின் வெளிவிவகார எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

எனவே. இலங்கை அரசு தமது விருப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் இசைந்து கொடுக்கின்றது என்ற நம்பிக்கை சர்வதேசத்துக்கு ஏற்படும்வரை இவ்விடயத்தை தூக்கிப் பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் நன்றாகவே தெரிகின்றது.

எனினும் இந்தியா. சீனா போன்ற ஆசிய நாடுகள் மேற்குலகு ஓர் அளவுக்கு மேல் இலங்கையில் வாலாட்ட அனுமதிக்கக்கூடாது என்பது உள்ளூர உறுதியாக இருப்பதால் பாரிய தாக்கங்களை மேற்குலகினால் செய்யமுடியாது.

எது எப்படியிருப்பினும் மனித உரிமை என்பது உயர்ந்த மட்டத்தில் பேணப்படுவது உறுதிப்படுத்தப்படு மாயின் அனைவருக்கும் சந்தோசம்தானே.

**@சிந்தியா! கூட்டமைப்பின் உள்வீட்டுச் சிக்கல்கள் எந்தளவில் இருக்கிறது?**

த.யாழுவன், அரியாலை.

கூட்டமைப்பு என்ற ஒன்றுக்குள் இல்லையென்றால் செல்லாக் காசாகி விடுவோம் என்ற நம்பிக்கை அதில் உள்ள எல்லோருக்கும் இருக்கின்றது. அதனால் தங்களுக்கிடையிலான சில்லெடுப்புக்கள் எல்லைமீறிப் போகவிடாமல் உள்ளுக்குள்ளே சிணுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை குறைந்தபட்சம் அதில் இருக்கும் தலைவர் சம்பந்தர் இருக்கும் வரையாவது தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.




**@சிந்தியா! செய்திகளில் வருவது போன்று 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டால் அடுத்தது என்ன?**

கி.குகநேசன், ஹற்றன்.

இந்த ஜனநாயக நாட்டில் இருக்கின்ற கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி யாரும் எதையும் பேசலாம். அவையெல்லாம் அரசாங்கத்தின் கருத்துக்கள் அல்ல என்று அரசாங்கமே கூறிவிட்ட நிலையில், அடுத்தது என்ன என்று யோசித்து நேரத்தை வீணடிப்பது அவசியமில்லாதது என்பதே அடியேனின் கருத்து.

குகநேசனின் கருத்து என்னவோ...?

**@சிந்தியா! திவிநெகும தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறு இருக்கும் என்று கணிப்பிடும் பார்க்கலாம்?**

க.ஆகாஷ், திருகோணமலை.

ஆகாஷ் கணிப்பீடு என்பதற்கு தேவையே இல்லாமல் போய்விட்டது. உங்களின் இந்தக் கேள்விக்கான பதில் எழுதிக்கொண்டிருக்கும்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு என்ன என்பதை சபாநாயகர் அறிவித்து விட்டதாக குறுஞ்செய்தி தகவல் வந்து சொல்கிறது.

திவிநெகும சட்டமூலத்தை நிறை வேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்றும் அந்தச் சட்டத்திலுள்ள எட்டாவது உறுப்புரையை நிறைவேற்று வதற்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப் பும் நடத்தப்படவேண்டும் என்று நீதி மன்றம் பரிந்துரை செய்துள்ளது.

**@சிந்தியா! ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பட்டம் சூட்டி அழைக் கிறார்களே இது சரியா?**

எவ்.ஆர்.அஜ்மல், கல்முனை.

பிழைதான். ஆனால் யார்தான் அந்தத் தவறைச் செய்யாமல் இருக்கிறார்கள். இன்றைய ஆசிரியர்களும் நேற்று மாணவர்களாக இருந்தபோது தங்களது ஆசிரியர்களுக்கு பட்டம் சூட்டி மகிழ்ந்தவர்களே.

இது ஆசிரியர் - மாணவர் மத்தியில் இன்றி சகல இடத்திலும் காணப்படுகின்றது. இது பற்றி நான் படித்த குட்டிக் கதை ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள்.

படைவீரர்கள் தங்கள் மேல் அதிகாரிக்கு செல்லப் பெயரிடுவது வழக்கம். இதனை அறிந்த ஓர் உயரதிகாரி தனக்கு என்ன பெயர் இட்டுள்ளீர்கள் என்று தனது சிப்பாய் ஒருவரிடம் கேட்டார்.

அவன் தயக்கத்துடன் 'கன்னிப்பெண்' என்றான்.

அதிகாரி குளிர்ந்துபோனார். நான் நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாடுகளின் தன்மையைப் பார்த்து இவ்வாறு வைத்துள்ளீர்களா? என்று பெருமையாகக் கேட்டார்.

"இல்லை சேர் உங்களுக்கு எந்தவிதமான முன் அனுபவமும் கிடையாது என்பதால்தான் அந்தப் பெயர்" என்றான் சிப்பாய்.

**@சிந்தியா! நடைபெற்றுவருகின்ற இலங்கை - நியூசிலாந்துத் தொடரில் இலங்கை அணி ஆதிக்கம் செலுத்துமா?**

என்.பிரணவன், வவுனியா.

சும்மா போங்கள் பிரணவன். இந்தத் தொடரில் யாருமே அழைக்காமல் உள்நுழைந்து இருக்கின்ற மூன்றாம் தரப்பு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

என்ன கடுமையாக யோசிக்கின்றீர் போல் தெரிகிறது! அதுதான் மழையைச் சொன்னேன்.

இருபதுக்கு இருபது போட்டியை மழை கழுவிச் சென்றுவிட்டது.

ஒருநாள் தொடரிலும் முதலாவது போட்டி நேரம் முழுமையாகக் கழுவிய மழை இரண்டாவது போட்டிக்கு டக்வத் லூஸ் முறைப்படி வெற்றி தோல்வியைத் தீர்மானித்தது. இன்னும் காலநிலை சீராக இல்லாததால் தொடரின் ஏனைய போட்டிகளும் சந்தேகம்தான்.

**@சிந்தியா! விஜயின் துப்பாக்கி பற்றி அறிய ஆவலாக இருக்கிறது. ஏதாவது சொல்லுங்களேன் ப்ளீஸ்...?**

ஏ.சங்கவி, மன்னார்.

சங்கவி இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளது. ஆர்வத்தை கொஞ்சம் அடக்கிக் கொள்ளுங்கள். துப்பாக்கி 9 ஆம் திகதி திரைக்கு வந்தவுடன் பார்த்து முழுமையாக எல்லோருமாகத் தெரிந்து கொள்ளுவோமே.

[ 05 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

# 'நிலம் பிரிந்த' கவிஞன்...



**கேள்வி: எழுத்துலகில் மிக அண்மையில் காலடி எடுத்து வைத்துள்ள நீங்கள் உங்களது இரண்டாவதுகவிதை நூலுக்கு சாகித்திய மண்டல விருதைப் பெற்றுள்ளீர்கள். இதனை நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?**

**பதில்:** மகிழ்ச்சியான விடயம்தான். இருந்தாலும் அதை கொண்டாடும் நிலையில் எனது சூழலோ மனநிலையோ இல்லை. நான் 2000 ஆம் ஆண்டுகளிலிருந்தே எழுதத் தொடங்கினேன். இருப்பினும் 2006 இல் தான் எனது முதலாவது கவிதை நூலான "மறுக்கப்பட்ட நியாயங்கள்" வெளிவந்தது. அது நான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த போது வந்தது. அப்போதைய சூழல் தனிப்பட்ட நிலையிலும் பொதுவாகவும் ஆரோக்கியமானதாக அமையவில்லை.

அதன்பின் 2011 இல்தான் நிலம் பிரிந்தவனின் கவிதை என்னும் நூல் காலச்சுவடு வெளியீடாக வந்தது. அதற்குத்தான் 2011ஆம் ஆண்டிற்கான சிறந்த கவிதைக்குரிய அரச இலக்கிய விருது கிடைத்தது.

இவ்விருது எனக்குள் சில புரிதல்களை தந்திருக்கிறது. அதாவது ஈழத்து இலக்கியத்தை பொறுத்தமட்டில் விருதின் பின்புதான் பல படைப்புகள் கவனிப்புக்குள்ளாகின்றன என்னும் எமது சமூகத்தின் பலவீனமான இலக்கியப்போக்கை உணரமுடிகிறது. இது சில படைப்பாளிகளுக்குப் பொருந்தாது போனாலும் என்னைப் போன்றவர்களுக்கு அதிகம் பொருந்துவதாய் உள்ளது.

யாரும் விருதுக்காக இலக்கியம் படைப்பதில்லை என்ற உண்மையும் இதில் பொதிந்துள்ளது. உண்மையில் ஆறு வருடங்களுக்கு மேலாக அகதி முகாமில் நிலமின்றி அவலமுறும் எனது மக்களின் துன்பத்தை கவிதையில் பதிவு செய்தேன். அவலம் விருதுக்குரியதல்ல. அது தீர்க்கப்பட வேண்டியது என்பதையே நான் அதிகம் விரும்புகின்றேன். ஆதலால் இவ்விருது எனது கவிதைக்குக் கிடைத்த அடையாளம் என்பதற்கப்பால் வேறொன்றுமில்லை. இது எனது முதல் விருது என்பதால் என் உள்ளுணர்வு என்னையறியாமல் சிலவேளைகளில் மகிழ்ந்திருக்கக் கூடும்.

**கேள்வி: இலங்கை அரசினால் வழங்கப் படுகின்ற இந்த விருது அரசினால் சுவீகரிக்கப்பட்ட சம்பூர் நிலம் சார்ந்து அமைந்துள்ளமை ஒரு முரண்நகையாக உள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு பார்த்தீர்கள்?**

**பதில்:** ஈழத்து இலக்கியம் அரசியலோடு பிணைந்தது என்பதிலும் அரசியலையும் இலக்கியத்தையும் ஈழத்தில் பிரிக்கமுடியாது என்பதிலும் எனக்கு நம்பிக்கை அதிகம். இதே போக்கு என் கவிதைகளில் வெளிப்படத் தவறவில்லை. எனது பிரச்சினைகளை சொல்ல முற்படுகிறபோது அதற்கு காரணமானவர்களை அடையாளப்படுத்துவது தவிர்க்கமுடியாது. எனது துன்பத்துக்கு இலங்கை அரசு காரணம் எனில் அதை நான் சொல்லியேயாக வேண்டும். அதை அங்கீகரிப்பதும் ஏற்றுக்கொள்வதும் அவர்கள் பொறுப்பு. அதற்காக இலக்கியத்தை பொய்மைப்படுத்திவிட முடியாது. யாருக்கும் அஞ்சுவதால் உண்மை இறக்கநேரிடும். இதன் அடிப்படையில்தான் எனது கவிதைகளும் அமைந்தன.

சம்பூர் மக்கள் 2006 இல் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் அந்த நிலம் சுவீகரிக்கப்பட்டு பொருளாதார வர்த்தக வலயமாக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அவர்களுக்கு சொந்த நிலம் கிடைக்கவில்லை. அவர்கள் அகதி முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அதே அகதி முகாமில்தான் வசிக்கிறேன். அதனால் எனது கவிதைகள் அந்த அவல வாழ்வை சுற்றியே பிறக்கின்றன. அது ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களின் துயரையே பாடுகிறது. 'நிலம் பிரிந்தவனின்' கவிதை என்னும் எனது தொகுப்பிலும் இத்தகைய கவிதைகளே அதிகம் உள்ளன. அந்த கவிதைகள் யாவும் அகதிக் கூடாரத்தில் இருந்து என்னால் எழுதப்பட்டவை.

இதற்கு அரச இலக்கிய விருது கிடைத்தமை என்பது நியாயம் இன்னும் செத்துவிடவில்லை என்பதைக் காட்டுகிறது. தமிழ் நூல்களுக்கான விருதை தீர்மானிப்பவர்கள் தமிழறிஞர்களாக இருந்ததால் இது சாத்தியமாகியதோ தெரியவில்லை. தமிழர் இலக்கியம் சில நேரங்களில் காப்பாற்றப்படுகிறது என எண்ணிக்கொள்ளலாம். மற்றப்படி இவ்விருது சம்பூர் பிரச்சினையை அரசு ஏற்றுக்கொண்டதற்கான அடையாளமாகவோ அல்லது அவலத்தை அரசு பொறுப்பேற்றுவிட்டது என்பதற்கு சாட்சியாகவோ என்னால் பார்க்க முடியவில்லை. இலக்கியத்துக்கூடாக பிரச்சினைகளை அணுகும் மனோபாவம் இலங்கையில் வளர இன்னும் நீண்ட நாட்கள் எடுக்கலாம்.

**கேள்வி:நிலம் பிரிந்தவனின் கவிதை பிறந்த கதையை சற்று சுருக்கமாகச் சொல்லுங்கள்?**

**பதில்:** நீண்ட கதையிருக்கிறது. நான் அகதியாக அங்குமிங்கும் அலைந்தது போலவே அந்த கவிதைகளும் அலைந்தன. 2009 காலப் பகுதியிலேயே கவிதைகள் புத்தகத்துக்காக தயாராகியிருந்தன. ஆரம்பத்தில் அக்கவிதைத் தொகுப்பை சரிநிகர் வெளியீடாக வெளியிடவே ஏற்பாடாகியிருந்தது. அதற்கான வேலைகளும் கிட்டத்தட்ட முடிந்து போயிருந்தது. இதனை சரிநிகரில் பணியாற்றிய சிவகுமார் அண்ணன் அவர்களே செய்தார். ஆனால் திடீரென அவருக்கு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் அவரை நாட்டை விட்டு புலம்பெயர வைத்தது. அத்தோடு என் கவிதைகளும் காணாமல் போயின.

எனது அகதி வாழ்வினாலும் நெருக்கடியான சூழல்களினாலும் கவிதை தொகுப்பை பற்றி நானும் மறந்துவிட்டேன். நீண்ட நாட்களின் பின்பே அவரின் தொடர்பு கிடைத்திருந்தது. அவருக்கிருந்த நெருக்கடியான சூழலில் நானும் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. இருப்பினும் அவ்வப்போது இது பற்றி நினைவூட்டிக் கொண்டிருந்தேன். அதன் பின் ஒருநாள் அவரிடமிருந்து ஒரு மின்னஞ்சல் வந்தது. அதில் காலச்சுவடு பதிப்பகத்தின் மூலம் கவிதைகளை வெளியிட கதைத்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். அன்று அது எனக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. தொலைந்த எனது குழந்தை மீண்ட பேருவகையில் இருந்தேன்.

நீண்ட நாட்களின் பின் காலச்சுவடு பதிப்பகத்தில் இருந்து என்னை தொடர்பு கொண்டார்கள். நூலை வெளியிடுவது பற்றி உரையாடினார்கள். அதன் பின்பு கவிதை நூல் வெளிவருவது உறுதியாயிற்று. முதலில் அத்தொகுப்புக்கு வாழ்தலுக்கான அவகாசம் என்றே பெயரிட்டிருந்தேன். பின்பு கவிஞர் சேரன் அவர்கள்தான் நிலம் பிரிந்தவனின் கவிதை என்ற தலைப்பை தெரிவுசெய்தார். அந்தப் பெயரே இறுதியில் நிலைத்துவிட்டது.

இந்த தொகுப்பின் பின்னால் பலரின் உழைப்பும் அக்கறையும் இருந்திருக்கிறது. அவர்களின் உதவி இல்லையெனில் இந்த நூல் வெளிவந்திருக்காது. ஏனெனில் நான் வசிக்கும் அகதி முகாம் சூழலில் இவை எனக்கு சாத்தியமில்லை. அதற்காக சிவகுமார் அண்ணன், கவிஞர் சேரன் காலச்சுவடு பதிப்பகம் அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி கூறவேண்டும்.

அதற்குமப்பால் என்னை தன் பிள்ளையைப் போல எண்ணி இவர்களின் தொடர்புகளை எல்லாம் ஏற்படுத்தித்தந்தது. என் வெற்றிகளிலெல்லாம் மகிழ்ந்து இன்றுவரை என்னில் எல்லாமாக இருக்கும் ஜென்னி அம்மாவுக்கு என்றும் நான் நன்றியுடையேன். இப்படி நெருக்கடிகளுக்குள் சிக்கி மீண்டு வந்ததுதான் எனது நிலம்பிரிந்தவனின் கவிதை.

**கேள்வி: கலை கலைக்காக என்றும், அவை எப்போதும் சமூகத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் பலமான வாதங்கள். உள்ளது. உங்கள் 'நிலம் பிரிந்தவனின் கவிதை' ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் இலக்கியப் பதிவு என்றால் மிகையல்ல. உங்களுக்குள் இந்த சமூகப் பார்வை எவ்வாறு உருவானது?**

**பதில்:** சமூகத்தை நமது இலக்கியத்தில் பதிவு செய்ய தவறுவது நாம் வாழும் அச்சமூகத்துக்கு, நாம் செய்கின்ற துரோகமாகவே கருதுகின்றேன். ஒரு படைப்பாளனின் முக்கிய கடமை அவன் சூழலை படைப்புகளில் பிரதிபலிப்பதிலேயே தங்கியிருக்கிறது. அதனால் இலக்கியத்தை சமூகத்தில் இருந்து பிரிக்கமுடியாது. அதிலும் ஈழத்து இலக்கியம் அதன் இனத்தில் இருந்து என்றும் பிரியமுடியாது. பிரியவும் கூடாது. இவ்வாறுதான் நான் இலக்கியத்தை பார்க்கிறேன்.

ஈழப்போராட்டம் பல படைப்பாளிகளைப் பாதித்தது போலவே என்னையும் வெகுவாக பாதித்தது. நான் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் என்னும் கிராமத்தை சேர்ந்தவன். 1982 இல் நான் பிறந்த போதே போராட்டம் ஆரம்பித்துவிட்டது. எனது கிராமமும் அதில் சிக்கத் தவறவில்லை. அடிக்கடி இராணுவத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. சமாதான காலப்பகுதி வரை எவ்வித அடிப்படை வசதிகளுமற்று பொருளாதார தடைகளுக்கு உட்பட்டே இருந்தது. இவ்வாறான சூழல்களில் கண்முன்னே இடம்பெறும் சாவுகளும் அவலங்களும் என்னை வேறு சிந்தனை வட்டத்துள் தள்ளியது. இதன்பின் சமுகப்பிரக்ஞை என்னை பற்றிக்கொண்டது.

அப்போது குறைந்தளவில் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்தேன். 2006 இல் ஏற்பட்ட யுத்தம் சம்பூரில் இருந்தே ஆரம்பித்தது. நாங்கள் முதல் முதல் இடம்பெயர்ந்தோம். இறுதியில் அனைத்தையும் இழந்து மட்டக்களப்புக்கு சென்று அகதி முகாமில் வசித்தோம். இத்தகைய சூழலின் பின் என் கவிதைகள் அந்த மக்களை சுற்றியே எழுந்தன. அவற்றை விடுத்து வேறெதையும் சிந்திக்க முடியாதபடி என்னை அவை ஆட்கொண்டன. இன்றுவரை தீராது அகதி வாழ்வு தொடர்கிறது. அதனால் அந்த மக்களின் குரலாக என் கவிதைகள் வெளிப்படுவது கட்டாயமானது.

**கேள்வி: நீங்கள் யுத்தம் காரணமாக பொருளாதார அபிவிருத்தி காரண்மாக, இயற்கைச் சீற்றம் காரணமாக எனப் பல காரணங்களுக்காக நிலம் பிரிந்தவர். இந்த நிலத்துக்கும் உங்களுக்கும் இடையே ஏற்பட்ட இடைவெளி உங்களில் உங்கள் வாழ்வியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?**

**பதில்:** நிறையவே ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு கணப்பொழுதும் அதன் வலியை நான் மட்டுமல்ல அந்த மக்கள் அனைவரும் உணர்கிறோம். ஆறு வருடங்களுக்கும் மேலாக கூடாரம் மட்டுமே தஞ்சம் என்ற நிலையில் அந்த மக்கள் வாழ்கின்றார்கள். விரும்பி முற்றத்தில் ஒரு பூமரத்தையேனும் நட்டு அழகு பார்க்க முடியாத சாபக்கேடான நிலைதான் நிலவுகிறது. அடிப்படை வசதிகளற்று அன்றாடம் உணவுக்கு படாத பாடுபட்டு வாழவேண்டிய நிலையே தொடர்கின்றது. பிற சமூகத்துடன் ஒப்பிடும்போது ஆறு வருடங்கள் கல்வி பொருளாதாரம் என அனைத்திலும் பின்தங்கியிருப்பதனை உணரமுடிகின்றது. சம்பூர் கிராமத்திலேயே அந்த மக்களின் பொருளதார அவலங்கள் அனைத்தும் தங்கியுள்ளன. அதனால் இன்று அவர்களுக்கு எக்கெதியுமில்லை. எனது சுயவாழ்விலும் நான் நிறைய தாக்கங்களை உணர்கின்றேன். அடிப்படை வசதிகள், பொருளாதார தேவைகள் என நிறையவே சொல்ல முடியும். அந்த வலி அனுபவித்தால் மட்டுமே உணரமுடியும் நிலத்தை அடிப்படையாக கொண்டுதான் ஒரு மனிதனின் வாழ்வு கட்டமைக்கப்படுகிறது. இதனால் நிலம் இல்லாத இடைவெளியை யாராலும் நிரப்பமுடியாது.

**கேள்வி: இளம் கவிஞரான உங்களின் படைப்புலக இலக்கு என்ன? அடுத்த படைப்பு பற்றி பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

**பதில்:** படைப்புலகத்தில் எனது இலக்கு என்று எதுவுமில்லை. சமூகத்தையும் எமது இனத்தையும் தனித்துவங்களையும் பிரதிபலிக்கின்ற நல்ல படைப்புகளை உருவாக்க வேண்டும் என்பது எனது எண்ணம். என்றும் கொள்கைகளை விட்டுக்கொடுக்காது யாரையும் புண்படுத்தாது இலக்கியம் படைக்க வேண்டும். இறுதிவரை எழுதிக்கொண்டே இருக்க வேண்டும். அவை பேசப்படுகின்ற படைப்புகளாக இருக்க வேண்டும். இதைத்தான் இலக்கு என்று சொல்லலாம்.

அடுத்த படைப்பு பற்றி சொல்வதென்றால் கவிதைகள் அடுத்த தொகுப்புக்காக தயாராக உள்ளது. இப்போதிருக்கும் சூழலில் என்னால் தனித்து வெளியிட முடியாது. யாராவது முன்வர வேண்டும். முன்வந்தால் வெளியிட முடியும். இல்லையேல் அதற்கான காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும். அனைத்தையும் காலம் மட்டுமே தீர்மானிக்கிறது.

இதற்கப்பால் நல்லதொரு நாவல் ஒன்றை எழுதவேண்டும். அது எனது கிராமத்தில் இருந்து அந்த மக்களின் அவலத்தை சுமந்து வரவேண்டும் என்ற எண்ணமே இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது. அது நிறைவேறும் என்றே நம்புகின்றேன். என்னை ஊக்கப்படுத்தும் நல்லுள்ளங்களின் உறுதுணை இவற்றையெல்லாம் சாத்தியமாக்கும்.

---

[ 15 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## வதைமுகாமில் ஒரு...

இந்த அலுவலகத்தின் மேல்தளத்தில் தான் நாங்கள் இரகசியமாகத் தங்கப் போகிறோம்.

'ஒருநாள் இங்குவர நேரும்' என்று அப்பா ஏற்கெனவே தீர்மானித்து இருந்ததால் உணவு, படுக்கை என்று பல பொருள்களைச் சேர்த்து வைத்திருந்தார்.

எங்களுடன் அப்பாவின் நண்பர் வான்ட்டான் குடும்பமும், மருத்துவர் ஒருவரும் தங்கினர். மிகச்சிறிய இடத்தில் 8 பேர் வசித்தோம். இப்போது நாங்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறவர்கள். பகல் நேரத்தில் ஜன்னல் திரையை விலக்கிக்கூட வேடிக்கை பார்க்கமுடியாது. அலுவலக நேரத்தில் நாங்கள் எந்த வேலையும் மேலே செய்யக்கூடாது. வேகமாக நடக்கக்கூடாது. பேசக்கூடாது. சிரிக்கக்கூடாது. முக்கியமாக கழிவறையைப் பயன்படுத்தி, தண்ணீரை இறைக்கக் கூடாது.

மொத்தத்தில் நாங்கள் இங்கே இருப்பது அங்கு வேலை செய்யும் சில நண்பர்களைத்தவிர, யாருக்கும் தெரியக்கூடாது. காலை 8 மணிக்குள் எங்கள் வேலைகளை முடித்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் உணவுவேளை வரை காத்திருக்கவேண்டும். அந்த ஒரு மணி நேரத்தில் வேகமாக வேலைகளை முடிக்க வேண்டும். மீண்டும் அமைதி. மாலை 5 மணிக்கு மேல் எங்கள் நாள் ஆரம்பமாகும்.

*(தொடரும்...)*

---

[17 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## அருகில் வந்திருக்கும்...

துவக்கத்தில் இருந்தே அணு உலைக் கான எதிர்ப்பு ஓரளவு இருந்து வந்தாலும், அண்மையில் ஜப்பான் நாட்டில் புக்குஷிமா டா இச்சி அணு ஆலையில் நடந்த அணு உலை விபத்து காரணமாக ஏற்பட்ட விழிப்புணர்வு மற்றும் ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் தங்கள் அணு உலைகளை மூட முடிவெடுக்கும் பின்னணியில் கூடங்குளம் ஊர் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமாரி போன்ற மாவட்ட மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

2011 செப்டம்பர் முதல் தென்னிந்திய தமிழ் நாட்டு மக்கள் உண்ணாவிரதம் உட்பட பல்வேறு மறியல் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். பத்தாயிரம் பேர் முன்னர் உண்ணாவிரதம் இருந்தனர். ஆயிரக்கணக்கானோர் கடலுக்குள் இறங்கி நின்றும் போராட்டம் நடத்தினர். தற்பொழுதும் தொடர் போராட்டம் அங்கே இடம்பெற்றுவருகின்றது.

இதேவேளை இதற்கு முன்னர் இந்தியாவில் இடம்பெற்ற உலகிலேயே பயங்கரமான விஷவாயு விபத்தொன்று பற்றி இங்கே வாசகர்களுக்கு நினைவூட்ட வேண்டும். இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் போபாலில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவுதான் உலகிலேயே பயங்கரமான விஷவாயு விபத்து என்று கருதப்படுகின்றது.

1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 03 ஆம் திகதி இந்தப் பேரழிவு இடம்பெற்றது. நெஞ்சை உறைய வைக்கும் அந்தப் பயங்கர விபத்தில் சுமார் 15 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தார்கள். பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் பார்வையிழந்தார்கள். பல்லாயிரக்கணக்கான கால்நடைகளும் வளர்ப்பு மிருகங்களும் துடிதுடித்து மாண்டு போயின. அங்கவீனமானவர்களும் உடற்கோளாறுகளுக்கு உள்ளானவர்களுமென சுமார் ஐந்து இலட்சம் பேர் இன்றும் நடைப்பிணங்களாக அலைகிறார்கள்.

போபாலில் பூச்சி மருந்து தயாரிக்கும் 'யூனியன் கார்பைட்' என்ற தொழிற்சாலை இயங்கி வந்தது. இந்தத் தொழிற்சாலையில் பூமிக்கு அடியில் 'மெதில் ஐசோ சயனைட்' என்ற பூச்சி மருந்து தயாரிக்கப் பயன்படும் சக்தி வாய்ந்த விஷவாயு சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

3.12.1984 அன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பிந்தி ஒரு மணியளவில் போபால் தொழிற்சாலையில் விஷவாயுவை மூடியிருந்த வால்வு, தொட்டிக்குள் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக உடைந்தது. இதனால் கொஞ்சம் கொஞ்சமாக விஷவாயு கசிந்து வெளியேறியது. சிறிது நேரத்திலேயே அங்கிருந்த அதிகாரிகள் இதனைக் கண்டுபிடித்தார்கள். 40 நிமிட நேரத்தில் கசிவு நிறுத்தப்பட்டதாயினும் அதுவரை கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறிய விஷ வாயுவின் தாக்கம் 40 கிலோமீற்றர் சதுர பரப்பளவைத் தாக்கத் தொடங்கிற்று.

அந்தப் பகுதியில் வசித்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மயக்கம் போட்டு விழுந்து செத்து மடிந்தார்கள். ஆயிரக்கணக்கான விலங்குகளும் துடிதுடித்து இறந்தன. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட சுமார் ஒரு இலட்சம் பேரில் 10 ஆயிரம் பேர் தமது பார்வையை இழந்தார்கள். ஐந்து இலட்சம் பேர் பல்வேறு உடல் கோளாறுகளுக்கு உள்ளாகி நோயாளியாகியுள்ளனர்.

இந்த நிகழ்வு குறித்து அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஊடகங்களுக்குக் கூறியபோது "இப்படிப்பட்ட பயங்கரமான தொழிற்சாலை நகரின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டது மாபெருந்தவறு. அபாயத்தை விளைவிக்கும் இதுபோன்ற தொழிற்சாலைகள் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் அமைக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகச் சட்டங்கள் கொண்டு வரப்படும். விஷ வாயு தாக்கி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் குழந்தைகளைப் பார்த்தேன். அது நெஞ்சை நெகிழ வைக்கும் காட்சி. அந்தக் குழந்தைகள் தங்களது பெற்றோர்களை இழந்து அநாதைகளாக நிற்கிறார்கள்" என்று தெரிவித்திருந்தார்.

இந்தப் பேரழிவை ஏற்படுத்திய விஷவாயுக் கசிவு வழக்கின் தீர்ப்பு 26 ஆண்டுகளுக்குப் பின்னரே வழங்கப்பட்டது. எட்டு குற்றவாளிகளுக்கும் தலா இரண்டு வருட சிறைவாசமே தீர்ப்பாகக் கிடைத்தது. அமெரிக்கரான விஷ வாயுத் தொழிற்சாலையின் அதிபதி வாரன் அண்டர்சன் தப்பித் தலைமறைவாகி அமெரிக்காவில் பதுங்கிவிட்டார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தினூடாகவும், இலங்கை இந்திய மக்கள் பேரழிவுகளைச் சந்திக்க எவரும் இடமளிக்கக் கூடாது.

# காதிலை பூ

## கந்தசாமி




**வணக்கமுங்கோ! எல்லாமும் ஒரே மாதிரியே இருந்திடாது எண்டதை இயற்கை நாக்கு அடிக்கடி நினைவு படுத்துதுங்கோ. இயற்கை என்ன சொல்லுது எண்டதைத்தானுங்கோ மனிசன் புரிஞ்சு கொள்ளுறானில்லை யுங்கோ.**

கொஞ்ச நாளைக்கு முன்னம் மட்டக்களப்பில ஏராளமான மீன்கள் கரைக்கு வருகுதெண்டு ஆளும்பேருமாக கடலில குதிச்சு மீன்பிடிச்சிச்சினமுங்கோ. நிலைமை கொஞ்சம் தீவிரமாகி அலை–யோடு கரைக்கு வந்த மீனை காலாலை தட்டிவிட்டே மீன் பிடிச்சுக் கொண்டு போனவையும் இருக்கினமுங்கோ.

எண்டாலும் சிலபேர் சொல்லிச்சினம் உப்பிடி மீன் ஒதுங்கிறது ஏதோ விபரீதத்துக் குத்தானெண்டும், எதுக்கும் கொஞ்சம் அலேட்டாக இருக்க வேணுமெண்டும் சொல்லிச்சினமுங்கோ. சிலபேர் உப்பிடி வார மீனை சாப்பிடலாமோ, சாப்பிட்டால் ஏதும் நோய்கள் வருமோ எண்டும் பயப் பீதியை கிளப்பிவிட்டிச்சினமுங்கோ.

எது எப்புடி எண்டாலும் மீன்பிடிக்கிற கூட்டத்துக்கு கடலில குறைவு இருக்க வில்லையுங்கோ. பாம்பு கரைக்கு வந்தால் தான் சுனாமிவரும். மீன் வந்தால் என்ன வருமோ தெரியாதே எண்டு நமது வயது போன சைன்டிஷ்ட்டுகளும் கையை விரிச்சிட்டினமுங்கோ.

இப்ப பாத்தியளே நமது கடலிலேயே நீலம்பூ எண்டொரு புயல் உருவாகி தமிழ் நாட்டை மிரட்டிக் கொண்டு இருக்குது எண்டு மூண்டு நாளாக செய்திகள் வந்த வண்ணமிருக்குதுங்கோ.

அது இருக்கிற நிலைமையைப் பார்த்தால் தமிழ் நாட்டுக்குள்ளதான் அழையா விருந்தாளியாக நுழையும் எண்டு சொல்லிச் சினமுங்கோ, எப்பன் இந்தப் பக்கமாகத் திரும்பிச்சுதெண்டால் இலங்கையை பிரிச்சு மேஞ்சிடும் எண்டும் சொல்லிச்சினமுங்கோ.

உந்தச் சூறாவளி மிரட்டிக் கொண்டு இருக்கேக்க காத்தும் மழையுமாக மினி சூறாவளி மாதிரித்தானுங்கோ இலங்கை யிலையும், இந்தியாவிலையும் நிலைமை இருந்திச்சுதுங்கோ. அந்தக் கட்டத்தில செய்திகள் வருகுது எப்புடித் தெரியுமோ, காத்து மழையாலை கடல் தொழிலுக்குப் போகமுடியாமல் மீனவர்கள் இருக்கினமாம் அதாலை நாட்டில மீனுக்கு தட்டுப்பாடாம். எப்புடி நிலைமை தலைகீழாக மாறிப் போயிட்டுது பாத்திங்களோ.

இதனூடாக நான் என்ன சொல்லவாறன் எண்டதைப் புரிஞ்சு கொண்டிருப்பீங்கள். அதாகப்பட்டதுங்கோ. இண்டைக்கு இருக்கிற சூழல்தான் நாளைக்கும் இருக்கும் எண்டதோ, நாம் நினைத்துக் கொண்டிருப்பதுதான் சரியெண்டோ, அது ஒருபோதுமே மாறாது எண்டோ ஒரு நாளும் நம்பக்கூடாதுங்கோ. சிலபேர் பயங்கர வாதத்தை வெற்றி கொண்டுவிட்டோம். ஆகவே எல்லாவற்றையும் வெற்றி கொள்வோம் எண்டும், தாங்கள் நினைக் கிறதை எல்லாம் செய்துவிட்டால் எதிர்காலம் நமது கண்ணசைவுக்கு தலை சாய்த்தபடி சாய்ந்து கிடக்குமெண்டும் கணக்குப் பாக்கினம் போலை இருக்குது எண்டும், இருக்கிற சட்டங்களை நீக்க துடிக்கிறவையளை இந்த நாட்டில இருக்கிற மக்கள் அனைவரும் ஐக்கியமாக வாழ்வதற்கு வகை செய்யும் சட்டமொன்றை நிறைவேற்றமுடியுமோ எண்டும் வாத்தியார் கேட்ட கேள்விகளும் ஒரு நாள் மாறுமுங்கோ.

பொருத்திருப்போமுங்கோ மனிதனை ஏமாற்றலாமுங்கோ, இயற்கையை ஏமாற்றலாமோ. எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு விடை இருக்குதுங்கோ. அதுபோலை வாத்தியாரின்ர உந்தமாதிரிக் கேள்விகளுக்கும் நிச்சயம் விடை கிடைக்குமுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை






ஈயம், தகரம், ஆண்டிமனி மூன்றையும் குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து உருக்கி உருவாக்கிய ஒரு உலோகக் கலவை இது. எழுத்துக்களை வார்ப்பதற்குச் சுலபமாக இருக்கிறது. உறுதியாகவும் மசியைத்தக்க முறையிலும் ஏற்றுக் கொள்ளுகிறது' என்று மகிழ்ந்து போனார் ஜோன்.

இந்த வெற்றிக்குப் பிறகு கட்டன் பர்க் எழுத்துக்களை வார்ப்பதற்கான அச்சுத் தயாரிப்பதிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார். ஒவ்வொரு எழுத்தின் முகத்தையும் வார்ப்பதற்கான அச்சுத் தயாரிப்பது அப்படியொன்றும் சுலபமான காரியமில்லை. அச்சு உருவாகிவிட்டால் பிறகு எழுத்துக்களை அதிலிருந்து வார்த்துக் கொள்ளலாம் சுலபமாக.

இதனிடையே பிரதிகள் எடுக்க அழுத்தும் இயந்திரம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார் ஜோன். அந்தக் காலத்தில் திராட்சையிலிருந்து சாறு வடிக்கவும், சுருக்கம் விழுந்த ஆடைகளை நேர்த்தி செய்யவும், ஒரு வகையான இயந்திரத்தைப் பயன்படுத்திவந்தார்கள்.

சுழற்றினால் மேலிருந்து கீழிறங்கும் ஒரு பலகை. அதனடியில் சமதளமான ஒரு பீடம். இந்த இயந்திரத்தில் தனக்கு ஏற்றபடி சில மாற்றங்களைச் செய்து கொண்டார். பீடத்தில் மசிதடவிய எழுத்துக்களை அடுக்கிவைத்து, அதன்மீது காகிதத்தை மூடி, மேலிருந்து கீழாக இறங்கும் பலகையைக் கொண்டு அதை அழுத்தினால், காகிதத்தில் எழுத்துக்களின் மீதுள்ள மசி, அதன் உருவத்தைப் பதிக்கும்.

இப்படிப்பட்ட ஏற்பாட்டை அமைப்பதற்கு முனைந்திருக்கும்போது கட்டன் பர்க், தம் கூட்டாளிகளை அடிக்கடி விருந்துக்கழைப்பது வழக்கம். அப்படி ஒரு தடவை எல்லாரும் கூடி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு கூட்டாளியான ஆண்ட்ரூ கேட்டான்: ஜோன் நம்முடைய கண்டுபிடிப்பிலிருந்து எப்போது நாம் பணம் சம்பாதிக்கப் போகிறோம்?

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(08.11.2012 தொடக்கம் 14.11.2012 வரை)

### மேடம்

விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர் களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவார்கள். கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகலாம். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்காகப் போட்ட திட்டங் களில் வெற்றிபெறுவீர்கள். யாத்திரையின்போது சம்பந்தம் இல்லாத புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு, அவர்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். நண்பர்களின் உதவிகளால் நீண்டதூர பயணங்களின் மூலம் எதிர்பார்த்து இருந்த காரியங்கள் நிறைவேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. புதிய வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும்.

### இடபம்

மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். பிள்ளை களால் சிற்சில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் அடைவீர்கள். உற்றார், உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளு வீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். வங்கிகளின்மூலமாக நீண்டகாலமாக எதிர் பார்த்து இருந்த பணம் கிடைக்க இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். கண் மற்றும் காதுகளில் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும்.

### மிதுனம்

உற்றார், உறவினர்களின் எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்ட காலமாக வராமல் இருந்த பணம் மற்றும் பொருட்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் வந்துசேரும் காலமாகும். தாயின் உடல் நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச் செலவுகள் வந்துசேரும். குலதெய்வ ஆலய வழிபாடுசெய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பூமி, நிலம் சம்பந்தமான தொழில்கள், தங்கம் வெள்ளி போன்ற நகை வியாபாரிகள், நெருப்புத் தொழில் செய்வோர்கள், காவல்துறை இராணுவம், தீயணைப்பு போன்ற துறை சார்ந்தவர்கள், கேஸ் வெல்டிங் சம்பந்தமான தொழில் செய்வோர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள்.

### கடகம்

வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. வங்கி உதவிகளின்மூலம் புதிய வாகனங்களை வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள். தாய் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். கணவன், மனைவி உறவுகளில் இது நாள் வரையில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். குழந்தைகளின் உடல் நிலை யில் மிகவும் கவனமுடன் இருக்கவும்.

### சிங்கம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தி யோக உயர்வுடன் கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். பொருளாரத்தில் இதுவரையில் இருந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். உடல்நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது.

### கன்னி

பழைய நண்பர்களின் சந்திப்பால் ஒரு சிலருக்கு ஆதாயம் உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிக எச்சரிக்கையாய் பேசி பழகவும். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் பெறக் கூடிய காலமாகும். யாத்திரையின்போது மிகக் கவனமுடன் பயணம் செய்துவருவது நல்லது. சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள். தீர்த்த யாத்திரைசெய்து வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

### துலாம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படும். சமுதாய வளர்ச்சிக்கான விசயங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பெண் சம்பந்தமான காதல் விசயங் களில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. மற்றவர்களை நம்பிப் புதிய கடன்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். உற்றார் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட் செலவுகள் வந்துசேரும். வேலையில்லாத வர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் வாகனங்களை மாற்றிப் புதியன வாங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

### விருச்சிகம்

மாணவர்கள் கல்வி மற்றும் விளை யாட்டுக்களில் கவனமுடன் இருக்கவும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். தந்தை, மகன் உறவுகளில் இதுவரையில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் உடல்நிலையில் முதுகுமூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்வர இருப்பதால் எந்த விஷயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. வீடு, வாகனங்களைப் புதுப்பித்தலுக்காகப் புதிய கடன் வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள்.

### தனுசு

விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் சற்றுக் கவனமுடன் இருப்பது நல்லது. நாட் பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்குவதன் மூலம் மனநிம்மதிக் குறைவு ஏற்படலாம். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்று சேரும் காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். பங்காளி களுடன் சேர்ந்து புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் இதுவரை யில் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவு–கள் குறையும். குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான நீண்டகால முயற்சி களில் வெற்றி பெறுவீர்கள்.

### மகரம்

நீண்ட காலமாப் பிரச்சினைகளில் இருந்து வந்து பூர்வீகச் சொத்துக்கள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் கைக்கு வந்துசேரும். குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். கணவன், மனைவி உறவுகளில் காரணமற்ற சச்சரவுகள் வந்துநீங்கும். சுபகாரிய சம்பந்தமாக வடதிசை யில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள்வர இருப்பதால் கவனமுடன் சென்றுவரவும். வீடு வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் புதிய பொருட்செலவுகள் வந்துசேரலாம். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.

### கும்பம்

நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திரும்பக் கை வந்துசேரும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். குடும்பத்தில் நடைபெற வேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். தந்தை வழிச் சொந்த பந்தங்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லது. உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம்.

### மீனம்

வாகனங்கள் மற்றும் மின்சார பணி களில் ஈடுபடுவோர்கள் மிகக் கவனமுடன் இருக்கவும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் வம்புகளை விலைக்கு வாங்காதீர்கள். தீராத நாட்பட்ட நோய்கள் தீர் வதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவி கள் கிடைக்கும். குழந்தைகளின் மனமகிழ்ச் சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளு வீர்கள். வெகுநாட்களாக வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். மற்றவர்களிடம் இருந்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கக் கூடிய காலமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## பறக்கும் டைனோசர்

**முதன்**முறையாக இறகுகளுடன் கூடிய டையனோசர் இனம் கண்டுபிடிப்பு, கனடாவின் வடதுருவத்துக்கு மேற்கு பகுதியிலேயே இதனை விஞ்ஞானிகள் முதன்முறையாக கண்டுபிடித்துள்ளனர். இதன் பெயர் ஓர்னிதோமிமிட்ஸ் (Ornithomimids) என்பதாகும். இது 75 மில்லியன் வருடங்களுக்கு பழமையானது எனவும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் பறவை இன டையனோசர்களின் எலும்புச் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், இறக்கைகள் மட்டுமல்லாது இறகுடன் கூடிய டையனோசர் இனம் கண்டுபிடிக்கப்பட்டது, இதுவே முதன்முறையாகும்.

இதன் இறக்கைகள் பறப்பதற்கு மட்டுமல்லாது அதன் இனப்பெருக்க காலத்தில் முட்டையை அடைகாக்கவும், குளிரை தாக்குப் பிடிக்கவும் மட்டுமே உதவியதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கு முன்னர் இந்த வகை பறவை டையனோசர்களின் எலும்பு மற்றும் சுவடுகள் சீனாவிலும், ஜேர்மனியிலும் பாறைகளுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



## விநோத நோய்...



இங்கிலாந்தை சேர்ந்த ஜேன் பார்லோ, ஸ்டாபோர்ட்ஷயரில் உள்ள மேரிஹில் உயர்நிலைப் பள்ளியில் உணவுத் தொழில்நுட்ப ஆசிரியையாக இருக்கிறார். 36 வயதாகும் இவருக்கு ஒரு பிரச்சினை உள்ளது. இவருக்கு கோபம் வந்தாலோ அல்லது உணர்ச்சிவசப்பட்டாலோ, அதிர்ச்சி அடைந்தாலோ, பலமாக சிரித்தாலோ, அதீதமாக தர்மசங்கடத்திற்குள்ளானாலோ உடனே தூக்கம்வந்து விடுமாம்.

இது அவரது டீன் ஏஜ் வயதிலிருந்தே இருந்து வருகிறதாம். இந்த பிரச்சினைக்குப் பெயர் நர்கோலெப்சி. இதுபோக அவருக்கு கெட்டபிளெக்ஸி என்ற உடல்நலப் பிரச்சினையும் உள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஜேன் ஒரு சிறந்த ஆசிரியையாக செயற்பட்டு வருகிறாராம். வகுப்பில் பாடம் எடுக்கும்போது சற்றும் பதற்றமாக மாட்டாராம். மாணவ, மாணவியர் சேட்டை செய்தாலும் அவர் அமைதியாக அதை சமாளிப்பாராம்.

## சாண்டி புயலின் கோரக் காட்சி...







## பூனை மனிதன்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தன்னை வித்தியாசமாகக் காட்ட முனைவார்கள். அப்படி முனைந்த ஒருவர் தன்னை பூனைபோன்று ஆக்கியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பூனை மனிதர் என அழைக்கப்படும் டெனிஸ் அவ்னர் என்பவரையே கீழே வீடியோவில் நீங்கள் பார்க்கிறீர்கள்.

14 சத்திரசிகிச்சைகளை முகத்தில் செய்ததன்மூலமாக தனது முகத்தை பூனைக்கு ஒத்தமுகமாக மாற்றியுள்ளார்.

சிலிக்கன் சிகிச்சைமூலம் கன்னங்களைக்கூட வீக்கமடையச்செய்து பூனையின் தோற்றத்தை பெற்றுள்ளார். இப்படியான செயற்பாடுகள்கூட ஒருவகை மனநோயின் வெளிப்பாடு என்று மருத்துவர்கள் கூறுகின்றன.





## தம்பதிகள்...



பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர் கரம்சந்த். இவருக்கும், கதாரி என்பவருக்கும் 1925-ம் ஆண்டு திருமணம் நடந்தது. கரம்சந்த் - கதாரி தம்பதியருக்கு 8 குழந்தைகள் பிறந்தன. அவர்கள் மூலம் இத்தம்பதிக்கு 28 பேரன், பேத்திகள் உள்ளனர்.


பஞ்சாப்பில் இருந்து லண்டனுக்கு குடிபெயர்ந்த இத்தம்பதிகள் கடந்த 87 ஆண்டுகளாக கணவன்- மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள். இதன்மூலம் உலகில் நீண்ட நாட்களாக சேர்ந்து வாழும் தம்பதி என்ற புதிய சாதனையை கரம்சந்த்-கதாரி தம்பதியினர் படைத்துள்ளனர்.

அவர்களது இந்தச் சாதனை விரைவில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற உள்ளது.

கரம்சந்துக்கு தற்போது 107 வயதாகிறது. அவரது மனைவி கதாரிக்கு 100 வயதாகிறது. உலகின் நீண்டநாள் தம்பதியரான இவர்கள் பற்றி லண்டனில் உள்ள பத்திரிகைகள் சிறப்பு செய்திகள் வெளியிட்டுள்ளன.

அவர்கள் தங்கள் வாழ்க்கை வெற்றி பற்றி கூறுகையில், நாங்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமாக இருக்கிறோம். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் ஏற்பட்டதே இல்லை. எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம். அதனால்தான் இவ்வளவு நாட்கள் சேர்ந்துவாழ முடிந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

## அழகோ அழகு!




ஐரோப்பிய நாடுகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதில் முதலிடம் பெறுவது நெதர்லாந்து. அந்த நாட்டின் இயற்கை அழகும் அதனைப் பராமரிக்கும் பாங்கும் பார்ப்பவர்களின் இதயக் கதவு-களைத் தட்டிக் திறக்கும் அதிசயம் வாய்ந்தவை.

நெதர்லாந்து பூக்களுக்கு மட்டுமின்றி இயற்கை அழகுக்கும் பெயர்போன இடமாகும். இங்கு வாலிபி எனும் இடம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளதால் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் இங்கு வருகை தருகின்றனர்.





